# வேதாத்திரி மகரிசியும் மதநல்லிணக்கமும்

முனைவர் பொ. சத்தியபாமா



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# வேதாத்திரி மகரிஷியும் மதநல்லிணக்கமும்

முனைவர் பொ. சத்தியபாமா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை 600 113

வேதாத்திரி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : உலக சமுதாய சேவா சங்கம்)

வரிசை எண் 5 நாள்: 13.02.2014

## நூல் விவரக்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | வேதாத்திரி மகரிஷியும் மதநல்லிணக்கமும் |
| ஆசிரியர் | : | முனைவர் பொ. சத்தியபாமா<br>தமிழ்த் துறைத் தலைவர்<br>மீனாட்சிரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)<br>சென்னை |
| பொதுப் பதிப்பாசிரியர் | : | முனைவர் தி. மகாலட்சுமி<br>ஆய்வு அலுவலர்<br>தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>தரமணி, சென்னை 600 113 |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113<br>தொலைபேசி எண் 044–22542992 |
| வெளியீட்டு எண் | : | 764 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2014 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | 8+96 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 45/– (ரூபாய் நாற்பத்தைந்து மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீசரவணா அச்சகம்<br>148, தம்புத் தெரு<br>சென்னை 600 001 |
| பாடம் | : | மதநல்லிணக்கம் |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் கோ. விசயராகவன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

## அணிந்துரை

அறிவியலும் ஆன்மிகமும் போட்டி போட்டு வளர்ந்துவரும் இன்றைய காலக்கட்டத்தில் மதம் பற்றியும் தெய்வம் பற்றியும் உள்ள கருத்துகளை பெரும்பாலும் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வருவதை உணரமுடிகின்றது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அறிவார்ந்த நிலையிலோ அறிவுக்கு நேர் மாறாகவோ மதத்தைப் பற்றிய கருத்துகளைப் பெற்றுள்ளனர். இந்நிலையில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்காகத் தன் சமூகத் தொண்டையும் ஆன்மிகத் தொண்டையும் செய்து வந்திருக்கின்றார். இவரது படைப்புகளில் மதம் பற்றியக் கோட்பாட்டை அறிவியல் பார்வை கொண்டு தம் கருத்துகளைப் பதிய வைத்துள்ளார். அப்படிப்பட்ட அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் மதநல்லிணக்கம் பற்றிய கருத்துகளைத் தொகுத்துத் தேடிக் கண்டுபிடித்து வசந்த கால இலை உதிர்வதுபோல ஆங்காங்கே இழையோடச் செய்துள்ளார் இந்நூலாசிரியர். இவர் மீனாட்சி மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறையில் துறைத்தலைவராகப் பணியாற்றி வருபவர். எங்கள் நிறுவனத்தோடு (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) நெருங்கிய தொடர்பு கொண்டவர். அப்படிப்பட்ட நூலாசிரியர் முனைவர் பொ. சத்தியபாமா அவர்களது முயற்சியைப் பாராட்டுகின்றேன். இன்னும் பல அரிய கருத்துகளைக் கொண்ட நூல்கள் பல எழுத வேண்டும் என்று அவரை வாழ்த்துகின்றேன்.

**வேதாத்திரி மகரிஷியும் மதநல்லிணக்கமும்** என்ற இந்நூலில் மதம் பற்றிய விளக்கம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் மதம் பற்றிப் பேசினாலே காததூரம் ஓடுகின்றனர். அவரவர் மதம்தான் உலகத்தில் சிறந்தது என்ற எண்ணம் மக்களிடம் பரவலாக இருந்து வருகின்றது. இவ்வெண்ணத்தை அடியோடு நீக்கும் அமைப்பில் இவரது நூலில் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. இன்றைய இளைஞர்களுக்கு ஆன்மிகப் பார்வை வேண்டும். அப்படி அவர்கள் இறையுணர்வு பெற்றிருந்தால் மதநல்லிணக்கம் தோன்றிவிடும் என்று இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றார். அதேசமயம் ‘சமயம்’ மதம் என்பது பலவாக வேண்டாம் உலகத்தில் ஒரே

ஆட்சியும் ஒரே மதமும் வேண்டும் என்ற தம் ஆணித்தரமான கருத்துகளை இந்நூலில் பதிய வைத்துள்ளார். மனித குலத்தில் இறையுணர்வையும் அறஒளி நெறியையும் போதனை வாயிலாகவும் சாதனை வாயிலாகவும் உணர்த்தி மக்களை வழிநடத்தும் அறிஞர் மகரிஷியை இனம்கண்டு அவரது கருத்துகளை இந்நூலில் பறைசாற்றியுள்ளார்.

மதம் அல்லது சமயம் மனிதனுக்கு ஏற்படும் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும் என்ற கருத்தையும் இந்நூலில் காணமுடிகின்றது. உலகில் தோன்றிய மதங்கள் அத்தனையும் என்ன சொல்கின்றன? என்ற கேள்விக்கு இந்நூலில் பதில் பொதிந்து கிடக்கின்றது. மதங்களில் கட்டுப்பாடுகள் இருக்கக் கூடாது. அவரவர் விருப்பம்போல் செயல்புரியும் தன்மை வேண்டும். மனித சமுதாயத்தை மதத்தால் பார்க்காது மனத்தால் பார்க்க வேண்டும் போன்ற கருத்துகள் மனத்தைத் தொடும் கருத்தாக அமைந்துள்ளன. இந்நூல் ஆசிரியர் குறிப்பிட்டதுபோலப் பல மதம் பல கடவுள் ஒழித்து ஒன்றே தெய்வம் ஒரே மதம் என நாமும் கடைப்பிடிப்போம் எனக் கேட்டுக்கொண்டு இந்நூலை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

இந்நூலில் வேதாத்திரிய மதநல்லிணக்கத்தை மகரிஷியின் கருத்துகளை ஆய்ந்து வழங்கியுள்ள நூலாசிரியர் முனைவர் பொ. சத்தியபாமா அவர்களுக்கும், இவ் அறக்கட்டளைப் பொறுப்பாளர் பேரா. முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும் மிக்க நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு பள்ளிகல்வி, தொல்லியல், விளையாட்டு (ம) இளைஞர் நலம், தமிழ் ஆட்சிமொழி (ம) பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.என்.ஆர். சிவபதி அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீசரவணா அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

## ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | முனைவர் பொ. சத்தியபாமா |
| பிறந்ததேதி | : | 17.04.1960 |
| கல்வித் தகுதி | : | எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி |
| பதவியும் நிறுவனமும் | : | தமிழ்துறைத் தலைவர்<br>மீனாட்சி மகளிர் கல்லூரி<br>சென்னை– 24 |
| பிற தகுதிகள் | : | முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்– தேசிய கருத்தரங்கங்களிலும் பன்னாட்டுக் கருத்தரங்கங்கிலும் எழுதியிருத்தல்<br>10க்கும் மேற்பட்ட எம்.பில் ஆய்வாளர்களை உருவாக்கியிருத்தல்<br>தற்பொழுது பி.எச்டி. நெறியாளராக இருந்து வருதல்<br>சென்னை, மீனாட்சி அரிமாசங்கத்தின் துணைத்தலைவராக இருத்தல் |
| பிடித்தமானவை | : | பள்ளி, கல்லூரி நிகழ்ச்சிகளில் பேசுதல் |

# என்னுரை

வாழ்க வளமுடன்

மனிதநேயப் பண்பாட்டையும் ஆன்மநேய இறை வழிபாட்டையும் சமய ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் நன்முயற்சி பழங்காலந்தொட்டே இவ்வுலகில் நடந்துவந்துள்ளது. இருந்த போதிலும் இம்முயற்சிக்கு ஒரு சில ஞானிகளும் அறிஞர்களும் தத்துவப் பெரியோர்களும் தங்களது அரும்பங்கை மனமுவந்து வெளிப்படுத்தியுள்ளனர். அப்படிப்பட்ட மகான்கள் அறிஞர்கள் வரிசையில் நம் அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்.

உலகிற்கே ஆன்மீகத்தோடு அறிவியலையும் கற்றுக் கொடுத்தவர் நம் அருள்தந்தை மகரிஷி. பாரதநாடு பழம்பெரும் நாடு என்றார் பாரதியார். சுவாமி விவேகானந்தரோ பாரதத்தின் புதல்வர்கள் வேதகால ரிசிகளின் வழிவந்தவர்கள் என்றார். இன்று இந்த மேன்மையை அதாவது மதநல்லிணக்கத்தை வேதாத்திரி மகரிஷிமூலம் நாம் பெற்றுள்ளோம். ‘மதம்’ – Religion என்ற சொல்’Re’ - மற்றும் legreeஆகியஇரண்டுசொற்களின் கூட்டு நிலை ஆகும். ஒவ்வொருவரின் இதயத்தையும் பிறருடனும் இறைவனுடனும் இணைத்தல் என்றுபொருள். வடமொழியில் மதத்தை ‘தர்மம்’ என்பர். உலகில் உள்ள அனைவரையும் ஒன்றாக இணைப்பது என்பதுதான் 'தர்மம்' அல்லதுமதத்தின் பொருள். மதத்தை அறிவதற்கு, குறிப்பாக இன்றைய சந்ததியினருக்கு முறையான பயிற்சி சில இடங்களில் சில ஆசிரமங்களில் மட்டுமே கிடைக்கின்றன. மதம் பற்றிப் பேசினாலே சிலர் ஒதுங்குகிறார்கள். வீட்டில் உள்ளவர்களோ வெறும் சடங்குகளையே சமயம், மதம் என்று கருதிச் செல்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும் என்பதற்காகத் தான் அருள்தந்தை தம் படைப்புக்களில் ‘மதநல்லிணக்கத்திற்கு முக்கியத்துவம்’ தருகின்றார்.

மக்களை மதத்தாலும் சாதியாலும் இனத்தாலும் ஒன்றுபடுத்தும் மகத்தான அரிய சக்தியே மதநல்லிணக்கம் ஆகும். இந்நல்லிணக்கம் வெறும் கொள்கைகளோ, சடங்குகளோ வழிபாட்டுத் தலங்களோ சமயச் சின்னங்களோ அல்ல. மாறாக

மனிதநேயப் பண்பை வளர்ப்பதில்தான் அமைந்துள்ளது. எனவே மதங்களிடையே காணப்படும் புறவேறுபாடுகளைப் பொருட்படுத்தாது மனித மதஒற்றுமையை வளர்த்தல் அவசியம் என்பதால் நம் அருள்தந்தை வேதாத்திரி படைப்புகளை எடுத்துக் கொண்டேன். இப்படைப்புகளின்வழி எங்கெல்லாம் சமயஒற்றுமை நிலவுகிறதோ அவற்றையெல்லாம் தொகுத்து வேதாத்திரி படைப்புகள் வழிநின்று அவர் கருத்தை மக்களுக்கு இனம் காட்டும் முயற்சியே இந்நூல். தேவைப்பட்ட இடங்களில் சுவாமி விவேகானந்தரையும் வள்ளுவரையும், வள்ளலாரையும் பாரதியாரையும் எடுத்துக்கொண்டுள்ளேன்.

**வேதாத்திரி மகரிஷியும் மதநல்லிணக்கமும்** என்ற இந்நூலை எழுதத் தொடங்குவதற்கு முதல்காரணமாக அமைந்த என் குருவாக அமைந்த சீரடிசாய்பாபாவிற்கு என் முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து வேதாத்திரி அறக்கட்டளை சார்பில் எழுதுவதற்கு அனுமதி அளித்த இயக்குனர் மதிப்பிற்குரிய முனைவர் கோ.விஜயராகவன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலுக்கு மூலகாரணமே எனது சகோதிரியும் தோழியுமான திருமதி முனைவர் .மகாலட்சுமி அவர்கள்தான். அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன், மேலும் என்னைத் தன்னம்பிக்கையுடன் செயல்பட ஆலோசனைகளைத் தந்த என் கல்லூரிச் செயலர் மதிப்பிற்குரிய முனைவர் கே.எஸ். லட்சுமி அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள் பல. இறுதியாக இந்நூலின் குறைதவிர்த்து என் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

வாழ்க வளமுடன்

**பொ. சத்தியபாமா**

# வேதாத்திரி மகரிஷியும் மதநல்லிணக்கமும்

## முன்னுரை

அறிவியலும் ஆன்மிகமும் போட்டியிட்டு வளர்ந்து வரும் இன்றைய காலக்கட்டத்தில் 'மதம்' பற்றியும் தெய்வம் பற்றியும் உள்ள கருத்துகள் பெரும்பாலும் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வருவதை உணர முடிகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அறிவார்ந்த நிலையிலோ, அறிவுக்கு நேர்மாறாகவோ மதத்தைப் பற்றிய கருத்துகளைப் பெற்றுள்ளனர். இந்த அடிப்படையில்தான் மனிதன் கோயில்களை எழுப்பி, அதில் வழிபாடு நடத்தினான். பல்வேறு உருவங்களை உருவாக்கி உருவ வழிபாட்டிற்கு வழிவகுத்தான். மூடநம்பிக்கைளுடன் சடங்கு, சம்பிரதாயங்களையும் வழக்காறுகளையும் கடைப்பிடித்தான். இந்த நிலைமையில்தான் வழிதவறிப் போகும் மனிதனை மீட்டெடுக்கப் பல மகான்கள் காலந்தோறும் தோன்றிப் பணியாற்றி வருகின்றனர். அன்புநெறியை ஆண்டவனாகக் கையாண்டு தவவாழ்க்கை மேற்கொண்டனர்.

இந்த மகான்கள் வரிசையில் நம் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி இடம்பெறுகிறார். இவர் மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டு மதக்கொள்கையை வகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆன்மிகத்தை அறிவியல் அடிப்படையில் சிந்தித்தார். மதத்தை அறிவியலோடு இணைத்துப் பார்க்கும் தன்மையை இவர் படைப்புகளில் காணமுடிகிறது. எனவே இவரது மதநல்லிணக்கத்தை இவரது படைப்பின்வழி காண்பதே நோக்கமாக உள்ளது.

## மதம் (சொற்பொருள் விளக்கம்)

மதத்தின் விளக்கத்தை அறிந்து கொண்டால்தான் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷியின் மதக்கொள்கையைத் தெரிந்துகொள்ள முடியும். எனவே முதலில் பொருள் விளக்கத்தைக் காணலாம்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நூல்களில் மட்டுமே 'மதம்' என்னுஞ் சொல் கடவுளைப் பற்றியாதல், உயிரைப் பற்றியாதல்,

உலகத்தைப் பற்றியாதல், ஒழுக்கத்தைப் பற்றியாதல் என மக்கட் குழுவினர் கொண்ட கொள்கைக்குப் பெயராய்த் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டு வந்தது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு அதாவது இன்றைக்கு ஆயிரத்தெழுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட நூல்களில் 'மதம்' என்னுஞ்சொல் 'கொள்கை' என்னும் பொருளில் வருதலைக் காணமுடிகிறது. புறநானூறு, பரிபாடல், பத்துப்பாட்டு முதலான பழைய இலக்கியங்களில் 'மதம்' என்னும் சொல் வலிமை, செருக்கு, அறியாமை, அழகு முதலான பொருள்களில் வருகிறதே அன்றி, 'கொள்கை' என்னும் பொருளில் வரவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மணிமேகலையிலும்கூடச் 'சமயம்' என்னும் சொல் வந்திருக்கின்றதே யன்றி அதற்கு ஈடான 'மதம்' என்னும் சொல் வரவில்லை. கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த பாடல்களில் 'மதம்' என்னும் சொல் 'கொள்கை' என்னும் பொருளில் இன்றுவரை வழங்கி வருகின்றது.

இடைப்பட்ட காலத்தில் எழுந்த நன்னூல் முதலான இலக்கண நூல்களும் 'மதம்' என்னும் சொல்லைக் 'கொள்கை' என்னும் பொருளில் வழங்கி வருகின்றன. இதனை,

எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேற்கொண்டு களைவே
தாஅனாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
பிறர் நூற்குற்றங் காட்டல் எனைப்
பிறிதொடுபடா அன்தன்மதங்கொளவே (நன் 11)

என்னும் நூற்பாவினின்று ஒரு பொருள் அல்லது நெறிமுறை (Principle) கொள்கை இன்னவாறிருத்தல் வேண்டுமென்று மதித்துக் கொள்வதே 'மதம்' என்னும் சமயம். இது மதமென்றும் பெயர் பெற்றது என அறியலாம்.

எனவே மேற்கூறிய 'மதம்' என்னும் சொல் வேதாத்திரியத்தில் அவர் படைப்புக்களில் கொள்கையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளதை அவர் நூல்களின்வழி அறிந்துகொள்ள முடிகின்றது. மதம், சமயம் என்னும் இருசொல்லும் மகரிஷி நூல்களில் ஒரு பொருளனவாயினும் தம்முள் நுண்பொருள் வேறுபாடுடையன. ஒரு தெய்வத்தை அல்லது இறைவனை மதித்து வழிபடுவது மதம். இறைவனை இம்மையிலேனும் மறுமையிலேனும் அடைவதற்குச் சமைவது சமயம். எனவே மகரிஷி கூறுவது மதத்திற்கும் சமயத்திற்கும் ஒழுக்கமே மிக வேண்டும் என்கிறார். இறை உணர்விலும் மதத்தைக் காணலாம் என்கிறார். அதாவது இறைவனை அடையப் பல கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்கிறார்.

## மதநல்லிணக்கம்

மனிதனுக்குத் தேவை மதநல்லிணக்கம். மதவெறியை நீக்கினால் மனிதன் புதுமையடைவான். இது மகரிஷியின் கொள்கை ஆகும். இதனால் நாடு புதுவாழ்வு அடையும். 'மதம்' என்பதையே மனிதன் தூக்கியெறிய வேண்டும். ஆண்டவனுக்கே அர்த்தம் புரியாத, அறியாத ஒன்றை மனிதன் தனக்குள் ஏற்படுத்திக் கொண்டு கெட்டழிவதை உடனே நிறுத்த வேண்டும். மனிதன் ஆண்டவனின் பெயரைக் கூறிக்கொண்டு பல தவறுகளைச் செய்கிறான். மனிதனுக்குரிய கவலை கடவுளை எப்படிக் காப்பாற்றுவது என்பதே. இதனால் தமக்குள் பல மதங்களையும் மதக்கலவரங்களையும் ஏற்படுத்திக் கொண்டு, பல உயிர்களை அழிக்கின்றான் என்று அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி தம் படைப்புகளில் மதநல்லிணக்கம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

## இறையுணர்வில் மதம்

மனிதகுலத்தில் இறையுணர்வையும் அற ஒளிநெறியையும் போதனைமூலமாகவும் சாதனைமூலமாகவும் உணர்த்தி மக்களை வழிநடத்தும் அறிஞர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டு நடத்தப்படும் தெய்வீக ஒழுக்க நிலையங்களே மதங்களைப் போதிக்கும் மடங்கள் எனப்படுகின்றன. மடாதிபதியாக விளங்கும் ஒவ்வொருவரும் இறைநிலை உணர்ந்தவராகவும், அறநெறி வாழ்க்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். இன்று பக்தியோடு மதத்தைப் பாராட்டிக் கடவுளை மறந்து விடுகிறார்கள். இறைநிலைக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகளை மறந்து விடுகிறார்கள். இறைநிலைக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகளை மறந்துவிட்டுச் சடங்குகளையும் மதங்களின் பெருமை களையும் பேசி வருவதால் பயன் இல்லை என்கிறார் மகரிஷி. எனவே எல்லாச் சமயத் தலைவர்களும் ஒன்று கூடி மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எல்லாம் வல்ல இறைநிலையைப் பற்றிய தெளிவான பொதுக்கருத்தை உருவாக்கவேண்டும் என்றுதான் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி இறைநிலையில் மதம் பற்றிப் பேசுகிறார்.

> உலகெங்கும் வாழ்மக்கட்கெல்லாம்
> ஒரேதெய்வம் சுத்தவெளி, உயர்
> அருட் பேராற்றல் சுத்த சன்மார்க்கம் (மகரிஷி)

என்று ஒரே தெய்வம் பற்றிப் பேசுகிறார். இதேபோன்று வள்ளலாரும் மனிதனுக்கு மதம் தேவையில்லை என்கிறார். அவரும் சுத்த சன்மார்க்கம் பற்றிப் பேசுகிறார்.

ஆதலால் பல மதங்கள் பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மைப் பொருள் ஒன்றைத் தேர்ந்திட வேண்டும் என்று மகரிஷி குறிப்பிடுகின்றார். பல மதங்களை ஒன்று சேர்த்து அவற்றை ஒரே மதமாக ஆக்கும்

கொள்கையை வேதாத்திரி மகரிஷி வலியுறுத்துகிறார். உலகம் அனைத்தும் ஒரே கடவுள், ஒரே அறநெறிமுறை என்று உலகப் பொதுவான ஒரு சமயத்தை உருவாக்க வேண்டும் என்கிறார். உலகில் மதங்களின் இடையே ஏற்பட்ட பகை, பிணக்கு, போர்கள் எவ்வளவு சீரழிவை உயிரிழப்பை, பொருள் இழப்பை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதைச் சரித்திரங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எனவே மதநல்லிணக்கம் பெற ஒரு மனிதன் இறைஉணர்வுமூலமாகப் பெற முயலவேணடும் என அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகின்றார்.

பல மதங்கள், பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல் பற்றிய திட்டத்தை மகரிஷி கூறுகிறார்.

> *மதங்கள் மூலம் மனிதகுலம் பிரிவு பட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது என்கிறார். அதனால் இதுவரையில் ஏற்பட்ட வாழ்க்கைச் சிக்கல்கள், பகைமை, போர்கள் இவற்றைக் கணக்கிடவே முடியாது என்கிறார். இந்த நிலைமை நீடிக்க வேண்டுமா? என வினா எழுப்புகிறார். வினாவிற்கு விடையும் பகர்கிறார். மனித இனத்திற்கு ஒரே மதம் போதும் என்கிறார். மதம் என்றால் என்ன? மக்கள் வாழ்வு அறிவு சார்ந்ததாக இயற்கை அதாவது அறிவியல் நியதிகளை அறிந்ததாக இருக்க வேண்டும் என்கிறார். இதற்கு எல்லாம் வல்ல இறைநிலையை உள்ளது உள்ளவாறு உண்மையான தெளிவோடு மனிதன் உணர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார்.* *(பல மதங்கள் பல கடவுள்)*

எந்தச் சமயமானாலும் எந்தக் காலத்தில் தோன்றிய மதமானாலும் இன்றுவரை வளர்ந்த நூற்றுக்கணக்கான மதங்கள் பெயர் வேறு வேறாக மாறியிருந்தாலும், இனி ஒரு மதம் வருமேயானாலும் இறைவழிபாடும் உயிர் வழிபாடும் தான் இருக்கும். இல்லை என்றால் மதத்திற்கு வேலையே இல்லை எனலாம். பண்படுத்தத் தோன்றிய மதம் புண்படுத்தப் பயன்பட்டுக் கொண்டிருப்பதும் மனித சமூகத்தைப் பண்படுத்தத் தோன்றியவர்கள் இன்று அதையே ஆயுதமாக வைத்துப் புண்படுத்திக் கொண்டிருப்பதும் கண்கூடாகப் பார்க்கிறோம். இவை மாறுவதற்குத்தான் மகரிஷி மதமே வேண்டாம் என்று தன் ஆன்மிகச் சிந்தனையால் வாதிடுகின்றார்.

## மதக்கோட்பாடுகளும் மகரிஷியும்

மனித வாழ்க்கையில் இன்று தவிர்க்க முடியாத காரணிகளுள் ஒன்று மதம். தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளப் பின்பற்றும் ஒருவகைப் பண்பாடே, மரபே மதம் ஆகும். இதனைத் தன்படைப்பில் மகரிஷி அழகாக எடுத்துரைக்கின்றார். மனிதனைப் பண்படுத்துவது மதம் என்ற நிலையில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அறிவை ஒன்றி அறிவில் நிறுத்தி
அறிவையே அறிய ஆழ்ந்து ஆழ்ந்து
பொறிபுலன் அடக்கிப் பொறுமையடைந்து
ஒன்றி ஒன்றி ஒருவனாய் நின்று
உட்புறம் நோக்கி உணர்ந்து முடிவில்
உருவ மனைத்திலும் ஊடே நிறைந்த
அருவநிலையும் அவ்வவ் வுருவின்
அமைப்புச் சிறப்பும் இயக்கமுமொப்ப
பேரறிவாகிய பிம்பமே மனிதன்."

(மகரிஷி: மதமும் மனிதனும், ப. 17)

இவ்வாறு மனிதவாழ்வு இயற்கை பேராற்றலுடன் தொடர்புடைய தாகவே அமைந்திருப்பதையும் அணு பிரபஞ்சத்திலிருந்து தனித்து இயங்காமலிருப்பதையும் அறிவியல்கண் கொண்டு மகரிஷி நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

மதத்திற்கு எந்தக் கடவுளின் பெயரும் கிடையாது. அவ்வக்காலங்களில் அந்தந்த இடங்களில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் மதக்கருத்துகளைத் தொகுத்தனர். அவர்களின் பெயரால்தான் மதங்கள் வழங்கப்படுகின்றன. மதங்கள் இல்லாத மதத்தைப் பின்பற்றாத மனிதன் வாழ்வு சீர்மைபெற்று அமைய முடியாது. உலகில் உள்ளது ஒரே மதம் தான் என்பது மகரிஷியின் கருத்து ஆகும்.

மதம்

இறைவழிபாடு — அறநெறி

நீண்டகாலமாக உலக மதங்கள் அனைத்திற்கும் இறைவழிபாடு, அறநெறி என்ற இரண்டு கோட்பாடுகளே பொதுவானவையாக இருந்திருக்கின்றன. எனவே இவ்விரண்டையும் கடைப்பிடிப்பதே மதம் ஆகும். மதத்தின் அடிப்படையான இறைநிலை என்பது உருவமற்ற ஆற்றலாகவே இருப்பதால் இது எல்லாப் பொருள்களிலும் இடங்களிலும் இருக்கிறது. ஒரே ஆற்றலே பல பரிணாமங்களாகச் செயல்படுகிறது. பொருட்களின் ஊடே நிரம்பி அதற்கு ஏற்றவாறு இயக்கச் சிறப்புகளையும் விளைவுகளையும் அளித்துக் கொண்டே இருக்கிறது. இதனைக் காலம், வேகம், தூரம், பருமன் என்னும் நான்கு கணக்குகளுக்கு உட்படுத்தி வரையறை காண வேண்டியது அவசியம் என்கிறார் மகரிஷி. காரணம் எல்லா மதங்களுக்கும் உட்கருத்து மேற்குறிப்பிட்ட நான்கு வளங்களும் ஒன்றுபட்ட பெருவலி என்பதாகும்.

மகரிஷியின் மதம் பற்றிய இக்கோட்பாட்டுக் கருத்துகள் மனித இனத்தின் வளர்ச்சிக்கு உதவும், அறிவுவயப்பட்ட மதத்தினை அடையாளம் காட்டுவதாக அமைகின்றன எனலாம். மதம் என்பது

வாழ்க்கை விளக்கம் தரும் போதனைகளைக் கொண்டது. இம்மத போதனைகளையும் சாதனைகளையும் இருபடிகளாகப் பிரிக்கிறார் வேதாத்திரி மகரிஷி.

போதனைகளும் சாதனைகளும்

பக்திவழி | ஞானவழி

இந்தப் பிரிவை உணர்த்துவதுபோன்று பக்தி வழியும் ஞானவழியும் இரண்டு படிகளாகப் பிரித்துப் பக்தி வழியில் வாழ்க்கையின் அடிப்படையை உணர்ந்து தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் பணிகளைச் செய்கின்றன. அவை மனித வாழ்க்கைக்கு மத நல்லிணக்கத்திற்கு தேவையாக உள்ளன எனலாம். எனவே இறை உணர்வைப் பரப்பும் நோக்கிலே மதம் உருவானது என்று கூறலாம்.

பெரியோர்களும் மதகுருமார்களும் மடாதிபதிகளும் மதத்தின் வழியாக இறைஉணர்வைப் பரப்புவதையே தம் பணியாகக்கொண்டு செயலாற்றினர். அதற்காகவே மதத்தைத் தோற்றுவித்தனர். அதனால் இன்று அவர்களும் அவர்களின் பணிகளும் வேறு பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. இதனை உணர்ந்த நம் மகரிஷி பொறுப்பு உணர்ச்சியுடன் அறிவியல்பூர்வமாக இறைநிலையை எடுத்துக் கூறி இறை உணர்வைப் பரப்ப முயற்சிக்கிறார். இதனால் மனிதமனம் மதநல்லிணக்கத்திற்கு வழிவகுக்கக்கூடும் என்கிறார். மேலும் மதமும் தெய்வமும் பற்றிக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

> *இதுவரை ஒன்றுமே அறியாத மனிதகுலத்தில் கடவுள் என்ற நம்பிக்கையில் அச்சம் தோன்றியது. இந்த நம்பிக்கைச் சிறப்படைந்து ஆங்காங்கு மதங்களாக உருவாயிற்று. தவறுகள் செய்யாமலும் துன்பம் கொடுக்காமலும் பாதுகாக்கும் பொருட்டு பேரறிஞர்கள் பொதுவாக மனித குலத்திற்குக் காட்டியுள்ள வாழ்க்கை நெறியே 'மதம்' என்பதாகும். மக்கள் மதங்களுக்குத் தலைவர்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். மதத் தலைவர்களும் இறையுணர்வை ஏற்படுத்திக் குற்றம் செய்யக்கூடாது என்ற அறநெறியையும் உணர்த்தி வந்தார்கள். மனித குலத்திற்கு வாழ்வழிகாட்டியாக அமைந்த ஒரு நல்வழி மதம் ஆகும்.*

என்று ஞானக்களஞ்சியம் என்ற நூலில் மதம் பற்றிக் குறிப்பிடுகின்றார்

மதமும் தெய்வமும்

> மனித வாழ்வின் வளம் பெருக்கி நலம் காத்து
> துன்பம் நீக்கி இன்பத்தை அனுபவித்து அறிவின்
> ஒன்றிணைந்த பயிற்சிதான் மதம்

(மதமும் மனிதனும், மகரிஷி, ப. 24)

என்று தனது சமூகவியலும் இறையியலும் என்னும் இதை உணராத மனிதனால் மதங்கள் பெருகின. இன்னும் உலகில் எத்தனை மதமுண்டோ அதனிலும் மிகுதியான தெய்வங்கள் உண்டு. தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படும் 'மதம்' ஒன்று கூட இல்லை என்கிறார். தெய்வம் என்ற பேராற்றலைச் சிதைத்துப் பல தெய்வங்களாக்கிவிட்டோம். ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றிய நம்பிக்கையும் கொண்டு மனித இனம் பிளவுபட்டுவிட்டது. மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும் என்கிறார் மகரிஷி.

மதத்திற்கு அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்றுபோதும். தெய்வநிலை மிக உயர்ந்தது. அது சிறப்புடையது. மதிப்புடையது என்பது உண்மைதான் என்று தந்தை விளக்கம் அளிக்கிறார். இப்பொழுது அது காந்த ஆற்றல்தான் என்று உணரும்பொழுது, மெய்ப்பொருளின் ஆழத்திற்கு மனிதன் அறிவைத் திரட்டிச் செல்கிறான். இந்த உண்மை விளக்கத்தைப் பரவலாக்கி, மனிதகுல வாழ்க்கையில் பண்பாட்டின் சிற்பமாக அமைந்தால் அன்றோ? மனிதகுலச் சரித்திரம் மாறத் தொடங்கும் என்கிறார். ஒரே கடவுள் ஒரே அறநெறிமுறை என்ற உலகம் பொதுவான ஒரு மதத்தை உருவாக்கிக் கொள்ளலாம். மதம் என்பது மனிதனை நெறிப்படுத்த வேண்டும். மனிதன் படைத்த மதத்தின் பெயரால் இன்று மதவெறி கொண்டு ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டு அழிந்து போகிறார்கள். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றும் நம் அருள்தந்தை மகரிஷி கூறுகிறார். திருமூலர் கருத்தும் இதுவே, எனவே மகரிஷி ஓர் இறைக்கோட்பாட்டினைப் போற்றிச் சமயச் சிக்கலுக்குத் தீர்வு காணுகிறார். இதற்குச் சமாதானமும் கூறிச்செல்கிறார்.

> எண்ணிறந்த மதங்கள் உண்டு மனிதருக்கு
> எனினும் தெய்வம் என்பது ஒன்றேயாகும்
>
> (மதமும் மனிதனும், மகரிஷி, ப. 21)

உலகச் சமயச் சண்டைகளுக்குச் சமாதானம் கூறுவதை அவர் படைப்புகளில் காணமுடிகிறது.

## மதத்தில் சிந்தனை

மதம் அல்லது சமயம் மனிதனுக்கான வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும். மாறாக மதமே மனிதனுக்கு ஒரு பிரச்சினையாக ஆகிவிடக் கூடாது என்கிறார் மகரிஷி. 'மதம்' என்பது மனித வாழ்வுக்குப் பயன்படுவதற்கு என்றே உருவானது. மதம், தருமத்தையும் நீதி நேர்மையையும் ஒழுக்கத்தையும் கற்பிக்கின்றது என்றால் அதற்குக் காவல்துறை, நீதித்துறைத் தேவையில்லை என்கிறார். எனவே மனிதனுக்குப் பல மதம் தேவையா? என்ற கேள்விக்குப் பல சிந்தனையை மகரிஷி நம்முன் வைக்கிறார். அறிவியல் வளர்ந்துவரும் இந்நாளில் மெய்யான ஞானத்தையும் நல்லவற்றையும் மனிதன் எடுத்துக்கொண்டு பொய்யான ஞானத்தைத் தரும் மதத்தைவிட்டு ஒழிக்கவேண்டும் என்கிறார்.

*மனிதனுக்கு இனி ஒருமதம் போதும் மதத்திற்கு*
*அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்றுபோதும்*

என மதத்தின் நிலையை, மக்கள் உணர வேண்டும் என்கிறார். மக்களைத் தம் கருத்துகள் மூலமும் உணர வைக்கிறார். எனினும் மதம் என்பது ஒரு முக்கியமான வாழ்க்கை என்கிறார். இதற்கு இவர் கூறும் விளக்கம் பொருத்தமுடையதாகவும் உள்ளது.

**வாழ்க்கை ஒழுக்கங்களைத் தொகுத்தவர்கள்**
**பெயர்களைக் கொண்டுதான் மதங்களின்**
**பெயர்கள் வழங்கப் பெறுகின்றன.**

(ஞானக்களஞ்சியம் (தொகுதி - 1, மகரிஷி, ப. 280)

எனவே அனைத்து மதங்களும் கூறுவது ஒன்றுதான். பெயரால் பிரிவினையையும் வெறுப்பையும் விதைக்காமல் மக்களிடையே ஒற்றுமையையும் அன்பையும் பரப்ப வேண்டும் என்பதே வேதாத்திரி காட்டும் மதச்சிந்தனை ஆகும்.

**"எம் மதத்தும் கடவுள் குறிப்பு உண்டு.**
**எண்ணி, வணக்கம் செலுத்தும் முறைகளுக்கு**
**நம்மறிவைப் புலன்கள் தமைப் புண்படுத்தி**
**நல்வாழ்வைத் தரும் வழிகள் இவைகள் ஆகும்."**

என்று தம் ஞானக்களஞ்சியத்தில் குறிப்பிடுகிறார்.

எந்தக் காலத்தில் தோன்றிய மதமாக இருந்தாலும் அண்மையில் உருவாக்கப்பட்ட மதமாக இருந்தாலும் சரி, மதங்களில் இறைச்சிந்தனை அறநெறி என்ற இவ்விரண்டு தத்துவங்கள்தான் அடிப்படையாக இருந்திருக்கின்றன. இனியும் இருக்கும். மதம் என்பது உலகில் ஒன்றுக்கு மேல் இல்லை. இடத்தாலும் காலத்தாலும் சிலமாற்றங்கள் சீர்திருத்தங்கள் மனித வாழ்வில் தேவைப்பட்டன. அந்தந்த காலத்திலும் இடத்திலும் தோன்றி வாழ்ந்த பெரியோர்கள் மனிதனுக்கேற்ற வாழ்க்கைநெறி என்ற போதனைகளை ஆங்காங்கே அருளினார்கள் என ஞானக்களஞ்சியத்தில் மதத்தில் இரண்டு நெறிகள் இருப்பதையும் கோடிட்டுக் காட்டி உள்ளார்.

### மதத்தில் இரண்டு நெறிகள்

உலகத்தில் தோன்றிய மதங்கள் எண்ணிறந்தன. இதுவரையில் உலகில் தோன்றிய மதங்களில் இறைவழிபாடு என்ற முறையில் இயற்கையை மதித்து வாழும் பண்பாடும் தோன்றி வந்துள்ளன. அத்துடன் தன்னோடு உலகில் பிறந்து வாழும் அனைவரோடும் ஒத்தும், உதவியும் வாழும் அறநெறிகள் முக்கியமான போதனைகளாக உள்ளன. காலத்தாலும் இடத்தாலும் மொழியாலும் மதபோதனைகளிலோ, சாதனைகளிலோ சிலசில மாற்றங்கள், வேறுபாடுகள் இருந்து

கொண்டுதான் இருக்கின்றன. இருந்தபொழுதிலும் ஆழ்ந்து சிந்தித்தோமானால் இறை வழிபாடு, அறநெறி என்ற இரண்டு கருத்துகள்தான் எல்லா மதங்களுக்கும் பொதுவான அடிப்படை நோக்கங்களாக இருப்பதைக் காணமுடிகிறது என்று மகரிஷி கூறுகிறார்.

மற்ற உயிரினங்களைவிட மனித இனத்திற்கு வாழ்க்கையில் பொறுப்பு அதிகம் உண்டு. இயற்கை வளங்களை அறிவின் கூர்மையைக் கொண்டும் கைத்திறன் கொண்டும் உருமாற்றி, அழகுபடுத்தி வாழ்வின் வளங்களாகத் துய்த்து மனிதன் வாழவேண்டியுள்ளது. ஒருவன் உற்பத்தி செய்யும் பொருட்கள் சமுதாயத்தில் பலருக்கும் பலர் உற்பத்தி செய்யும் பொருட்கள் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பரவி வாழ்வு வளம்பெற்று வருகின்ற உண்மையினை அனைவரும் அறிவார்கள். இதனால் சமுதாயக் கூட்டும் இனிமையான இனநட்பும் மனிதஇன வாழ்வுக்கு இன்றியமையாதனவாக உள்ளன.

மேலும் எல்லா மூலப்பொருட்களும் இயற்கையின் பரிணாம நியதியினால் உற்பத்தி ஆகின்றன. அவற்றை வாழ்க்கைப் பொருட்களாகவும் துன்பம் தராத முறையில் அளவுமுறை தேர்ந்த அறிவோடு அனுபவிக்கவும் இயற்கைத் தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டியிருக்கின்றது. இயற்கைத் தத்துவத்தை உணர்ந்துகொண்டு அதன் இயக்க நியதிக்கு முரண்படாது வாழும் அறிவுசார்ந்த தூயநெறியே இறை வழிபாடு ஆகும். மனிதனுடைய எந்தச் செயல் இயற்கையாற்றலின் இயக்கை நியதிக்கு முரண்படுகின்றதோ அங்குத்தான் துன்பங்கள் தோன்றுகின்றன. இயற்கை ஆற்றலின் நியதிகளுக்கு மனிதன் செயல் பொருளாலும் அளவாலும் முறையாலும் ஒத்து இருப்பின் அச்செயல்களின் விளைவுதான். இன்பம், மகிழ்ச்சி, நிறைவு என்று உணரப் பெறுகின்றன.

எனவே மனிதனுக்கு, இயற்கையுணர்வும் இயற்கையாற்றலின் இயக்க நியதி அறிந்து தன் செயல்களை முறைப்படுத்தி வாழும் இறைவழிபாடும் அவசியம் என்கிறார்கள் நம் முன்னோர்கள். மேலும் சமுதாயத்தில் மற்ற உறுப்பினர்களோடு நட்புக் கொண்டு ஒத்தும், உதவியும் வாழ ஒழுக்கம், கடமை, ஈகை என்னும் முச்செயலோடு அறநெறியும் வேண்டும் என்பதையும் உணர்ந்தார்கள்.

மனித இன வாழ்வு சிக்கலின்றித் துன்பமின்றி அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய வேண்டும் என்ற பெருநோக்கத்தில் மதங்களில் இறைவழிபாடும் அறநெறியும் ஒன்றிணைக்கப்பட்டது. இறையுணர்வின் முற்பகுதி பக்தி வழியாகவும் பிற்பகுதி ஞானவழியாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஞானவழியில் இறையுணர்வு என்பது மிகவும் முக்கியமான கருத்து ஆகும். இவ்வளவு காலமாக மதங்களில் பலவும் இறையுணர்வு பற்றி போதனையைக் கொடுத்து, சாதனையைச் செய்து வந்தார்கள் என்று, தம் நூலாகிய "இறை உணர்வும் அறநெறியும்"

என்ற நூலில் தம்மதம் பற்றிய கருத்தை விளக்கிச் செல்கிறார். எனவே மனிதனுக்கு 'மதம்' தேவையில்லை இறை உணர்வே போதும் என்கிறார் மகரிஷி.

அதேநூலில் மதம் மனிதனால், மனிதனுக்காக, அவன் நல்வாழ்வு வாழ, பாதுகாப்புடன் வாழ, கூடி வாழ்ந்திட ஏற்படுத்தப்பட்டதுதான் என்று கூறுகிறார். மேலும் மதத்தில் இரண்டு நெறிகள் பற்றி மிகவும் விளக்கமாக எடுத்துரைக்கின்றார். ஒரு மதத்தை ஒரு பறவையைப் போல் கருதிக் கொள்ள வேண்டும் என்கிறார் மகரிஷி. இதற்கு அவர் விளக்கமும் தருகிறார். எவ்வாறு எனில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். "பறவைக்கு இரண்டு இறக்கைகள் உண்டு. ஓர் இறக்கை அறவுணர்வு. இன்னொரு இறக்கை இறையுணர்வு. இதில் இறையுணர்வு என்பது இறை வழிபாடாகவும் அறவுணர்வு என்பது சமுதாய வழிபாடு அதாவது உயிர் வழிபாடாகவும் கருதலாம். உயிர்களோடு நாம் பழக வேண்டுமானால் அந்த உயிர்களுக்கு ஒத்த முறையில் ஈதல், இசைபட வாழ்தல், கடமை என்ற மூன்றை வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்." உயிர் வழிபாடு என்பது ஓர் இறக்கை. இறை வழிபாடு என்பது இன்னொரு இறக்கை. இவ்விரண்டைத் தவிர்த்து, மதம் என்பது இல்லை. ஒவ்வொரு இறக்கையிலும் மூன்று பிரிவுகள் உண்டு. அறவழிபாடு என்ற உயிர் வழிபாட்டில் ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும் உண்டு. இறைவழிபாட்டில் பக்தி, விளக்கம் முழுமைப்பேறு என்ற மூன்றும் உண்டு. இவ்விரண்டு இறக்கைகள் கொண்ட பறவைதான் மதம் என்று மகரிஷி எடுத்துக் காட்டுகிறார்.

எந்த மதமானாலும் எந்தக் காலத்திலே தோன்றிய மதமானாலும் இன்றுவரை வளர்ந்த நூற்றுக்கணக்கான மதங்கள் பெயர் வேறு வேறாக மாறியிருந்தாலும் இனியொரு மதம் வருமேயானாலும் இவ்விரண்டு நெறிகள் இல்லையானால் மதத்திற்கு வேலையே இல்லை என்கிறார். மதம் என்பதற்குக் கருத்தே இல்லை எனலாம். ஆகையால் இப்போது என்ன கொள்கிறோம் என்றால் மதம் என்பது வேறுவேறு இல்லை. ஒரே மதம்தான் உண்டு என்ற கருத்திற்கு வர வேண்டும் என்கிறார். அந்த ஒரே மதம் யாதெனில் இறைவழிபாடு, உயிர்வாழிபாடு என்ற இரண்டும் சேர்ந்ததுதான் என்று தெளிவாக மதத்திற்கு விளக்கம் அளிக்கின்றார்.

மேலும் மதத்தின் பெயரால் மனிதன் பல தவறுகளைச் செய்கிறான். அதனால் 'மதம்' மனிதனுக்கு வேண்டாம் என்பதை,

**மதம் யானைக்குப் பிடிக்கலாம்**
**மனிதனுக்குப் பிடிக்கலாமா?**

(குலோத்துங்கன் கவிதைகள் ஓர் ஆய்வு, ப. 28)

என்று ஒரு புதுக்கவிஞர் ஒரு வினாவை எழுப்புகின்றார். இந்த வினாவிற்கு மகரிஷி விடை பகர்கின்றார். மதமான பேய் பிடியாதிருக்க வேண்டுமெனில் ஆக்கப்பூர்வமான தன் சிந்தனைகளை விடையாகத் தொகுத்து அளிக்கின்றார். மதம் என்பது இருபக்கமும் கூர்மையான கத்தி போன்றது. அதனைக் கையாள்வதில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். இத்தகைய பிரச்சினையை மனத்தில் கொண்ட மகரிஷி மதத்தைப் புதிய நோக்கத்தோடு அறிவியில் அணுகுமுறையுடன் தம் மதக்கோட்பாடுகளை வகுத்துத் தந்துள்ளார். மதம் பற்றிய மகரிஷியின் அறிவார்ந்த சிந்தனைகளை இனம் காண்பதன் வாயிலாக அவரது வழிபாட்டுச் சடங்குகள் தொடர்பான பண்பாட்டு மரபிற்கு அடிப்படையான கருத்தை விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

மதத்தைப் பின்பற்றி நடக்கக்கூடிய மக்களும் மதத்தைப் போதித்துக் கொண்டிருக்கக் கூடிய தொண்டுள்ளம் பெற்ற பெரியோர்களும் மதம் என்பதன் விளக்கத்தை முதலில் தெரிந்துகொள்ளுதல் அவசியம். எவ்வாறு எனில் மதம் என்பதன் பொருள் என்ன? மனிதனுக்கு மதம் தேவையா? மதத்திற்கு மனிதன் தேவையா? இவ்வாறு எல்லாம் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஐயமின்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளல் அவசியம் என்கிறார் மகரிஷி.

இறையுணர்வு என்றால் இறைவனைப் பற்றி நன்றாகத் தெளிவாக உணர்ந்துகொள்வதைப் போன்று, மனிதன் தனக்குள் இறைவனே அறிவாகவும் அதாவது, தானாகவும் பேரியக்க மண்டலப் பொருட்கள் அனைத்திலும் இயக்க ஒழுக்காற்றலாகவும் (order of function) இருப்பதை அகக்கண் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும். எண்ணம், சொல் செயல்களுக்கேற்றவாறு தன்னை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே ஆன்மாவின் தூய்மையான வாழ்க்கை நிலையாகும் என்று இறையுணர்வின் தத்துவத்தைத் தம் நூலாகிய 'மதமும் மனிதனும்' என்ற நூலில் உணர்த்துகின்றார். மனித இன வாழ்க்கைப் பண்பாட்டில் இறைநிலை விளக்கத்தைப் புகுத்தி நலம் காணவேண்டும் என்று வேண்டுகோளும் விடுக்கின்றார்.

மகரிஷி இறைவனை அருட் பேராற்றல் என்று வரையறை செய்து அது பேரண்டம் முழுமையும் அகன்று பரந்துள்ளது என்கின்றார். இந்தப் பேரியக்க மண்டலம் முழுமையிலும் ஊடுருவி நிறைந்திருக்கும் எந்தப் பொருளைக் காண்கின்றோமோ? அந்தச் சுத்த வெளியே, இந்த இயற்கை என்ற பேராற்றலாகும் எனக் கூறியிருக்கும் செய்திகளின் வாயிலாக அவரது மதம் பற்றிய கோட்பாட்டினையும் இறைப்பேராற்றல் பற்றிய சிந்தனைகளையும் தெளிவாக அறிந்து கொள்ளமுடிகின்றது. இதற்கு முன் மதம் பற்றிய தோற்றத்தினையும் விளக்கிச்செல்கின்றார்.

## மதமும் மகரிஷியும்

மதம், மார்க்கம், சமயம் என்பன ஒரு பொருள் உணர்த்தும் சொற்களாகும். மனிதன் தெய்வம் என்னும் மெய்ப்பொருளைச் சார்தற்குச் சான்றோர்கள் கண்ட வழிமுறையே 'மதம்' எனப்படும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (திருக்குறள்)

என்பது வள்ளுவர் வாக்கு. இதற்கேற்ப வாழ்வாங்கு வாழ்பவனாக மனிதனை வளர்க்கும் கருவியாகவே மதங்கள் தோற்றுவிக்கப்பட்டன. சிந்தனை, செயல் ஆகியவற்றில் வேறுபாடு கொண்ட மனிதர்களை நல்வழிப்படுத்தி, உய்விக்கச் செய்யும் நெறியாக 'மதம்' விளங்குகின்றது. இதனால் மதமானது மனிதன் வாழ்வுக்கு வழிகாட்டுவதாக உள்ளது. எனவே மதம் மனிதனுக்கு அவசியமாகிறது. அது எம்மதம் என்றால் இறைஉணர்வும் அறநெறியும் இணைந்து மனித வாழ்வுக்கு வழிகாட்டும் ஆன்மிக விளக்கமே மதமாகும். இதுதான் மனிதனுக்கு அவசியமாகிறது என்று தம்படைப்பாகிய 'மதமும் மனிதனும்' என்ற நூலில் கூறும் கருத்தைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது.

### மதங்களின் தோற்றம்

உலக உயிர்களுள் அறிவு நிலையில் உயர்ந்தவன் மனிதன். ஏன் என்றால் அவனுக்குத்தான் ஆறாவது அறிவு உள்ளது. உயிர்களுள் உயிர்த் துணையாக இருந்தாலும் மனிதனுக்கும் வாழ்வில் பல சிக்கல்கள் எழுந்தன. புலன் மயக்கத்தாலும் பழக்கவழக்கத்தாலும் மனிதன் வாழ்வில் பல இன்னல்களைச் சந்தித்தான். புலன் மயக்கத்தால் தடுமாற்றம் கொண்டு மனிதன் தடம் மாறினான். இத்தடுமாற்றத்தை நெறிப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை சிலர் உள்ளத்தில் பிறந்தது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உண்டான சிக்கலில் துன்பப்பட்ட மனிதர்களை உய்விக்கும் வழிமுறையை அவர்கள் தேடினர். இவ்வழிமுறையே மதமாக உருப்பெற்றது என்கிறார். நீண்ட காலமாக அகன்ற உலகத்தில் அநேக இடங்களில் வசித்து வருகின்ற மக்களுடைய அனுபவங்களைத் திரட்டி ஒவ்வொருவருக்கும் கொடுத்து அனைவரும் பயன்பெற்று வாழ ஒரு தெளிந்த சிக்கலில்லாத வாழ்க்கை வழி மனிதகுலத்திற்குத் தேவைப்பட்டது. இந்தப் புனிதமான தேவையை நிறைவு செய்ய உருவாகிய கருத்துத் தொகுப்பும் செயல் விளக்கமும் கொண்டதுதான் மதம் என்னும் வாழ்க்கைநெறி என்று மதமும் மனிதனும் என்ற நூலில் விளக்கம் தருகின்றார்.

இவ்விளக்கத்தைக் கூர்ந்து நோக்குமிடத்து, மனித ஆற்றலையும் இயற்கையின் ஆற்றலையும்விட மேம்பட்ட சக்தி ஒன்று இருப்பதைப் பலரும் உணர்ந்தனர் என்பது தெளிவு. இதனால்தான் இறைவனை

வழிபடும் வகையில் தங்களுக்கு உரைத்த ஒரு வகையில் தங்களுக்கு உகந்த ஒரு வழியை உருவாக்கிக் கொண்டனர். அதுதான் இந்து, புத்தம், சமணம், கிறித்துவம், இசுலாம் என்று பல மதங்களாக உலகில் தோன்றின. இவை அனைத்தும் அடிப்படையில் ஒரே தத்துவத்தைத்தான் உணர்த்துகின்றன. ஆனாலும் காலப்போக்கில் அவை மாறுபட்டன என்பதைத் தம் படைப்புகள்மூலம் புலப்படுத்துகிறார். "மனிதன் என்ற தோற்றத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக உள்ளது அறிவும் மனமும் ஆகும். இவ்விரண்டு தத்துவங்களும் புலன்களும் கொண்டு உணர முடியாத மறைபொருட்கள் எவையும் மனித உணர்வுக்கு எட்டாதவை அல்ல. உலகம் தோன்றியதிலிருந்து இன்றுவரையில் எண்ணிறந்த அறிஞர்கள் இந்தத் தத்துவங்களைப் பற்றி ஆராய்ந்தார்கள். அவர்கள் ஆராய்ச்சியில் ஒரு துல்லியமான முறையை வகுத்துக் கொள்ள முடியவில்லை. இதனால் பல அறிஞர்கள் உணர்ந்த ஒரே தத்துவம் காலத்தினால் பல பலவாக, வேறுபாடுடையனபோலக் கருத்தில் சிதறுண்டு போயிருக்கிறது" என்ற மதத் தோற்றத்தினை அருள் தந்தை மகரிஷி தமது 'மதமும் மனிதனும்' என்ற நூலிலிருந்து படம்பிடித்துக்காட்டியுள்ளார்.

பிரம்மத்தை அறிந்த மாமனிதன் அதனை விளக்குவதற்காக மேற்கொண்ட முயற்சியே 'மதம்' ஆனது. மனிதனின் கேட்ட கேள்விகளுக்குரிய வகையில் ஞானியர் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் மதமும் பெருகலாயிற்று. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்யம் என்று மதங்கள் பிரிவதற்கு மனிதன் கேள்விகளும் ஞானியரின் விளக்கங்களும் காரணமாயின எனலாம். இம்மதங்கள் மனிதனை வளர்ப்பதற்காகவே தோன்றியனவாகும். இருந்தபோதிலும் இம்மதங்கள் யாவும் இறைவழிபாடு அறநெறி என்னும் இரண்டு அம்சங்களாகக் கொண்டனவையாகவே இருந்திருக்கின்றன.

உலகில் தோன்றிய மதங்கள் அத்தனையும் என்ன சொல்கின்றன? என்ற கேள்விக்கு நம் அருள் தந்தை மகரிஷி 'மதமும் மனிதனும்' என்ற நூலிலிருந்து விடை பகர்கிறார். "எந்த மதமானாலும் அது இறைவழிபாடு மற்றொன்று அறநெறி என்ற இரண்டையுமே வாழ்க்கை வளங்களுக்கு அடிப்படையாக உணர்த்தி இருக்கிறது என்கிறார். இந்த உண்மைகளைத் தன்முனைப்பால் மறந்துவிட்ட மனிதஇனம் அடைகின்ற வாழ்க்கைச் சிக்கல்தான் இன்று நாம் காணுகின்ற துன்பங்கள் ஆகும் என மதம் சொல்லும் காரணத்தைக் கூறுகிறார்.

மனிதஇனத்திற்கு மதம் ஒன்று போதாதா? பல மதங்கள் தேவைதானா? அப்படி மதங்கள் பிரிந்திருப்பதற்கு, பலவாக வளர்ச்சி பெற்றிருப்பதற்கு என்ன காரணம் என்றால் இயற்கை என்பது பிரபஞ்சத் தோற்றத்தில் அடிப்படையான விண் நிலையில் இருந்து மனித இனம் வரையில் வளர்ச்சி பெற்ற உண்மைகளை உள்ளடக்கியதாகும்.

இயற்கைக்கு மூலஆற்றலாக மனிதஇனம் கண்டு கொண்டுள்ள பேராற்றலைத் தெய்வம் என்று கூறுகிறோம். இன்று உலகில் எத்தனை தெய்வங்கள்? தெய்வம் என்ற பேராற்றலைச் சிதைத்துப் பல தெய்வங்களாக்கிவிட்டோம். ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றி நம்பிக்கையும் கொண்டு மனிதஇனம் பிளவுபட்டுவிட்டது.

மதத் தலைவர்கள்மூலமாகத்தான் இதற்கொரு முடிவு கட்ட வேண்டும் என்கிறார் வேதாத்திரி. மதம் ஒன்று போதும். அதை அடைவதற்கு தெய்வம் ஒன்று போதும். எந்தெந்த காலத்தோ, இடம், காலம், தேவை இவையொப்ப, தெய்வம் என்ற கருத்துக்கு உரு கொடுத்தார்கள். அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று ஒத்துவரவில்லை. இந்தக் காரணத்தால் மதங்களைக் கொண்டே அதில் பற்று வைத்து வாழ்ந்து வரக்கூடிய மனிதன் மனத்தாலும் செயலாலும் வேறுபட்டிருக்க வேண்டியது இனியும் அவசியமில்லை என்கின்றார்.

ஆகையால் மனிதனுக்கு மதநல்லிணக்கத்திற்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்று போதும். இதைத் தனி நபர் யாரும் செய்யமுடியாது. அதனால் உலகில் உள்ள மதத் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆராய்ந்து இரண்டு வினாக்களுக்கு விடை காணவேண்டும் என்கிறார். இதற்கு ஆராய்ச்சி கண்கொண்டு செய்யவேண்டும். கடவுள் (இறைநிலை) என்பது ஒன்றா? ஒன்றுக்கு மேற்பட்டதா? இப்படி ஆராய்ச்சி செய்து முடிவில் ஒன்றுதான் என்று கண்டால் எந்த மாபெரிய ஆற்றலை இறைநிலையாகக் கொள்ள வேண்டும் என்று விளக்கம் கூறி மதத்தைப் பிளவுபடுத்துவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்கிறார்.

எனவே மனிதனாகப் பிறந்த அத்தனை உயிர்களும் இவற்றையெல்லாம் உணர்ந்து தெளிந்து, வாழ வேண்டுமெனில், வாழ்க்கை அனுபவத்தில் தேறிய தெளிந்த சிந்தனையாளர்களின் வழிகாட்டுதலால் தான் முடியும் என்கிறார். ஆகவே நீண்ட காலமாக, அகன்ற உலகத்தில் அநேக இடங்களில் வசித்து வருகின்ற மக்களுடைய அனுபவங்களைத் திரட்டி, ஒவ்வொருவருக்கும் கொடுத்து, அனைவரும் பயன்பெற்று வாழ ஒரு தெரிந்த சிக்கலில்லாத வாழ்க்கைவழி மனிதகுலத்திற்குத் தேவையான ஒன்றாகும் என்கின்றார். இந்தப் புனிதமானத் தேவையை நிறைவு செய்ய உருவாகிய கருத்துத் தொகுப்பும் செயல் விளக்கமும் கொண்டதுதான் 'மதம்' எனும் வாழ்க்கைநெறி என்கிறார்.

## மதமும் மதத்தலைவர்களும்

அறநெறி, இறையுணர்வு என இரண்டை வைத்துக் கொண்டு அந்தந்தக் காலத்தில் அந்தந்த நாட்டில் கிடைக்கக்கூடிய பொருட்கள் கலையின்மூலமாக மாற்றியமைக்கக் கூடிய திறமை, அதை அனுபவிக்கக்கூடிய முறை, அதில் வரக்கூடிய விளைவு ஆகியவற்றைக்

கண்டு, அதற்கேற்ற செயல்முறைகளையும் வாழ்க்கை நெறிகளையும் போதனை செய்து வந்தார்கள். அறிவிலே தெளிந்தவர்கள், அந்தக் காலத்தில் இருந்த மக்கள் அவற்றை நன்றாக மதித்து ஏற்று நடந்துவந்தார்கள். போகப்போக அறிவின் வளர்ச்சியினால் பொருட்களின் உற்பத்தித்திறன் அதிகமானது. அதனால் எண்ணிக்கை அதிகமானது. அவற்றை அனுபவிக்கக்கூடிய முறைகளும் வேறு வேறானது. அதனால் ஏற்படக்கூடிய இன்ப துன்ப விளைவுகளும் பலவாயிற்று. அதற்கேற்றவாறு பிற்காலத்தில் தோன்றிய அறிஞர்கள் இவற்றையெல்லாம் ஆழ்ந்து கூர்ந்து பார்த்தனர். அன்றுள்ள சில முறைகள் இன்றுள்ள பொருட்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவையாக இல்லை எனக்கண்டு கொண்டனர். அதனால் தள்ள வேண்டியதைத் தள்ளி, புதுப்பிக்க வேண்டிய தினசரி வாழ்க்கை முறைகளை எல்லாம் மாற்றி வாழ்க்கையில் இவ்வாறு, இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று திருத்தம் கொடுத்தார்கள்.

தெய்வ வழிபாட்டிலும் சரி, அறநெறியிலும் சரி இன்னின்னவாறு செய்ய வேண்டும் இன்னின்னவாறு செய்யக்கூடாது என்பனவற்றில் முதன்முதலில் மதம் தோன்றிய காலத்தில் இருந்த செயல் விளைவுக்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்தார்கள். இந்தத் திருத்தத்தைப் போதித்த மகான், அவருடைய மதிப்பை உணர்ந்தவர்கள் அவருடைய விளக்கத்தில் பயன் கண்டவர்கள் அவற்றைப் பின்பற்றினார்கள். அவற்றைப் புரிந்து கொள்ளாதவர்கள் ஒத்துக் கொள்ளாதவர்கள் அவரைப் பின்பற்றவில்லை. பழைய ஏற்பாட்டிலேயே தங்கி, பழைய முறையிலேயே வாழ்ந்து கொண்டு வந்தார்கள்.

இங்கே இன்னார் சீர்திருத்திய முறையில் வாழக்கூடிய மக்கள் என்றும், அதற்கு முன்னதாக தோன்றிய ஓர் அறிஞர் போதித்த போதனையிலேயே பின்பற்றி வாழக்கூடிய மக்கள் என்றும் இரண்டாகப் பிரிந்தனர். இப்படிப் பிரிந்த இவர்கள் வாழும்நெறியைச் சீர்திருத்திய பெரியோர்கள் பெயரில் இன்னார் மதத்தைச் சார்ந்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டார்கள். இதனால் மக்களும் மதமும் பிளவுபட்டன என்கிறார் மகரிஷி. இதை வளர்த்த மதத்தலைவர்கள் பெயரைக்கொண்டு மதத்திற்குப் பெயர் வந்ததே தவிர 'மதம்' என்பது உலகத்தில் இரண்டாக இருந்தது இல்லை என்கிறார். ஒரே மதம் என்று மதத்திற்கும் மதத்தலைவர்களுக்கும் விளக்கம் அளிக்கிறார் இப்படிப்பட்ட மதத்தலைவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அவர்களிடம் விளக்கம் கேட்டால் அதற்கு அவர்கள் மக்கள் பின்பற்றிய பெரியார்களின் பெயர்களை வைத்துக்கொண்டு தான் 'மதம்' என்று சொன்னார்களே தவிர 'மதம்' என்பது இரண்டு உண்டா என்றால் இல்லை என்கின்றனர் என்கிறார் மகரிஷி. இதிலிருந்து மகரிஷி கூறும் கருத்து என்னவெனில் எந்த மதத்திலேயும் இறைவழிபாடு உயிர்வழிபாடு என்ற இரண்டைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகையால் மதம் என்றால் என்ன?

என்பதை உணர்ந்து கொண்டோமேயானால் உலகத்தில் ஒரு மதம் இருக்கும், சண்டைகள் தொடராது என்கிறார்.

இதனைக் கோவையில் நடந்த சிறப்புப் பயிற்சியில் 'மதமும் சடங்கும்' என்ற பொருளில் 05.10.1983ல் பேசியிருக்கிறார் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி. இவ்வுரையிலிருந்து அவரது மத நல்லிணக்கம் தெள்ளத் தெளிவாகச் தெரிகின்றது.

## மதத்தை மதித்தல்

மனித வாழ்வு இனிமையானது, மென்மையானது, வாழ்வில் இன்பத்தைக் காத்து மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும். இயற்கை நியதிகட்கும் சமுதாயக் கருத்து சூழ்நிலைக்கும் மதிப்பளித்து, பிறப்புரிமையையும் சுதந்திரத்தையும் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டும். இந்தப் பெருநோக்கத்தோடு வாழ்கை நடத்த முற்காலத்தில் மதங்களின்மூலம் வாழ்வில் கட்டுப்பாடுகள் புகுத்தப்பெற்றன. முற்கால மக்களிடையே கல்வி அறிவு இல்லாத காரணத்தாலும், பக்தியினாலும் கட்டுப்பாடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு வாழ்வில் கடைப்பிடித்தனர். இக்காலத்தில் அறிவியல் உலக மக்களை ஒன்றிணைத்துவிட்டதோடு அல்லாமல் அறிவியல் அறிவு பரவிவிட்டது. கட்டுப்பாடுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துவிட்டு அவரவர் விருப்பம்போல வாழ்வை நடத்தப் பெரும்பாலோர் துணிந்துவிட்டனர். இதனை உணர்ந்த மகரிஷி மக்கள் மதத்தை மதித்து நடக்க வேண்டும். அப்படி மதித்தால் 'மதம்' ஒன்றே என அவர்கள் எண்ணுவர் என்கிறார்.

மதங்களின் கட்டுப்பாடுகளில் பல இக்காலத்திற்குப் பொருந்தாது என்கிறார். அவை வாழ்வுக்கு அர்த்தமில்லாத பளுவாக அமைகிறது என்பதனை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும் என்கிறார். அதனால் அவரவர் சமுதாயத்தைப் பெருங்குழப்பத்தில் கொண்டு வந்துவிடும் என்கிறார். இடம், காலம், தொடர்பு கொள்ளும் பொருள் இவற்றுக்கு ஏற்ப எந்தச் செயலும் இன்ப துன்ப விளைவுகளைத் தரும் என்ற இயற்கை நியதியை மறுக்கவும் முடியாது என்கிறார். மேலும் ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தால் உருவாக்கப்பட்டு, காக்கப்படுகிறான். அதனால் சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவர் தேவைக்கும் விருப்பத்திற்கும் அறிவிற்கும் மதிப்பளித்துத் தனது வாழ்வை நடத்த வேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமையாகும் என்று மகரிஷி மதத்தை மதித்து வாழ வழிகாட்டுகிறார்.

இதனால் ஒவ்வொருவரும் தனது செயல்களைப் பிறர்க்குத் தீமையற்ற முறையில் கட்டுப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். இந்த ஒழுக்கத்தை உணர அறிவிற்கு ஆராயும் திறன் வேண்டும் என்கிறார். ஒழுக்கத்தை வாழ்வின் இயல்பாக அமைய அதைப் பயின்று பழகிக் கொள்ள வேண்டும். உயிரின் பெருமையுணர்ந்து, பிறர்க்கு

அடிமையாகாமலும், பிறரை அடிமை கொள்ளாமலும் சுதந்திர வாழ்வின் இன்பத்தைத் துய்க்க வேண்டுமானால் மதங்களின் கருத்தை மதித்து வாழ வேண்டியது மனிதனுக்கு அவசியமாகிறது.

இப்படி மதித்து வாழ்பவர்களை நாம் எப்படி அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்பதற்குத் தத்துவஞானி மகரிஷி பதிலும் தருகிறார். இறைநிலையை உணர்ந்திருந்தால் இரண்டு அடையாளங்கள் வெளிப்படையாக அனைவருக்கும் தெரியவரும் என்கிறார். ஒன்று அவர் ஒரே கடவுளை வணங்குபவராக இருப்பர். இன்னொன்று மற்ற மதங்களோடு மதபோதனைகளோடு எல்லா வகையிலும் கருத்து வேறுபாடு கொள்ளமாட்டார். இவ்விரண்டு அடையாளங்களைக் கொண்டு இன்றைய காலத்தில் கண்டு கொள்ள முடியும் என்கிறார். ஆனால் இன்று இந்த அடையாளங்கள் குறைந்து வருவதையும் காணமுடிகிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். இறைநிலைத் தெளிவு எல்லோரிடமும் இல்லை என்கிறார்.

மதத்தை நிறுவிய மகான்கள் மனிதகுலம் அன்போடும், அமைதியோடு ஒருவருக்கொருவர் ஒத்தும், உதிவியும் வாழ வேண்டும் என்றுதான் போதித்தார்கள். ஆனால் இன்று பெரும்பாலும் மதத்தைச் சில சுயநலவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். கடவுளின் பெயரால் சண்டையிடுவதும் கூடாது என்ற கொள்கையை இயன்றளவு மக்களிடையே பரப்ப வேண்டும். இதற்கு முதலில் இறைஞானம் மக்களிடத்தில் குறிப்பாகத் தலைவர்களிடத்திலே ஏற்பட வேண்டும்.

உலகிலுள்ள பொறுப்புடைய தலைவரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர் வாய்பெறுதல் வேண்டும்
(மதமும் மனிதனும், மகரிஷி, ப. 62)

என்று மதத்தை மதிக்கும் மனிதனுக்கும் மதத்தலைவர்களும் உலக நல வேட்பாளராகத் தன்னை இனம்காட்டி உள்ளார்.

'மதம்' என்பது மனிதனை நெறிப்படுத்த வேண்டும். மனிதன் படைத்த மதத்தின் பெயரால் இன்று மதவெறி கொண்டு ஒருவரோடொருவர் மோதி அழிந்து போகிறார்கள். சிலர் இறைவன் சுவர்க்கம், நரகம் மறுபிறப்புப் பற்றித் தவறான கருத்துகளைப் போதித்து மக்களைக் குழப்பியும் அச்சுறுத்தியும் வருகிறார்கள். அவர்களுக் கெல்லாம் தம் படைப்புக்களின்மூலம் விளக்கம் தருகிறார் மகரிஷி. ஓர் உயர்ந்த குழுவை ஏற்படுத்திச் சகிப்புத் தன்மையின்மை எனும் சிக்கலை முழுமையாக நீக்கும் வகையில் சமயத்தில் இன்றியமையாத தன்மைகளைக் கூட்டாக ஆராய்ந்து அனைத்துலக மக்களின் அறிவுக்குப் பொருத்தமானதும் பொதுவானதுமான அறநெறி சார்ந்த வாழ்க்கை முறையை வடிவமைக்க மதத்தலைவர்கள் முன்வரவேண்டும் என்று அருள்தந்தை மகரிஷி விரும்புகிறார்.

கூட்டுக்குழு இயற்கையின் உண்மையை வலியுறுத்திக் கூறினால் எல்லாச் சமயத்திலுள்ள சிந்தனையாளர்களும் ஒருவருக்கொருவர் போராடுவதிலிருந்து விலகி விடுவர். இதனால் 'ஓருலகச் சமயம் தோன்றலாம் என்று சமயச் சிக்கலுக்குத் தீர்வும் காணுகிறார். மதங்களிலெல்லாம் சொல்லப்படுகின்ற இறைவனும், அறிவியல் தேடிக் கொண்டிருக்கின்ற எல்லாம் வல்ல ஒருங்கிணைப்புச் சக்தியும் (unified force) ஒன்றே என்ற தெளிவைத் தன் 'மனவளக்கலையில்' பெறலாம் என்று மதத்தில் இறைவனைக் காணும் வழியை அறிவியல் கண்கொண்டு பார்க்கிறார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இறைவனை முதன்மையாகக் கொண்டவை சமயங்கள் எனும் மதங்கள் ஆகும். அவை மக்களை நெறிப்படுத்துவதற்காகத் தோன்றியவை. ஆனால் இக்காலத்தில் அச்சமயங்களே மக்களைப் பாகுபடுத்திப் படுகுழியில் தள்ளிவிடுகின்றன. மக்களிடையே வேறுபாடுகளை வளர்த்துப் பிரிவினையைத் தூண்டிப் படுகொலைகளும் செய்ய வைக்கின்றன. மதங்கள் அனைத்தும் உணவு, உடை, வணக்கமுறை என்னும் இம்மூன்றில் மட்டுமே வேறுபடுகின்றன. உயர்வாகப் பகுக்கப்பெற்ற உடல்நலம், கல்வி, ஒழுக்கம், நல்லறிவு, வீரம், கடமை முதலான நலன்களைக் கருத்தாலும் செயல்களாலும் அடையவும் மக்கள் விரும்புவதில்லை. மக்கள் அனைவரும் அன்புடன் வாழவும் நல்ல நடைமுறைப் பயிற்சியை நல்குபவையே 'மதங்கள்' என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று தம்படைப்புகள் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

இயற்கை நிகழ்ச்சிகட்குக் காரணம் உணருகின்ற எண்ணத்தின் உயர்ந்த நிலையே தத்துவம். இவ்வெண்ணங்களின் தொகுப்பே சாத்திரங்களாய் வளர்ந்தது. இயற்கையின் நிலை இயக்கம் விளைவுகளை நன்கறிந்த எண்ணத்தின் செயல்ஒழுக்க ஏற்பாடுகள்தான் மதங்களாகக் கருதப்படுகின்றன.

எண்ணிறந்த மதங்கள் உண்டு மனிதருக்கு
எனினும் தெய்வம் என்பது ஒன்றே ஆகும்

(மதமும் மனிதனும், மகரிஷி, ப. 65)

எனவே இவற்றின் வாயிலாக மக்கள் இறைஉணர்வைப் பெறவேண்டும். அதேசமயத்தில் எம்மதத்தையும் உயர்வு என்றும் தாழ்வு என்றும் காணாது 'மதம்' ஒன்றே என்று மக்கள்வாழ அருள்புரிகிறார் மகரிஷி.

### மடங்கள்

மனிதகுலத்தில் இறையுணர்வையும் அறநெறியையும் போதனை மூலமாகவும் சாதனை மூலமாகவும் உணர்த்தி, மக்களை வழிநடத்தும்

அறிஞா ஒருவரைத் தலைமையாகக் கொண்டு நடத்தப்படும் தெய்வீக ஒழுக்கநிலையங்களே மதங்களைப் போதிக்கும் மடங்கள் எனப்படுகின்றன. மடத்தின் மடாதிபதியாக விளங்கும் ஒவ்வொருவரும் இறைநிலை உணர்ந்தவராகவும் அறநெறி வாழ்க்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். இன்று பக்தியோடு மதத்தைப் பாராட்டிக் கடவுளை மறந்துவிடுகிறார்கள். இறைநிலைக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகளை மறந்துவிட்டுச் சடங்குகளையும் மதங்களின் பெருமைகளையும் பேசி வருவதால் பயன் இல்லை என்று 'உலகச் சமுதாய வாழ்க்கைநெறி' என்னும் தம்நூலில் மடங்கள் மதத்தைப் போற்றும் வழிவகைகளைக் கூறுகிறார்.

எல்லாச் சமயத் தலைவர்களும் ஒன்றுகூடி மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் 'எல்லாம் வல்ல இறைநிலையைப் பற்றிய ஒரு தெளிவான பொதுக்கருத்தை உருவாக்கவேண்டும் என்கிறார் தத்துவஞானி மகரிஷி. உலகப் பேரறிஞர்கள், சிந்தனையாளர்கள் படிப்படியாகப் பல திட்டங்களை வகுத்து, உலக மக்கள் அனைவருக்கும் உலகப்பொது அருள்நெறிச் சமயத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என மடங்களின் மடாதிபதிகளின் மதக்கொள்கை பற்றிய தம் கொள்கையாக விளக்குகிறார். ஏனெனில் அதுவே மனிதகுலம் உயர்வதற்கு ஏற்றதாக அமையும் என்கிறார். இறைஉணர்வும் அறநெறியும் பரவி உலகெங்கும் மக்கள்குலம் ஒன்று தழைத்து ஓங்கக் கீழ்வரும் பொதுக்கருத்தை நம்முன் வைக்கிறார்.

> இத்தகைய உயர்சமயநெறி வகுத்து உள்ளேன்
> இது உலகப்பொதுவாம் அருள்நெறி சமயம் ஆகும்
> ஒத்தது உலகெங்கும் வாழ் மக்கட்கெல்லாம்
> ஒரே தெய்வம் சுத்தவெளி, உயர் அருட்பேராற்றல்
> சுத்தசன்மார்க்கநெறி ஒத்து உதவி வாழும்
> தூய காந்த தத்துவமே இதற்கு வேதமாகும்
> (வேதாத்திரியம், மகரிஷி, ப. 98)

என்ற பொதுக்கருத்தை, மதத்தலைவர்கள் உணர வேண்டும் என்கிறார்.

## உலகத்தில் பொதுமதம்

இந்தக் காலத்திற்கு ஏற்ற வகையில் ஒரு மதம் வேண்டும் என்னும் உயர் சிந்தனை மனித சமுதாயத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும் என்கிறார். இதுவரையில் தோன்றிய எல்லா மதங்களின் உட்கருத்துகளையும் இணைத்துக்கொண்டு எம்மதத்திற்கும் முரண்பாடு இல்லாத மதமாக இருக்கவேண்டும். கர்மயோகம் என்பது நாம் செய்யும் செயலினால் இறைவனைக் காண்பது என்பதாகும். இத்தகைய செயல்களில்தான் சமுதாயம் வளர்ச்சிபெறும் என்று உலகத்திற்குப்

பொதுவான மதத்தை உருவாக்க மகரிஷி ஆசைப்படுகிறார். இதனைத் தனது நூல்களில் ஒன்றான 'ஞானக்களஞ்சியம்' என்னும் பகுதியில் விளக்கமாகக் கூறுகிறார்.

நன்றி கடமையுணர்வு, நலம் நாடிச் செயலாற்றும் பண்பு என்னும் ஒரே நீதியாகச் செயலாற்றும்போது, இறைவனையே விளைவுகளாகக் காண்கிறோம். இன்றுள்ள மதம் அனைத்தும் இணைத்துக் கொள்ளும் இணக்கநெறிதான் உலக சமயம் என்கிறார். மதத்தின் உயர் நோக்கம் என்பதைக் கூறும் மகரிஷி ஒன்றுபட்ட கடவுள் நெறிக்கு ஒத்த மதமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறார். இதனைக் கீழ்வரும் பாடல் வரிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

தன்முனைப்பு ஆறுகுணம் பஞ்சமகாபாவம்
தயவின்றி பிறருடைய சுதந்திரம்பறித்தல்
வன்முறைகள் ஏழ்மை பிறர்பொருள்கவர்தல்
வாழ்வினிலே பெண்ணினத்தை வருந்தவிடல்
கன்ம வினை நிகழாமல் காக்கும் மதம் ஒன்றே
கடவுள் நெறிக்கொத்தமதமாகும்

(ஞானக்களஞ்சியம் (தொகுதி - 2), மகரிஷி, ப. 280)

இதில்தான் களங்கம் இல்லை. அப்படிப்பட்ட மதத்தை நீ அறிந்தால் சொல்வாயாக நண்பனே என்று உலகமதம் அறியும் வகையில் உயர்சிந்தனையைத் தன்நண்பனிடம் கேட்டு அறிகிறார். இத்தகைய உயர்மதத்தை நாம் அனைவரும் ஏற்போம் என்கிறார்.

மேலும் அறம், ஒழுக்கம், இணக்கநெறி இந்த மூன்றும் இணைந்ததுதான் உலகப் பொதுமதமாக விளங்கமுடியும் என்கிறார்.

இன்று அறநெறியும் இறைஉணர்வும் இணைந்து மனித வாழ்வுக்கு வழிகாட்டும் ஆன்மிக விளக்கமே 'மதம்' என்ற சொல்லுக்கு விளக்கமாகுமென்பது மகரிஷியின் கருத்தாகும். இது குறித்து, மிக மிக விரிவாக ஆராய்ந்த மகரிஷி கூறியுள்ள முடிவுகள் அனைவரையும் சிந்திக்க வைப்பதாக உள்ளது. இறை உணர்வும் அறநெறியும்தான் மதங்களின் அடிப்படை நோக்கமாகும் என்பதனை விரிவாகக் கூறியிருந்த போதும் முன்பகுதி பக்தி வழியாகவும் பிற்பகுதி ஞானவழியாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஞானவழியில் 'இறையுணர்வு' என்பது மிக முக்கியமான கருத்தாகும். இவ்வளவு காலமும் மதங்களில் பலவும் இறையுணர்வு பற்றிப் போதனையைக் கொடுத்துச சாதனையைச் செய்து வந்த போதிலும் மதத்தலைவர்களில் பெரும்பாலானவர்கள் தெளிவாக இறையுணர்வு பெற்றிருக்கிறார்களா? என்று தெரிந்துகொள்ள முடியவில்லை என்று 'இறையுணர்வும் அறநெறியும்' என்ற நூலில் மகரிஷி குறிப்பிட்டுள்ளார்.

மதம் குறித்து, இன்று நிலவும் குறைகள் மறைந்து புனித வாழ்க்கை சீர்திருத்த நெறியாக மனிதன் வாழ வேண்டுமெனில் ஐந்து நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார்.

1. மனிதமனம் சிறப்புற அறிவின் நுண்மையோடு வாழத் தனக்கு வேண்டிய தேவைகளை முடித்துக் கொள்ள அவரவர் உழைப்பைப் பயன்படுத்த வேண்டும்.

2. பிறருடைய மனம், உடல் வருந்தாத ஒரு விழிப்புநிலையோடு தமது வாழ்க்கைச் செயல்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

3. உணவுக்காக உயிர்க்கொலை கூடாது.

4. பிறருடைய வாழும் உரிமையையும் அவர்கள் ஈட்டி வைத்திருக்கும் பொருட்களையும் நாம் மதித்துக் காத்து அவருக்கு உதவி செய்யவேண்டும்.

5. துன்பப்படும் உயிர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்யத் தயாராக இருக்கவேண்டும். இவ்வாறு மேற்கூறிய ஐந்து வகை ஒழுக்கங்களையும் நினைத்துப் பார்த்தால் இதுவே அறநெறி என்ற ஆன்மிக அரண்மனையாகும். இதனால் 'மதம்' ஒன்றுபடும். மக்களிடையே மதநல்லிணக்கம் தோன்றி ஒற்றுமையுடன் வாழ்வர் என்று மகரிஷி மதநல்லிணக்கத்தை இறைஉணர்வில் காண்கிறார்.

மதச் சண்டைகள் ஒழிந்து ஓர்இனமாக வாழ்வது பற்றிக் கூறும்போது, உலகம் அமைதி வழியில் உய்ய மேற்கூறிய ஐந்து ஒழுக்கநெறிகளைப் பின்பற்றினால் ஒரு உலகப் பொதுமதம் தோன்றும் என்கிறார். உலகப் பொதுமதம் தோன்ற வேண்டும் என்றால் அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்று போதும். மதத்தலைவர்கள்தான் இதற்கு ஒரு முடிவுகாண வேண்டும் என்கிறார்.

அறிவியல் கல்வி அறிவு ஒன்றை வாழ்வின் ஊடே அறிய வேண்டுகிறார். இக்கல்வி அறிவியலும் தத்துவமும் இணைந்தே செயல்படும்போது அங்கே சீர்திருத்த நிலையாக உருவாகும் உலகப் பொதுமதம் தோன்றும் என்கிறார்.

## ஒழுக்கத்தில் மதம்

உடல் பொருள் அறிவு
உலகம் அறிந்தோர் சொன்ன
(ஞானக்களஞ்சியம், மகரிஷி, ப. 167)

**உடை, எண்ணம் வாழ்க்கை** இவ்வகை ஒழுக்கங்களே மதமாம் என்று மகரிஷி அவரவர் உடையில், உணவில், வணக்க முறையில் சடங்குகளும் வேறுபடுகின்றன. அப்பொழுதுதான் மதப்

பிரிவினையும் தோன்றுகின்றன. 'மதம்' என்பதே என்னவென்று தெரியாததனால் ஒவ்வொன்றாகக் கூட்டிக் கொள்கிறோம். தேர்த் திருவிழாவை எடுத்துக்கொள்ளுங்கள். அதற்கு நூறு கதைகளைச் சொல்வார்கள். இந்தப் பத்து நாட்கள் கதைகளைப் பத்து இடங்களில் பொருள் கேட்டு நடத்தி முடித்துவிட்டுப் போய்விடுவார்கள். கடைசியில் 'மதம்' என்பது வெறுமையே ஆகிவிடுகிறது.

உலகச் சமுதாய சேவா சங்கத்தின் நிறுவனத் தந்தை வேதாத்திரி மகரிஷி உலக மக்களின் நன்மைக்காகவே சிந்தித்துச் செயல்பட்டவர். அதனால் அவரது மதம், நோக்கம் என்னவென்றால் உலகில் போர் இருக்கக்கூடாது. தனிமனிதனிடையே, குடும்பங்களிடையே, நாடுகளிடையே மொழி, மதம், இனம் போன்ற பாகுபாடுகள் இருக்கக்கூடாது. இப்படி பாகுபாடு வளர்ந்தால் பகை உணர்வு இருந்து விடும். பகை உணர்வு வளர விடக்கூடாது என்பதுதான் மகரிஷியின் நோக்கமாகும். அதனால்தான் மதநல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு வந்தார்.

> இறைவா நற்கர்மயோகம் உலகசமயம் என்ற
> எண்ணமதை என்னுள்ளத்தே எழுப்பிவிட்டாய்
> அதை நானறிவேன்

என்று உலகச் சமயம் ஒன்று என்பதனை தன்கவிதை வரிகள்மூலம் விளக்கியுள்ளார். இக்கவியை ஒவ்வொரு மனிதனும் சொல்லிக் கொண்டால் மகரிஷியின் மதநல்லிணக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும். எனவே மகரிஷியின் மத ஒற்றுமையை அவரது சொற்பொழிவுகள்மூலமும் நூல்கள்மூலமும் நமக்குப் புலப்படுத்துகின்றார்.

> விஞ்ஞானத்தின் பயனாய்ப் பொருள்பெருகும் அளவிற்கு
> விளைவறிந்து அளவு முறை பிறழாது வாழ
> மெய்ஞ்ஞானம் மக்களிடை மேலோங்க வேண்டும்.
> (ஞானக்களஞ்சியம் (தொகுதி - 2), மகரிஷி, ப. 514)

என்று மெய்ஞானமாம் மதத்தைக் குறிப்பிடுகிறார். ஆகவே அறிவியல் பார்வையோடு மதத்தைப் பார்க்கும் அவரது மதக்கோட்பாடு தெள்ளத்தெளிவாக நமக்குப் புலப்படுகின்றது.

தத்துவஞானி மகரிஷி 27.08.84இல் எழுதிய தனது கவிதையில் அறிவியல் அறிஞர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு கருத்தரங்கைக் கூட்ட வேண்டும். அக்கூட்டத்தில் மக்களுக்கு எஞ்ஞானம் அவசியமோ? அந்த ஞானத்தை உணரச் செய்ய வேண்டும். மக்களுக்குத் தேவையான ஞானம் மெய்ஞானம் என்பதை முதலில் அறிவியல் அறிஞர்கள் உணரவேண்டும் என்கிறார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டை நம்முன் வைக்கிறார்.

நீர்வானில் சஞ்சரிக்க 'மேகம்' என்போம்
நிலம்மீது வாழும்போது 'மழை' என்கிறோம்
பார்மீது அதனையே இடத்துக்கேற்ப
பலபெயரால் அழைக்கின்றோம்
பழங்கள்ஊடே நீர்பெற்றச் சாறு என்போம்
அதேபோல் ஆதிசக்தியின் சிறப்பு ஒக்கப்
பலபேர் வைத்து அழைக்கின்றோம்
(ஞானக்களஞ்சியம் (தொகுதி - 2), மகரிஷி, ப. 417)

இவற்றை நோக்குமிடத்து, உலகில் வாழும் மக்கள் அனைவரும் வெவ்வேறு இனத்தவர்களாக இருந்தாலும் அவர்களை 'மக்கள்' என்றுதான் பொதுவாக அழைக்கின்றோம். வேறு மதபேதம் ஏதுமில்லை என்கிறார். இதைவிட அறிவியல் முறையில் மத ஒற்றுமைக்கு யாராலும் விளக்கம் கூற இயலாது. மனித உயிருக்குள் உள்ளது ஒரே மனம், ஒரே உயிர் தானே தவிர 'மதம்' என்ற உயிர் அல்ல என்கிறார். இதனைக் கீழ்வரும் வரிகள் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

உருவங்கள் கோடான கோடியாய் அவை
உள்ளும் புறமும் சுரூபமாய்,
ஊடுருவி நிறைந்திருப்பது உயிராகும்
(ஞானக்களஞ்சியம் (தொகுதி - 2), மகரிஷி, ப. 520)

என்று உருவங்கள் வேறு வேறாக இருந்தாலும் அனைவரின் உருவத்தில் இருப்பது உயிர் ஒன்றே ஆகும். எனவே இங்கு மதபேதம் எங்கும் இல்லை. அதேபோல் மனிதன் பல நிலைகளில் இருந்தாலும் பல மதங்களைப் போற்றினாலும் 'அன்பாம்' ஒரே சக்தியாம் கடவுளைத் தானே வேண்டுகின்றனர். இதில் எங்கிருந்து மதபேதம் வந்தது. எனவே 'மதம்' என்பது ஒன்றுதான். அதுவும் உலகப் பொதுமதமாகும் என்கிறார்.

வினைத்தூய்மையும் மனத்தூய்மையும் மனிதனுக்கு வேண்டும். அப்பொழுதுதான் உயர் அன்பு, தொண்டு, ஈகை என அவனுள் உண்டு பண்ணும். இதற்காகத்தான் வேதத்தையும் மதத்தையும் போதிக்க வல்ல பல உயர் நூல்கள் தோன்றின. ஆனால் மனிதன் 'மதம்' என்பதைத் தன் அன்புக்குள் கொண்டுவராமல் வேற்றுமைக்குப் பயன்படுத்திக் கொண்டான் என்று தன்கவிதைமூலம் மகரிஷி விளக்குகிறார். மனிதனுக்கு மதம் தேவையில்லை. அகத்தவமே மதங்கள் எல்லாம் அடைய விரும்பும் முடிவாக இருக்கிறது. மதம் பார்க்கும் மனிதனைப் பார்த்து அருள் தந்தை கீழ்வருமாறு பேசுகிறார். "தன்முனைப்பு, அறுகுணம், பஞ்ச மகாபாவம், தயவின்றிப் பிறருடைய சுதந்திரம் பறித்தல், வன்முறைகள், ஏழ்மை, பிறர்பொருள் கவர்தல், வாழ்வினிலே பெண்ணினத்தை வருந்தவிடல் என்ற கன்மவினைகள் நிகழாமல் காக்கும் கருவிதான்

'மதம்' ஆகும். இது கடவுள் நெறிக்கு ஒத்த உலகப் பொதுமதமாகும். இம்மதத்தை நண்பர்களே அறிந்து செயல்பட வேண்டும் என்று 'ஞானக்களஞ்சியம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆட்சிமுறையில் மதங்கள்

உலகினிலே பிறந்தவர் அனைவருக்கும் உயிர் வாழும் மட்டும் தான் இவ்வுலகம் சொந்தம் ஆகும். ஒரு நாட்டை, ஓர் இனத்தை, ஒரு மதத்தை ஒரு சில பிரிவு மக்கள் அழித்துவிடுகின்றனர். அப்படி அழித்துவிட்டு உயிர்வாழ எவர்க்கும் உரிமை இல்லை. உலகம் பொதுவாய் அமைய உயர் ஆட்சிமூலம்தான் ஒன்றிணைக்க முடியும் என்று மகரிஷி கூறுகிறார். மனித சமுதாயம் என்ற பேரவையில் பிரிக்க முடியாத தொடர்பு கொண்டுள்ள ஒவ்வொரு மனிதனும் அனைவருக்கும் ஒத்தும் உதவியும்தான் வாழவேண்டும். நெறி பிறழ்ந்தவர்களைத் திருத்தவும் தண்டிக்கவும் ஏற்ற ஒழுங்குமுறைகளும் மெய்யறிவு பெற்றவர்களால்தான் ஆட்சி சட்டமாகவும் அவற்றின் திருத்தங்களாகவும் புகுத்தப் பெற்றன என்கிறார். எனினும் மதங்களும் ஆட்சியும் இன்று வரையில் மனிதகுல வாழ்வில் அமைதி ஏற்படுத்துவதில் வெற்றி பெறவில்லை என்பதையும் சுட்டுகிறார்.

மனிதகுல வாழ்வில் இயற்கைத் தத்துவத்தை அறிந்து கொள்ள மகரிஷி கூறும்போது ஒவ்வொரு மனிதனுக்கு ஏற்ற அறிவு வேண்டும் என்கிறார். இறைவழிபாட்டையும் அறநெறியையும் போதித்து, மனித இன வாழ்வைத் தூய்மை செய்ய முயன்று வருகின்றன. மதமும் மனித இன வாழ்வின் களங்களாக உள்ள ஏழ்மையும் பொய், சூது, கொலை, களவு, முறையற்ற பால் நட்பு எனும் ஐந்து பெரும்பழிச்செயல்களையும் போக்கிவிடவோ அல்லது குறைந்துவிடவோ இல்லை என்றும் கூறுகிறார். எந்தப் பொருளிலும் எந்த இடத்திலும் எந்த இயக்கத்திலும் எந்தவித விளைவுகளிலும் என்னைக்காண வல்லவன் எவனோ? அவனை விட்டு நான் நீங்குவதில்லை. என்னை விட்டு அவன் நீங்குவதில்லை. இந்த ஆழமான உண்மைகளை ஆதியில் மதத்தலைவர்கள் உணர்ந்திருந்தனர். மக்களுக்கு இதனை உணர்த்தியும் வந்தனர். பிற்காலத்தில் பிரணவத்தைப் பற்றி உண்மையாக உணர்ந்து கொள்ளாத தலைவர்களே பெரும்பாலும் மதங்களை வழிநடத்தினார்கள். அதனால் மக்களும் இறையுணர்வு பெற இயலாமல் போயினர். இறையுணர்வு இன்மையால் வாழ்வில் அறம் நிலைக்கவில்லை. அதனால் அரசியல் சீர்குலைந்தது என்று அரசியலில் மதம் சீர்குலைந்த நிலை பற்றிப் பேசுகிறார்.

மேலும் உலகில் பல மதங்களைச் சார்ந்த மக்கள் பழக்கத்தினால் தன்மதம்தான் உயர்வு என்ற கருத்தில் பிற மதங்களை வெறுத்தும் எதிர்த்தும் நடந்து கொள்கின்றனர். இதனால் மனிதகுலத்தில் மதவேறுபாட்டுணர்ச்சி அதிகப் பிணக்குக்கும் பகைக்கும் இடம்

ஏற்படலாயின. தெய்வநிலை தெளிவிற்கும் சமுதாய மக்கள் நட்புக்கும் இவ்வேறுபாட்டு உணர்ச்சிகளே இடையூறாக இருக்கின்றன. இதனால் மதங்களின் மையக்கருத்தே குலைந்து போகின்றது. இக்காலத்திற்கு ஏற்ற வாழ்வு முறைகளுக்கு, மகரிஷி பல அறிவுரைகளை நல்கியுள்ளார்.

> மதங்களோ, தனிமனிதர் சொத்துரிமை முறையோ
> மயக்கவாதத்தினால் பாமரர்களிடையே இதமாகப் பேசி,
> இனியும் நீடித்தற்கு இயலாது.விஞ்ஞான ஜனத்தொகை
> பெருக்கால் உதவாத முறைமாற்றி ஒத்தபடி வாழ்வை
> உயர்த்துவதே உலக நல நாட்டமுள்ளோர் கடமை
> மிதவாத முறைமூலம் உலகப் பேரரசும் மிகச்சிறந்த
> பொதுஉடைமை முறையும் அமுல் செய்வோம்.
>
> (ஞானக்களஞ்சியம் ப. 187)

என்ற நூலில் ஆட்சி முறையில் மதத்தின் நிலையை மக்களிடம் எடுத்துக் கூறும் சட்டம் உருவாக்க வேண்டும் என்கிறார்.

வளர்ந்துவரும் அறிவினைப் பண்படுத்தி வாழ்க்கையிலே போதனைகள் பல புகட்டிட வேண்டும். பின் கிளர்ந்து எழுந்த மதங்கள் மீது கேடு பரவாதபடி காத்து வரவேண்டும். இப்பொழுது மக்கள் ஒன்றாய் வாழ வேண்டிய காலமிது. எனவே மதத்தை ஒன்றிணைக்கும் தன்மையை மகரிஷி எடுத்துக்காட்டுகின்றார். செயல் விளைவை அனுபவித்துச் சிந்தித்த குறிப்புகளை, பயனுள்ள மதநூல்கள் உருவாக மகரிஷி ஒரு காரணியாக விளங்குகிறார் என்றால் அது மிகையாகாது. மேலும் அவர் பின்வருமாறு விளக்குகிறார். எந்த மதம் இறையுணர்வைத் தக்க உளப்பயிற்சி முறையில் அளிக்க வல்லதோ, எந்த மதம் செயல்-விளைவு ஞானத்தைப் பண்பாட்டு முறையில் அளிக்க வல்லதோ, அந்த மதமே உலகுக்குப் போதும் என்கிறார். அத்தகைய மதத்தால் பண்பட்ட மக்கள் எவ்வாறு வாழ்வார்கள் என்ற குறிப்பைத் தனது நூலாகிய 'பிரம்மஞானம்' என்ற பகுதியில் விரிவாகக் கூறுகிறார்.

> கன்மவினை நிகழாமல் காக்கும் மதம் ஒன்றே கடவுள்
> நெறிக்கொத்தமதம் களங்கமிலா ஒன்றாம் என்னருமை
> நண்பா நீ அறிந்திருந்தால் கூறு இத்தகைய உயர்
> மதத்தை எல்லோரும் ஏற்போம்
>
> (பிரம்மஞானம், ப. 80)

என்று உயர் மதம் மனிதனுக்குப் பயன் உள்ளதாக இருக்க வேண்டுமே தவிர பிரிவினைக்கு வழி வகுக்கக்கூடாது என்கிறார்.

உலகம், நீர், காற்று, வெயில் அனைத்துமே எல்லாருக்கும் ஒன்றுதான். 'மதம்' என்ற வாழ்க்கைநெறியில் மற்றும் ஆட்சி முதலிய துறைகளில் பலவகைப்பட்ட பிரிவுகள் இனி அவசியம் தானா? என்று

மக்கள் சிந்திக்க வேண்டும் என்கிறார். மக்கள் இந்தச் சிந்தனை உணர்வோடு விடை காண்பதும், செயல் புரிந்து பயனை அனுபவிப்பதும் இன்றியமையாத தேவையாகின்றது என்கிறார். தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படும் மனிதன் வாழத்தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரையில் அவன் வாழ்வுக்கு வழிகாட்டவேண்டிய அவசியம் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாத் தொழில்களிலும் தேவையாகவே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற காலமானது சிந்தனை அறிவைச் செயல்படுத்தி நலம் பெறத்தக்க நல்ல வாய்ப்புகளை அமைத்துக் கொடுப்பது அரசியல்முறையால்தான் முடியும் என்கிறார்.

'மனிதன் யார்? மதம் என்பதன் பொருள் என்ன? மனிதனுக்கும், மதத்திற்கும் என்ன தொடர்பு? மனிதனுக்கு மதம் தேவையா? மதத்திற்கு மனிதன் தேவையா? என்ற உண்மைகளை - மதத்தைப் பின்பற்றி நடக்கக்கூடிய மக்களும், மதத்தைப் போதித்துக் கொண்டிருக்கக்கூடிய தொண்டுள்ளம் பெற்ற பெரியோர்களும் - விளக்கமாக ஐயமின்றித் தெளிந்து கொள்வது அவசியம் என்கிறார். அரசியல் ஆட்சியில் 'மதம்' நல்லிணக்கம் பெறுவதற்கான வழிகள் அதிகம் என்கிறார்.

ஆட்சி, மதம், பொருளாதாரம் அனைத்தும் வெவ்வேறாக இருக்கத் தேவையில்லை. நாட்டுக்கு நாடு, ஓர் இடத்திற்கு மற்றொரு இடம் வாழ்க்கை முறையில் மிக முக்கியமான மதம், ஆட்சி, பொருளாதாரம் இவையெல்லாம் ஒன்றாக, ஒரே மாதிரியாக இருந்தால் போதும். இதனால்தான் உலக ஆட்சி வேண்டும் என்கிறார். அதன்மூலம் போருக்கு முடிவு கட்டி மனிதகுலம் வாழவேண்டும் என்ற பெருவிருப்போடு மதநல்லிணக்கத்திற்குத் தேவையான உண்மைகளையும் சீர்திருத்தங் களையும் 'வேதாத்திரியம்' என்ற நூலில் தொகுத்தளித்துள்ளார்.

மனிதஇனத்திற்கு மதம் ஒன்று போதாதா? பல மதங்கள் தேவைதானா? அப்படி மதங்கள் பிரிந்திருப்பதற்கு, பலவாக வளர்ச்சி பெற்றிருப்பதற்கு என்ன காரணம் என்பதை ஆட்சியாளர்கள் கண்டு கொள்ள வேண்டும் என்கிறார். இதற்கு மகரிஷி விடை பகர்கிறார். இயற்கை என்பது' பிரபஞ்சத் தோற்றத்தில் அடிப்படையான விண் நிலையில் இருந்து மனித இனம் வரையில் வளர்ச்சி பெற்ற உண்மைகளை உள்ளடக்கியதாகும். இயற்கைக்கு மூல ஆற்றலாக மனிதஇனம் கண்டுகொள்ளப் பேராற்றலைத் தெய்வம் என்று கூறுகிறோம். இன்று உலகில் எத்தனை தெய்வங்கள் என்ற பேராற்றலைச் சிதைத்துப் பல தெய்வங்களாக்கி விட்டோம். ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் நம்பிக்கைகொண்டு மனிதஇனம் பிளவுபட்டுவிட்டது என்கிறார். ஆகையால் மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படையாக தெய்வநிலை ஒன்று போதும். இதைத் தனி நபர் யாரும் செய்ய முடியாது.

அரசியல் தலைவர்களால் மதத்தலைவர்களால் மத நல்லிணக்கத்திற்குப் பாடுபட முடியும் என்கிறார். இறுதியாக அவர் கூறுகையில் ஆட்சியாளர்கள் அறம் புரிந்தால் வையமெலாம் மாண்பு பெறும் என்று ஆட்சியில் மதம் பெறும் தன்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

## மகரிஷியின் சகோதரத்துவம்

உலகில் பிறந்தார் அனைவரும் சகோதரர். தங்களுக்குள் பிரிவுச் சண்டைகளிட்டுப் பிரிந்து நிற்றல் கூடாது என்று மகரிஷியின் உள்ளம் விரும்பியது. அவரது உள்ளம் உலகம் தழுவிய உள்ளமாகும். உலகத்து மனிதர்களெல்லோரும் ஒரே சாதி. எல்லா மனிதரும் ஒரே வகுப்பு, அனைத்து மனிதரும் சகோதரர் என்ற கொள்கையைத் தம்நூல்களின்வழி உணர்த்தியுள்ளார்.

> உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித சமுதாயத்தில் நாம் ஒவ்வொருவரும் ஓர் உறுப்பினரே! நம் ஒவ்வொருவரிடத்திலும் வியத்தகு முறையில் இயற்கை அமைப்பும் நியதியும் சிறந்து விளங்குகின்றன. ஆறாவது அறிவின் சிறப்பான பண்பாடும் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு அளவில் ஓங்கி இருக்கிறது. நாம் வாழுகின்ற உலகமும் அது சுற்றிச் சுற்றி வந்து கொண்டேயிருக்கின்ற இடமாகிய மையத்தில் இயங்கும் சூரியனும், இதுபோன்று கோடிக்கணக்கில் வானவெளியில் மிதந்து உருண்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற சூரிய நட்சத்திரங்களும் சேர்ந்த ஒரு கூட்டுக்காட்சியே பேரியக்க மண்டலம் என்கிறோம்.

அதேபோன்று மனிதன் வெவ்வேறு இடத்தில், சமயத்தில், மதத்தில் பிறந்தாலும் 'மனிதன்' என்ற பண்பாட்டு நிலையில்தான் அழைக்கப்படுகின்றான். ஒட்டுமொத்த மனிதர்களையும் 'மக்கள்' என அழைக்கின்றோம். எனவே இதில் பிரிவு பேதம் கூடாது? என்று 'இறையுணர்வும் அறநெறியும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே தன் சகோதரத்துவ நோக்கில் குரல் கொடுக்கும் மகரிஷி உலகில் உள்ள மக்கள் யாவரும் ஒரு குடும்பமாக- ஒரே குலமாகக் குலவி வாழ வேண்டும் என ஆசைப்பட்டார். மனிதர் யாரும் ஒரே சாதி என்ற நிலை வந்தால் எல்லாரும் சகோதரர் என்ற ஒருமைப்பாட்டு எண்ணம் ஏற்படும் என்பது மகரிஷியின் கருத்தாகும்.

இன்றைய காலத்துக்கு எது தேவை என்றால் மதபேதம் இல்லாத சகோரதத்துவ ஒற்றுமைதான். உலகில் உள்ள மக்களெல்லாம் ஒரே தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகள் நமக்குள் மதபேதம், சாதிபேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைகள்தான் இந்தக் காலக்கட்டத்திற்கு அவசியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. எல்லாம்

ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே இரத்தம், ஒரே சுடர் என அருள் தந்தை அருமையான மதநல்லிணக்கத்திற்கு விளக்கம் அளித்துள்ளார். மகரிஷி படைத்த நூல்கள் அனைத்திலும் தம் சகோதரத்துவக் கொள்கை முத்திரையைப் பதிக்க முடியுமோ அங்கெல்லாம் தம் முத்திரையைக் பதிக்காமல் விட்டதில்லை.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடினார் புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனார். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்று வேண்டினார் தாயுமானவசுவாமிகள். இந்தத் தமிழ்ப் புலவர்களின் சிந்தையிலே கருக்கொண்ட சர்வதேசியக் கொள்கைக்கு உருவும் உயிரும் கொடுத்தார் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷியால் உலக மக்கள் புத்துயிர் பெற்றுள்ளனர்.

மனித சமுதாயத்தில் போர் என்பது வாழ்வின் வளங்கள் அனைத்தையும் அழிக்கவல்லது. ஆதிகால மக்களிடம் சிந்தனை வளராத காலத்தில், அவர்கள் விலங்கினத்தைப்போன்று பிற உயிரைத் துன்புறுத்தியே வாழ்ந்த காலத்தில், அவர்கள் மத்தியில் தோன்றிய முரட்டுச்செயல்தான் போர். அக்காலத்தோடு இக்காலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் மனிதனின் அறிவு சிந்தனையில் எவ்வளவோ உயர்ந்து இருக்கிறது. நிலவுக்குப் பயணம் செய்யவும், கம்ப்யூட்டர் சாதனங்களைத் அன்றாட வாழ்வில் பயன்படுத்தவும் மனிதனின் அறிவும், வாழ்வின் வளமும் உயர்ந்து இருக்கின்றன. இப்படி உயர்ந்த நிலையிலும் போர் மனித சமுதாயத்தில் உருவாகின்றது. மக்களைச் சீர்குலையச் செய்கிறது என்றால் இதற்குக் காரணம் மதபேதம் சாதிபேதம். இது கூடாது என்கிறார். போரினால் எத்தனை மனித உயிர்கள் துன்பமடைகின்றன! நாசமடைகின்றன! என்று புற உணர்வாலும் அக உணர்வாலும் எளிதாக அனைவரும் உணர உரிமைச் சட்டங்கள் தேவை என்கிறார். எளியவரை வலியவர்கள் தாக்கித் துன்புறுத்தாமல் காக்கும் சமுதாய நலச்சட்டங்களை இவற்றை இயற்றவும், நிர்வாகம் செய்யவும் அரசியல் முறையில் சிறந்து உயர்ந்துள்ள காலம் இது. எனவே அரசியல் ஆட்சியாளர்கள் இறைநிலையை உணர்த்தி, அறநெறியைப் போதித்துள்ளார். வாழ்க்கை ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் காப்பதற்காக இக்காலத்தில் எத்தனை மதங்கள் தோன்றிச் செயலாற்றி வருகின்றன! என்பதை அறிந்து கொள்ள வேண்டும் எனவும் கூறுகிறார்.

இருந்தபொழுதிலும் பல உயிர்களை இன்னமும் வருத்தியும், கொன்றும் அவர்கள் உடமைகளை அழித்தும் நீடித்துவரும் போரும் உலகில் இருக்கிறதென்றால் ஆட்சிமுறையில் பொறுப்பின்மையும் மதத்தலைவர்களிடையே உண்மையான கடவுள் உணர்வு இன்மையும்தான் காரணம் என்கிறார். இந்த நிலைமையை மாற்ற,

ஆட்சியாளர்களும் மதத்தலைவர்களும் மதிப்புள்ள முயற்சியை எடுத்து மனிதகுலத்தைக் காப்பாற்ற வேண்டுகிறார். மதம்,ஆட்சி எனும் இரண்டு துறைகளின் தலைவர்களையும் உலக மக்கள் சார்பில் வேண்டிக் கொள்வதாகத் தம் நூலாகிய 'வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து' என்ற நூலின்மூலம் விளக்கியுள்ளார்.

## மொழி, சாதி, இனம்

மொழி, சாதி, இனப்பாகுபாடுகள் மனிதனிடம் வேறுபாடுகளை வளர்த்துவிட்டன. போராட்டங்கள் மிகுந்துவிட்டன. அதனால் மத நல்லிணக்கம் மறைந்துவிட்டது.

> ஒருவர் கருத்தைப் பிறருக்கு உணர்த்துவதற்கு
> ஓங்கியதோர் ஆர்வமே மொழிகளாகிப் பெருகி வந்துள;
> உலகமொழிகள் எல்லாம் பேசுவதற்கு அனைவருக்கும்
> சொந்தமன்றோ? அருவருப்பு எம்மொழியில்
> மேற்கொண்டாலும் பெருநோக்கில் மனிதன் வரலாறறிந்து
> பிழைதிருத்தி பெருநலமே கண்டு வாழ்வோம்.

இவ்வாறு, கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளத்தானே மொழி வேண்டும். இதில் எதற்கு விருப்பு வெறுப்புக் காட்ட வேண்டும் என்கிறார். மேலும் அவர் கூறும் மதநல்லிணக்கத்திற்கு மொழிவேறுபாட்டை ஒரு காரணமாக்குகிறார்.

மனிதர் ஒருவர் கருத்தை ஒருவர் அறியக் கொண்ட வேகமே மொழியாகத் தோன்றியது. எல்லா வகையிலும் இந்த மொழிதான் மனித இன முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. அவ்வாறு தோன்றிய மொழி இன்று பலவாக நம்மிடையே நிலவி வருகிறது. மனித குலம் ஒன்றே என்றும் அகில உலக மக்களும் ஒன்று கூடியே வாழ வேண்டும் என்றும் இப்போது விரும்பும் நிலை அவசியமாகிவிட்டது. காரணம் மனிதர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மடிவதே காரணமாகும். ஆகையால் இனிப் பலவிதமான மொழிகள் தேவையில்லை. நாம் வாழ ஒரு மொழியே போதுமானது. மனிதர் வாழ்வதற்கு ஒருவருக்கொருவர் கருத்தறிந்து கொள்வதற்கு மொழி தேவையே தவிர, மொழிகளைக் கற்பதோ? பல மொழிகளைக் கற்றுக் காலத்தை வீணாக்குவது குறிக்கோள் இல்லை என்கிறார்.

மாறாக, உலகச் சமாதான ஆட்சி தொடங்கியபின் இன்னும் மொழி அவசியமா? என்ற வினாவை எழுப்புகிறார். பல கோடி உருவங்கள் அனைத்திலும் பேதமற்று, ஊடே தொடர்ந்து நிறைந்த அரூபமாய் இருப்பதை உணர்த்துகின்றார். இடங்களுக்கேற்றபடி மௌனமாய், முயற்சியாய், இயக்கமாய், இருக்கும் ஒரு சக்தியை இயற்கை வேகத்தை அறிந்து கொள்ளும் ஆற்றலையும் ஆர்வத்தையும்

நுட்பத்தையும் தரும் உள்நாட்டப் பயிற்சியை அனைவரும் அறிந்து கொள்ள, பழகிக்கொள்ள 'சாதனை மன்றங்கள்' ஏற்படுத்த வேண்டும் என்கிறார்.

> ஒருமொழியே மனிதருக்கு வாழப் போதும் உள்ள மொழி
> பலவற்றுள் முன்னோர் சொன்ன அருமைக்கலைகள்
> அனைத்தும் மொழிபெயர்த்து ஆண்டு முப்பதுக்குள்ளே
> எழுதிக்கொள்வோம் ஒருமைத் தத்துவம் உணர்ந்து
> அன்பாய்வாழ உள்ளாட்டப் பயிற்சி வயதடைந்தோர்
> கொள்ள நிருவிகற்ப சாதனை மன்றங்கள் என்ற
> நிலையங்கள் ஆங்காங்குத் தோற்றுவிப்போம்

(உலக சமாதானம், மகரிஷி, ப. 169)

என்று மொழியால் மக்கள் பிளவுபடக்கூடாது என்கின்றார். சாதி, சமய, இன, மொழி என்ற வேறுபாட்டை மறந்து பிறர் வாழ நாம் வாழ வேண்டும் என்று எண்ணி வாழ்ந்தால் எப்பிரச்சினையும் வராது என்கிறார்.

> **குலமுதலாய் பேதங்கள் கொள்ளும் நிலைமாறி**
> **பலரும்கூடி உழைத்துப் பங்கிட்டு வாழ்ந்திடுவோம்.**

என்ற பொதுவுடைமையைப் பற்றிப் பேசுகிறார் வேதாத்திரி மகரிஷி.

> **ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்றுதேடி அலையும்**
> **அறிவிலிகாள் - பல் ஆயிரம் வேதம் அறிவு**
> **ஒன்றேதெய்வம் உண்டாம் எனல் கேளீரோ?**

ஒரே இறைவனுக்குப் பல நாமங்கள் மொழிகள் என்று தொடங்கிப் பிறகு அந்தத் தொடக்கத்திலிருந்து சற்று நழுவி, ஒவ்வொரு நாமமும் ஒரு தெய்வம் என்று எப்போது நாம் எண்ணத் தொடங்கினோமோ, என்று தொடங்கியது மனிதகுலச் சங்கடங்கள், இந்தச் சங்கடங்கள் தீர ஒரே வழிதான் உண்டு. எத்தனை நாமங்கள், ரூபங்கள் இருந்தாலும் அவை உணர்த்துகிற தெய்வம் ஒன்றுதான் என்ற சத்தியம் நம்மில் மேலோங்க வேண்டும். அனைத்து மதங்களிலும் உண்மை இருக்கிறது என்ற நமது அறிவு நிலையை இன்னும் உயர்த்தி, அனைத்து மதங்களும் ஒரே உண்மையைத்தான் கூறுகின்றன என்ற தெளிவு நம்மில் பிறந்தால் மட்டுமே மதநல்லிணக்கம் தோன்றும் என்கிறார்.

பாரதநாடு பல்வேறு மதம், இனம், மொழி, பண்பாடு தட்பவெப்பநிலை முதலியவற்றைக் கொண்டு விளங்குகின்றது. அதில் சாதிகளும் சமயங்களும் இனங்களும் மனிதனால் படைக்கப்பட்டன. மேலும் மக்களிடையே நிறவேறுபாடுகள், பொருள் உள்ளவன், பொருள் இல்லாதவன், ஆண்பெண் எனப் பல்வேறு வேறுபாடுகள் நிறைந்து உள்ளன. இவை அனைத்திலும் வாழும் ஒரே சமயம் மனித சமயம்

ஒன்றுதான் என்ற உண்மையை மக்கள் உணர வேண்டும். இதை உணராமல் நீ வேறு சமயம் நான் வேறு சமயம் என்று வீணாகப் பேசித் திரியாமல் ஒற்றுமையாக, ஒருவருக்கொருவர் உற்ற துணையாக வாழவேண்டும் ஒருவருக்கொருவர் சமய மதபேதம் இல்லாது வாழ வழி வகுக்கின்றார் அருள் தந்தை மகரிஷி. இந்தியாவில் சாதி என்பது தொன்றுதொட்டு வந்த ஒரு சமூக அமைப்பாகும். பல்வேறு இனத்தினிடையே வெறுப்புணர்வும், உயர்வு தாழ்வென்ற ஒவ்வாத தன்மையும் பண்டைக்காலந்தொட்டே இருந்து வந்திருக்கின்றன.

சங்ககாலத்தில் செய்தொழில் அடிப்படையில் சாதி இனங்கள் உண்டாயின. ஆனால் இன்று சாதிகளின் அடிப்படையில் தொழில் செய்கின்ற நிலைமை உருவாகிவிட்டது. நாகரிகம், பண்பாடு அறிவியல் வளர்ச்சி என முன்னேறிக் கொண்டிருக்கும் மக்களிடையே சாதி, இன வேறுபாடு தழைத்தோங்கிக் காணப்படுகிறது. இப்படிச் சாதி இனச் சண்டைகள் இட்டுத்திரியும் மக்களைத் தூய்மைப்படுத்தும் மனம் கொண்டவர்தான் அருள்தந்தை மகரிஷி. அவர் சமயம் பற்றியும் சாதி மதம் பற்றியும் தம் படைப்புகளில் விரிவாகப் பகர்கின்றார். ‘சமயம்’ இந்தியாவில் மனிதனைக் கட்டுப்படுத்தும் ஒரு கோட்பாடு அன்று. வாழ்க்கையின் பல்வேறு நிலைக்கும் ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு நிலைக்கும் ஏற்ப மனித நடத்தையை அமைத்துக்கொள்வதற்கு உதவியாய் அமைந்த ஒரு கருதுகோளாகத்தான் கருதவேண்டும். பிற மதங்கள் மதம் சார்ந்த ஒரு சமுதாய அமைப்பைத் தோற்றுவிப் பதற்காக மிகுந்த போராட்டங்களையும் அன்பற்ற வழிமுறைகளையும் கைக்கொண்டிருந்தன. இதற்கெல்லாம் மகரிஷி மதநல்லிணக்கப் பார்வையில் விளக்கம் தருகிறார். ‘சமயம்’ என்பதற்கு விளக்கம் தருகின்றபோது ‘சமயம்’ என்பது வெறும் குறிகளும் அடையாளமும் அன்று என்கிறார். சமயம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பது. மனித மனத்தின் மாசை அகற்றிப் பண்புடையவனாய், ஒழுக்கமுடையவனாய்ப், பிறர்க்கும் பயன்படுவனவாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும். சமயம் என்பது கடவுள் மனித வாழ்வு என்ற இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பினையும், இவ்வாழ்விலிருந்து கடவுளை அடையும் நெறியாதென்பதையும் புகட்டுவதாகும் என்று சமயத்திற்கு விளக்கம் தருகிறார்.

‘ஆன்மிகம்’ என்பது சமயச் சார்பற்றது. அதாவது எந்த ஒரு மதத்துக்கு மட்டும் ஆன்மிகம் சொந்தம் இல்லை. எல்லா மதத்துக்கும் பொதுவானது என்று கருதவேண்டும் என்கிறார். ஆன்மிகம் இல்லாமல் சமூகம் வாழ முடியாது. இந்த ஆன்மிகத்தை மதத்தில் இருந்து கொண்டோ இல்லாமலிருந்துகொண்டே மனிதநேயத்தைத் தேட வேண்டும் என்கிறார். இதனால் எல்லா மதங்களையும் ஒன்றாகக் காணமுடியும் என்று நம்புகிறார். மதத்தை ஒன்றாக இணைத்துவிட்டாலே

மதநல்லிணக்கம் பிறந்துவிடும் என்கிறார். முதலில் மதநல்லிணக்கம் என்பது என்ன? என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். மதநல்லிணக்கம் என்பது பிறமதங்களைச் சகித்துக் கொள்வது ஆகும். அதாவது மற்ற மதங்களின் கருத்துகளையும் ஏற்றுக்கொள்வது ஆகும். ஏற்றுக்கொள்வது மட்டும் அல்லாது கருணை காட்ட வேண்டும். அத்தோடு அம்மதத்தினரோடு அன்பு பாராட்டி ஒன்றுபட வேண்டும் என்கிறார். நதிகள் அனைத்தும் கடலில் ஒன்றாகக் கலப்பதுபோல் சமயங்கள் அனைத்தும் ஒரே சமயமாக மொழியாக, மதமாகக் கலக்கும் பெருநிலையை உணர்ந்து சமயங்களிடையே இனிய ஒற்றுமை காண மகரிஷி விழைகிறார். எனவே மகரிஷியின் ஆன்மிகப் பார்வை ஏனைய பக்தி நெறியில் காணப்படும் ஆன்றோர்களிலிருந்து சற்று வேறுபட்டதாகவே காணப்படுகிறது எனலாம்.

## மதத்தில் ஒப்பியல் பார்வை

மதத்தின் கொள்கையில் விவேகானந்தரும் அருள்தந்தை மகரிஷியும் ஒன்றுபடும் நிலையை அவரவர் கருத்துகளின்வழி அறிய முடிகிறது. மனித இனத்தின் விதியை உருவாக்குவதற்காகச் செயலாற்றி வந்துள்ள, இன்னும் செயலாற்றி வருகின்ற சக்திகள் பலவாகும். இவற்றுள் மதம் என்று நாம் சொல்கிறோமே அந்தச் சக்தியைவிட வலிமை வாய்ந்தது வேறொன்றுமில்லை. எல்லாச் சமூக இயக்கங்களுக்கும் பின்னால் எங்கோ நின்று அவை இயங்கக் காரணமாக இருப்பது மதம் என்ற இந்தத் தனிப்பட்ட சக்தியே ஆகும். மனிதர்களையெல்லாம் ஒன்றாக இணைந்து வாழச் செய்யும் உணர்வைத் தோற்றுவிக்கின்ற சக்திகளுள் மகத்தான சக்தி மதம் ஆகும். இம்மதம் பல மதமாக இருக்கக்கூடாது. ஒரே மதமாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சக்தி வாய்ந்த மதக்கொள்கையில் வேதாத்திரியும் விவேகானந்தரும் ஒன்றுபடுகின்றனர்.

### வேதாத்திரி மகரிஷி

கடவுளை உருவம் உள்ளவர் உருவம் இல்லாதவர், அருவுருவமாக இருப்பவர் என்று பலவாகப் பிரிக்கிறார்கள். ஆனால் எல்லாம் ஒரே இறைவனைத்தான் குறிக்கிறது. வழிகள் பலவானாலும் எல்லா மதங்களும் ஒரே இறைவனை நோக்கியே பயணிக்கின்றன. இதற்கு இறைநெறி, பக்திநெறி என்ற வழிகள் போதும் என்கிறார்.

### விவேகானந்தர்

வெவ்வேறு பாதைகள்மூலம் நாம் ஒரே குறிக்கோளை அடையமுடியும் என்பது வேதாந்த மதத்தின் மகத்தான கருத்தாகும். இந்தப் பாதைகளை கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்று நான்குப் பாதையாகப் பிரிக்கிறார். இந்த நான்குப் பாதைகளும் கடைசியில் ஒரே

இடத்தில் சந்திக்க முடியும். இதேபோன்று எல்லா மதங்களும் எல்லாச் செயல்முறைகளும் எல்லா வழிபாட்டு முறைகளும் ஒரே குறிக்கோளை நோக்கியே நம்மை அழைத்துச் செல்கின்றன என்கிறார். எனவே மதத் தத்துவத்தில் விவேகானந்தரும் அருள்தந்தை மகரிஷியும் ஒத்த கருத்துடையவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இதேபோன்று திருமூலரோடு வள்ளலாரும் வள்ளுவரோடும் தம் மதக் கொள்கைகளில் மகரிஷி ஒத்துப்போகும் நிலையைக் காணமுடிகிறது. வள்ளுவரின் சமயக்கொள்கையில் மகரிஷிக்கு அளவு கடந்த பற்று என்றே கூறலாம். இதனை அவர்தம் நூலில் ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உத்திமியான் அறிவுடையார் பதியாய்த் தன்னை
உவந்தேற்பான் ஒருவனைத் தேர்ந்திட வள்ளுவர்
பித்தனைப் போல் மணல் முடிச்சுடன் திரிந்தார்
பேரறிவால் வாசுகி யுகித் தறிந்தாள்
வித்தையெனப் பலர் முன்னே! மாலை கைக்கொண்டாள்

(எனது வாழ்க்கை விளக்கம்)

இவ்வரிகளில் திருவள்ளுவர்மீதும் அவர் எழுதிய நூல்மீதும் எவ்வளவு விருப்பம் வைத்திருந்தார் மகரிஷி என்பது தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

அருள்தந்தை மகரிஷி தாம் சிறுவனாக இருந்தபொழுதே ஒழுக்கத்தை உயர்வாகக் கடைப்பிடித்தவர். எனவே தம் படைப்புகள் அனைத்திலும் சமுதாய மக்களுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கின்றார். வாழ்வில் ஒழுக்கம் இல்லை எனில் பண்பாடு இல்லாமல் போய்விடும் என்கிறார். இதனால் மனிதர்கள் சாதி, சமயம், மதம் என்று உள்ளத்தால் இணையாமல் போய்விடுவார்கள் என்கிறார். அனைவரும் ஒன்றே என்று எண்ணி மனம் கலந்து இன்பமாய் வாழ்வது எப்படி என்று தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஒழுக்கமும் ஈகையும் உள்ளத்தில் கொண்டால்
உயர்ந்து கொண்டே இருக்கும் அறிவுச்செல்வம்
அழுக்காறு அவா வெகுளி வன்சொல்லின்றி
அன்பூறும் பண்பாட்டின் எடுத்துக்காட்டாம்" (மனவளக்கலை)

என்று ஒழுக்கத்தின் மேன்மையைப் புகட்டுகிறார். இதனையே வள்ளுவரும் தம் பத்து குறள்களிலும் மனிதனுக்குத் தேவையான ஒழுக்கத்தைக் கூறுகிறார்.

ஒழுக்கத்தால் மேன்மை அடையும் வழிகளைப் பகுத்தறிவுடன் ஆராய்ந்து பார்த்தால் வாழ்க்கைக்கு ஒழுக்கமே துணையாகும். அதனைக் கெடாமல் காக்க வேண்டும் எனத் தன்குறளில் கூறுகிறார்.

பரிந்து ஓம்பிக் காக்கஒழுக்கம் தெரிந் துஓம்பித்
தேரினும் அஃதே துணை

என்று ஒரு மனிதனுக்கு மிகவும் தேவை ஒழுக்கம் என மகரிஷியும் வள்ளுவரும் ஒத்துப் போவதைக் காணமுடிகிறது.

இவ்வுலகில் தோன்றிய சமயங்கள் அனைத்தையும் பின்பற்றும் மனிதர்கள் தம்முள் இணக்கமாக வாழ்தலே சமய நல்லிணக்கமாகும். அடுத்தவர் மதத்தை மதிப்பதும் தன்னுடைய மதத்தைப் பற்றி நன்கு தெரிந்திருப்பதும் மனிதனுக்குத் தேவை என்கிறார் மகரிஷி. அப்படித் தெரிந்திருந்தால் மனிதன் ஒன்றுபடுவான் என்கிறார். 'மதம்' என்பது என்ன? மனிதர்களைப் பிரிப்பதற்காக அல்ல. அவை மனிதரை வாழ வைப்பதற்கும் ஒற்றுமைப்படுத்துவதற்குமே ஏற்பட்டுள்ளன என்கிறார் மகரிஷி.

## மக்கள் முன்னேற்றத்திற்கு மதம் தடை

மதவெறியும் அதனால் ஏற்படும் போருமே மக்கள் மகிழ்ச்சியாய் வாழ்வதற்கும் அமைதியாய் முன்னேறுவதற்கும் தடையாய் நிற்கின்றன. மதம் தன்னளவில் மக்கள் முன்னேற்றத்திற்கு ஒரு பெரும்தடையாய் இருக்கின்றது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் உண்மையை உணர்ந்து மாந்தர் எல்லாக் கடவுளின் மக்களான உடன்பிறப்பென்று கருதி, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று அன்பொடு கூடி வாழ்வதற்கே மதம் ஏற்பட்டது. ஆனால் இன்று மாந்தர் தம்மனம் போனவாறு மதத்தைத் திரித்துத் தம்மொடு மாறுபட்ட கருத்தினரைப் பகைத்து, அவரினின்று பிரிந்து போவதும் அவரோடு போர் புரிந்து, வெறியான மதத்தின் விளைவே ஆகும் என்று மகரிஷி தம் 'அறிஞர்களின் கடமை' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இன்று உலக மக்கள்குலம் பல சிக்கல்களுக்கு உட்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் இயற்கை இல்லை. இயற்கையின் ஆற்றலிலும் இல்லை. மாறாக மனிதன்தான் நீதிவெறி, பேராசை, பொறாமை, வஞ்சம் பிறர் பொருள் கவர்தல் என்ற செயல்கள் மூலம் தனக்கும் பிறருக்கும் துன்பங்களை ஏற்படுத்திப் போரை வளர்த்துக் கொண்டே போகிறான். இப்போர் பின் சமயச்சண்டையாக, மதச் சண்டையாக மாறுகிறது. இதற்குக் காரணமாகச் சில மதத்தலைவர்களும், சில புகழ்பெற்ற வியாபாரிகளும்தான் இதற்குக் காரணம் என்கிறார் மகரிஷி.

இதைச் சிந்தனையாளர்கள் உணர்ந்து தகுந்த சீர்திருத்தங்களின் மூலம் உலகப் பண்பாட்டைத் திருத்தி மக்கள் குலத்தை வாழச் செய்ய வேண்டும். இதற்கு முதலில் போர் என்பது அறவே இருக்கக்கூடாது என்கிறார். இதனை மகரிஷி தன் நூலில் ஒரு கவிமூலம் விளக்குகிறார்.

குற்றங்கள் செய்வோர்க்குத் தண்டனையளித்துக்
குறையின்றி மனிதகுலம் வாழவேண்டும் என்றும்
குற்றமற்ற எவரையும் தண்டனைக்குள்ளாக்கும்
கொடுஞ்செயலைத் தடுக்கவேண்டும் என்பதுதான்நீதி
குற்றமற்ற உழைப்பாளர் பெருமக்கள் தம்மைக்
கொன்றுக் குவித்திடும் கொடியக் கொலைக்களம் போர் அன்றோ

எனவே இந்தப் போர் என்னும் பழக்கம் மனிதனுக்குத் தேவை தானா? என்று மனிதர்கள் புரிந்து கொள்ளும்படியாக உண்மைநிலைகளை விளக்கி விழிப்புநிலையை ஏற்படுத்தி உள்ளார் மகரிஷி.

மதத்திற் குற்றங் களைவது எளிதன்று. எல்லார்க்கும் இயல்வதும் அன்று. இதற்குப் பரந்த கல்வியும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் பண்பாடும் பொறுமையும் உள்ளவர்களால்தான் மதத்தைச் சீர்திருத்த முடியும். மக்களாட்சியும் குடியரசும் நடைபெறும் இக்காலத்தில், ஒவ்வொருவர்க்கும் தத்தம் மதத்தைப் பரப்ப முழு உரிமையுண்டுதான். ஆனால் அதில் பொறாமையும் போரும் நிறைந்ததாக இருக்கக் கூடாது. எல்லா மதத்தையும் மதித்து நடத்தல் வேண்டும் என்கிறார்.

ஒழுக்கத்தை உயர்வாகக் கருதும் மகரிஷி ஒழுக்கத்தையே உயர் மதமாகக் கருதினார் என்பதைத் தம் நூலாகிய "ஞானக் களஞ்சியத்தில்" குறிப்பிட்டுள்ளார். இதனைத் தம் பாட்டாக எடுத்துக்காட்டியுள்ளார்.

பெற்றவர்கள் குருஅரசன் தெய்வமென்ற ஐவர்
பெருமதிப்பை உணர்ந்தறிவால் வணங்கி நலம் காண்போம்
சுற்றத்தார் தான் குடும்பம் சமுதாயம் உலகம்
சொல்லும் ஐந்து பிரிவினர்க்கும் கடமை செய்தே வாழ்வோம்
நற்றவமாய் உயிருணர்ந்து நாடிநின்று, மனத்தை
நல்முறையில் சீரமைத்து ஒழுக்கவழி வாழ்வோம்
கற்றவர்கள் கல்லாதோர் ஆண்கள் பெண்கள் வாரீர்
கருப்புவெள்ளைத் தோல்நிறத்தோர்க் குலக சமயம் ஒன்றே
(ஞானக்களஞ்சியம்)

என்று உலக சமயம் என்பது ஒன்றே என்பதைப் புலப்படுத்துகிறார்.

புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும். அது எவை எனில் போதை, போர், பொய் இல்லாப் பண்பாடாகும் என்கிறார். இவையே எந்நாட்டு மக்களுக்கும் பொதுவானது. ஏற்றதென்று உணர வைக்கிறார். எத்தகைய உயிர்கட்கும் இன்பநிலை காத்து, இறையுணர்வில் இணைந்து அறம் ஆற்றி வாழும் நிலை வந்தால் மதத்தில் வேறுபாடு இருக்காது என்கிறார். இதற்கு உத்தமர்கள் உலக நல ஆர்வமுள்ளோர், ஒன்றிணைந்து செயலாற்றினால் உலகம் சீர்படும். ஒற்றுமையுடம் வாழும் என்கிறார்.

உலகம் அறிவியலின் உச்சம் காண விழைகிறது. அதில் மக்கை அமைதியும் நிறைவும் பெற்று வாழ இன்றைய இளைய தலைமுறையைத் தயார்படுத்த வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்பெறும் கல்வி எதிர்காலச் சூழ்நிலையை எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றதாக அமைய வேண்டும். எழுத்தறிவுடன் உடல் நலத்தையும் உயர்ந்த மனவளத்தையும் பெறுகின்ற கல்வியாக இருக்க வேண்டும். மனித வாழ்வில் நட்பு நலம் காத்து வாழ இளம் பருவத்திலேயே ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறநெறியைப் பெற்று வாழும் கல்வி வேண்டும் என்கிறார் அருள் தந்தை மகரிஷி. இதற்கு முதலில் இறைஉணர்வு வேண்டும் என்கிறார்.

இறைநிலையை உணர முதலில் பிரம்ம ஞானத்தைக் கற்க வேண்டும். மதங்களிளெல்லாம் சொல்லப்படுகின்ற இறைவனும் அறிவியலும் தேடிக்கொண்டிருக்கின்ற எல்லாம்வல்ல ஒருங்கிணைப்புச் சக்தியும் ஒன்றே என்ற தெளிவை 'மனவளக்கலையின்'மூலம் பெறலாம். இந்த மனவளக்கலைப் பயிற்சியை மாணவப் பருவத்திலே கற்றுக் கொடுக்க வேண்டும் என்கிறார். வெவ்வேறு உருவங்களாக வேறுபட்டுத் தோன்றுகிற உயிரினங்களையும் அவற்றை அடக்கியுள்ள பிரபஞ்சத்தையும் ஒரே இறைவனின் தோற்றங்கள் என்று உணர்வதே ஆன்மிக அறிவு ஆகும். இத்தகைய இறைநிலையைத் தெளிவாக ஐயமறத்தெரிந்து உணர்தலே மெய்ஞ்ஞானம் என்பதை எடுத்துரைக்கின்றார் மகரிஷி. இப்படி மெய்ஞ்ஞானத்தை உணர்ந்தால் மனிதர்களுக்குள் சாதிபேதம் தோன்றாது என்கிறார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டும் தருகிறார்.

> வினைப் பதிவுகளின் கூட்டு மலர்ச்சியே மனிதனின்
> தோற்றம் மனிதனுக்கு மனிதன் என்ன வித்தியாசம்
> என்றால் வினைப்பதிவினாலான அவன் தன்மைகள்தான்
> உருவ அமைப்பு, குணம், அறிவிலுயர்வு கீர்த்தி
> உடல் வலிவு, சுகம் செல்வம் இந்த எழில்தான்
> மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு இருக்கிறான்.

(இறையுணர்வும் அறநெறியும், ப. 27)

இவ்வாறு வேறுபடும் மனிதன் நாளடைவில் மதத்தில் வேறுபடுகிறான். மதத்தில் வேறுபடாமல் இருக்க மனத்தை முதலில் வளப்படுத்த வேண்டும் என்கிறார்.

அனைத்து மதங்களும் 'அறிவு' எனும் ஒரே கடவுளைப் பின்பற்ற வேண்டும். மனித இனத்தின் பன்முக வளர்ச்சிக்காக உலகம் முழுதும் ஒரே மொழி வழக்குப் பின்பற்றப்பட வேண்டும் மக்களிடையே நிலவும் உறவுநிலை உண்மையாக இருக்க வேண்டும். இதற்கு வழிகாட்டும் முயற்சியாகவே மகரிஷி தமது படைப்புகளில் ஒன்றாகிய 'மதமும்

மனிதனும்' என்ற நூலில் மனிதனுக்கு 'மதம்' தேவையில்லை என்று விளக்குகிறார். இன்றைய தலைமுறையினர் எளிதில் உணர்ச்சிவசப்படுகின்றனர். கோபம், கொலைவெறி, பழிக்குப்பழி என்று நாளும் வளர்ந்து கொண்டே வருகின்றது. இதனால்தான் சாதிப் பிரிவுகள் தோன்றுகின்றன. பின் கடவுள் பெயரால் மதத்தைப் பார்க்கின்றான். இந்நிலைமையை வளரவிடக் கூடாது என்ற நோக்கில் அழகான அறிவியல்முறையில் ஒரு பயிற்சியை இன்று உள்ள இளைய தலைமுறையினர்க்குச் சொல்லிச் சென்றுள்ளார். அதுதான் 'மனவளக்கலை' ஆகும்.

மனவளக்கலையில் உயிரை மேலே எழுப்பி அதன்மீது மனம் வைத்து பழகுவதுதான் குண்டலினி யோகம். இச்சக்தியின் மேலே மனத்தை வைத்து உயிரில் அறிவை ஒடுக்கும் பயிற்சிதான் மனவளக் கலைப்பயிற்சி ஆகும். இதை உணரும்போது உயிர் மையத்தில் அறிவாக இருப்பதுதான் படர்க்கையில் மனமாக இருக்கிறது என்ற உண்மையை உணரப் பெறும் அறிவுதான் இறைநிலை என்கிறார் மகரிஷி.

ஐயப்படாது அகத்து உணர்வானைத்
தெய்வத்தொடு ஒப்பக் கொளல்
(இறையுணர்வும் அறநெறியும், ப. 45)

என்று இறைவனை மனத்தில்தான் உணர முடியும் என்கிறார். வெறும் உருவங்களைக் கொண்டு இறைவனைக் காணலாம் என்று மதபேதம் கொள்ள வேண்டாம் என்கின்றார். இந்த விளக்கங்களை எல்லாம் சான்றாக எடுத்துக்கொண்டு மனவளக்கலையின் பயிற்சிமூலம் இறைவனை அடைந்து உண்மையை உணர்ந்து நடந்து கொண்டாலே இளைஞர்களிடம் சாதி, மத பேதம் இருக்காது என்று அறிவியல் நோக்கில் மகரிஷி எடுத்தியம்புகிறார்.

மேலும் இன்றைய இளைய தலைமுறைகளுக்கிடையில் சில வித்தியாசமான கேள்விகளும் எழுவது உண்டு. சில சமயம் அவர்கள் வாதிடவும் செய்கிறார்கள். மதம் என்பது வேறு வேறு இல்லை என்றால் 'இசுலாமியம்', 'சமணம்', 'வைணவம்', 'சைவம்' என்று பிரிவுகள் ஏன் என்கின்றனர்? இத்தனை மதங்கள் வேறுபட்டதில்லையா? வேறுபடாதா? என்கின்றனர். இதற்கெல்லாம் அருள் தந்தை மகரிஷி பதில் தருகிறார்.

கடன் என்ற ஒரு வார்த்தையிலிருந்துதான் கடமை என்றாயிற்று. அதேபோல 'Due' என்ற ஆங்கில வார்த்தையிலிருந்துதான் 'Duty' என்பதும் வந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே ஒழுக்கம், கடமை, ஈகை இம்மூன்றும் சேர்ந்ததுதான் 'அறநெறி'. 'அறம்' என்பதே நல்ல வாழ்க்கைக்கேற்ற, மனித தன்மைக்கேற்ற எல்லாரும் இன்பமாக வாழ ஒரு நெறி. ஆகவே இதைத்தான் 'அறம்' என்று சொல்கிறார்கள். இன்பமே பயக்கத்தக்க, துன்பம் விளையாமல் காக்கத்தக்க எந்த ஒரு நெறியோ

அதுதான் அறம் எனப்படுகிறது. அறத்திற்கு மூன்று உறுப்புக்கள் உண்டு. ஒழுக்கம், கடமை, ஈகை இம்மூன்றும் இளைஞர்களே எங்கு, அதாவது குடும்பம், நாடு சமுதாயத்தில் இருந்தாலும் குறைபாடும் சிக்கலும் துன்பமும் வந்து சேரும். ஒரு தனி குடும்பமாகட்டும், ஒரு நாடாகட்டும் மேற்கூறிய ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றிலும் சிறந்து விளங்குகின்றனவோ அந்த அளவிற்குத்தான் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். எனவே இளைஞர்களே மதத்தைப் போதிப்பவர்களின் போதனையில் வீழ்ந்து விடாதீர்கள் என இன்றைய இளைஞர்களுக்கு மகரிஷி அறிவுரை கூறியுள்ளார்.

ஆகவே வாழ்க்கை முறையைச் சீர்திருத்திய பெரியோர்களின் சீர்திருத்தத்தைப் பின்பற்றியே இளைஞர்களும் மக்களும் வாழ்கின்றனர். அதனால்தான் இன்னார் மதம் என்று சொன்னார்களே தவிர 'மதம்' என்பது இரண்டு உண்டா என்றால் இல்லை. எந்த மதத்திலேயும் இறைவழிவாடு உயிர்வழிபாடு என்ற இரண்டைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்கிறார். ஆகையால் 'மதம்' என்றால் என்ன? என்பதை ஆராயாமல் ஒழுக்கம், கடமை, ஈகையைப் பின்பற்றினாலே 'மதம்' உலகத்தில் ஒன்றுதான் என்பது புரிந்துவிடும். ஆகவே மனிதன் நலமாக வாழ வேண்டும் என்றால் ஒருவருக்கொருவர் உதவியும் ஒத்தும் தன் செயலை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு இயற்கையை உணர்ந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். இப்படி உணர்வதற்கு இறைவழிபாடும், அறவழிபாடும் முக்கியம் இவ்விரண்டும்தான் என்றைக்கும் நிலைத்துநிற்கும் என்கிறார். ஆனால் இன்று அறிவியல்யுகம் வந்து விட்டதால் மனிதர்கள் கேள்விகள் எழுப்பிக்கொண்டு தடுமாறுகிறார்கள் என்று இன்றைய இளைஞர்களுக்கு அறிவுரை வழங்குவதோடு மதத்தைப் பற்றியும் அறிவியலைப் பற்றியும் பேசியிருப்பதன்வழி மகரிஷியின் கொள்கையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

மதமும் இறைஉணர்வுச் சடங்குகளும்

விதையிலிருந்து மரம் எப்படி வருகிறது (அதாவது பயிரிடுவது) என்பதுதான் மனிதன் முதன்முதலில் கண்ட அறிவியல். அதிலிருந்து சிறுகச் சிறுக அறிவு பெருகியபோது, அந்த பெருக்கமான அறிவாற்றல் தன்னிடம் இல்லாத மற்ற பொருட்களைப் பற்றிச் சிந்திக்கிற அளவுக்கு விரிந்து இயங்கக்கூடிய அளவுக்கு வளர்ந்தது. அதற்கு முன்புவரை தன்னுடைய பசி, அதை முடித்துக்கொள்கிற வரைக்கும்தான் இருந்தது. அதன் பிறகு விரிந்து இன்னொரு பொருளோடு செயல்படக்கூடிய ஆற்றலை உணர்கிறபோது,

பிறஉயிர் உணர்தலாகப் பெற்றிடும்
சுகதுக்க இயல்பினை
உறவுகொண்டுள்ளத்தால் யூகித்து
உணர்ந்திரங்கி உதவும்
சிறந்ததிருப்பம் அறிவில் சிந்தனையில்
முதல் உலகில் பெற்ற நாள்
அறம் தோன்றிற்று மதமாம்; அவை
வளர்த்தோர் பெயர்களினால் பலஆயிற்று

உறவுகொண்டு உள்ளத்தால் உணர்ந்து இரங்கி உதவும் முதல் ஏதோ ஒரு சீவன் வருந்திக் கொண்டிருக்கிறது. பசியினாலேயோ ஏதோ ஒரு காரணத்தினாலேயோ பிறர் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துன்பத்தின் அளவை இவன் அறிவின் முழுமைத் தன்மையினால் உணர்ந்து கொள்ளமுடிந்தது.

உறவுகொண்டு உள்ளத்தால் உணர்ந்து இரங்கி நான் என்ன செய்ய முடியும் என்று பார்க்கிறான். உணர்ந்து இரங்கி இரக்கம் கொண்டுஉதவும் சிறந்த திருப்பம் அவனுக்கு ஏற்படுகிறது. உதவி செய்து தன்னால் முடிந்ததைச் செய்து அத்துன்பத்தை போக்க அவன் முற்படுகிறான். இப்படி முற்பட்ட நாள் முதலே அறம் பிறந்தது. அதுதான் விரிந்து மதமாக மாறியது. அதை வளர்த்தோர் பெயர்களில் பலவாயிற்று என்று மகரிஷி குறிப்பு கொடுக்கிறார்.

பிற உயிர் உணர்தலாகப் பெறும்போது அந்த உயிர்படும் துன்பத்தைத் தாங்க முடியாமல் தான்படும் துன்பமாகவே கருதுகிறார். மகரிஷி இதை ஆறாவது அறிவு என்கிறார். அந்த ஆறாவது அறிவைக் கொண்டு மனிதன், பிற உயிர் துன்பப்படும்போது அதைத் தீர்க்க வேண்டும் என்று மகரிஷி விரும்புகிறார். எனவே 'கடவுள்' என்றால் ஒருவர்தான். அவரைப் பல்வேறு பெயர்கள்இட்டு அழைக்கின்றோம். பல்வேறு சொருபங்களாகப் பார்க்கிறோம். எல்லா மதங்களுக்கும் ஆதாரம் கடவுள். தண்ணீரை வெவ்வேறு சொற்களால் குறிப்பிடுவதுபோலக் கடவுள் வெவ்வேறு சொற்களால் பெயரிட்டு அழைக்கப்படுகிறார். பெயர் எதுவானாலும் சக்தி ஒன்றேதான். வேற்றுமையில் ஒற்றுமை என்பது எல்லோருக்குமே உரிய கோட்பாடு ஆக வேண்டும். எல்லா தெய்வங்களையும் ஒரு பெயரிட்டு நாம் வழிபட வேண்டும் என்கிறார்.

## வேதாத்திரியம் தரும் இறைஞானம்

இறையைப் பற்றிய மகரிஷியின் பார்வை முற்றிலுமான ஒரு அறிவியல் பார்வை. சொன்னால் மட்டும் நம்பாதே. சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய் இரு என்பதே அவரது அறிவுரை. மகரிஷியின் இறைத் தத்துவம் சுத்த அத்வைதம் இனிமையாகவும் வேதாந்தம் என்றும்

சைவ சித்தாந்தம் என்றும் சித்தர்கள் நெறி என்றும் நாம் காண்கிற பல்வேறு தத்துவங்களின் சாரத்தைப் பிழிந்து அறிவியலோடு கலந்து மகரிஷி படைக்கும் ஆன்மிக விருந்துதான் இவரது சுத்தநெறித் தத்துவம் ஆகும்.

தத்துவத்திற்கு அறிவியல்பார்வை தருவது அவ்வளவு எளிதல்ல. தத்துவத்தை அறிவியல்பூர்வமாக உணரும் துணிவும் மெய்ஞ்ஞானத்தை தத்துவார்த்தமாக அலசி ஆராய்கிற அறிவுத்திறனும் கொண்ட ஒரு மகான்தான் இந்த இணைப்பைத் தரமுடியும். அதைத் தருபவர் நம் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி ஆவார்.

சிந்தையும் செயலும் இணைந்ததே மனிதம் என்பார்கள். சிந்தைக்கு வேண்டியது ஒருமைப்படுத்துகிற இறைநெறி. செயலுக்கு வேண்டியது அன்பில் விளைந்த அறநெறி. சிந்தை மூலத்தை நினைக்க வேண்டும்; செயல் ஞாலத்தை நினைக்க வேண்டும். சிந்தையின் ஞானமே செயலின் சத்தியம். மூலத்தைப் பற்றிய முழுமையான அறிவு சிந்தையில் இல்லையேல் ஞாலத்தைப் பற்றிய ஞானம் கிடைத்தல் அரிது. ஞானம் இல்லா வாழ்வு இருட்டறையில் நடப்பது போன்று என்கிறார். எனவே ஞானமின்மையே சிக்கலின் தொடக்கமாகும். இந்தச் சிக்கலினைத் தீர்க்க இறைஞானம் வேண்டும் என்கிறார். இதற்கு ஓர் அருமையான சுவையான எடுத்துக்காட்டைத் தருகிறார்.

அருமையான இரு சக்கர வாகனத்தில் அமர்ந்து அலுவலகம் செல்கிறேன். விரைவாகச் செல்லும்போது உள்ளேயிருக்கின்ற ஒரு கம்பி சற்று விலகிவிடுகிறது. வாகனம் நின்றுவிடுகிறது. அதைப் பற்றிய ஞானமிருந்தால் சற்றுப் பிரித்துப் பார்த்து உள்ளே ஏற்பட்ட விலகலைத் தெரிந்து விலகிவிடலாம்; பின் வண்டி மறுபடியும் ஓடத் தொடங்கிவிடும். ஆனால் எனக்கு ஞானமில்லாதபோது, வண்டியைத் தள்ளிக்கொண்டு போகிறேன். காலதாமதம் ஆகிறது. எனது வண்டியைப் பற்றிய ஞானம் எனக்கு இல்லை என்றால் உனது வண்டியை வைத்து என்னை மற்றவர்கள் ஏமாற்றிவிடுவார்கள். வண்டி வேண்டும் அதோடு அதைப் பற்றிய ஞானமும் வேண்டும். வண்டியைக் குறைகூறக்கூடாது. அதைப் பற்றிய ஞானம் இல்லாததே உண்மையான குறை. மனைவியைப் பற்றிய ஞானமில்லாததால், மனைவியினால் ஏமாற்றமும் தொல்லையும் வருகிறது என்கிறோம். மகன், மகளைப் பற்றிய ஞானமில்லாதபோது அவர்களால் சஞ்சலப்படுகிறேன் என்கிறோம். மொழியைப் பற்றிய ஞானமில்லாததே மொழித்தகராறுக்குக் காரணம். இதேபோன்றுதான் மதத்தைப் பற்றிய ஞானமின்மையே மதக்கலவரங்களுக்குக் காரணம். நான் வணங்குகிற தெய்வத்தை வைத்தே என்னை ஏமாற்றி விடுவார்கள் என்கிறார். இவ்வாறு மகரிஷி தரும் இறைத்தத்துவம் சிந்தனையைப் பெருக்கிச் சிக்கல்களைப் போக்க வைப்பது ஆகும்.

எந்த ஒன்று எல்லா இடத்திலும் இருக்கிறதோ அதுதான் தெய்வம் என்ற சத்தியத்தின் சாரத்தை உணர்ந்தபின் அடுத்த கேள்விக்கு வருகிறார். எல்லா இடத்திலும் தெய்வம் இருக்கிறார் என்றால் எல்லா இடத்திலும் இருப்பதைக் கண்டுபிடிப்பதில் என்ன சிரமம்? என்கிறார். ஒரு நண்பனிடமிருந்து நேற்று வந்த கடிதத்தைத் தேடுவதில் அர்த்தம் இருக்கிறது. அதை எங்கோ வைத்துவிட்டேன். வைத்த இடத்தில்தான் அது இருக்கும். அதைத் தேட வேண்டும் என்பதில் அர்த்தம் உண்டு. எல்லா இடத்திலும் இருக்கின்ற இறைவனை தேட வேண்டிய அவசியம் இல்லை. இருப்பதை உணரத்தான் வேண்டும் என்கிறார் மகரிஷி. இதுதான் மகரிஷியின் இறைத்தத்துவம். இந்த இறைத்தத்துவம் கிட்டிவிட்டால் 'மதம்' அடிபட்டுப் போய்விடுகிறது.

இந்த உண்மையை புலன் உணர்வுகளுக்கு எட்டாததனால்தான் மனிதமனத்தால் 'மதம்' ஒன்றே என்று தெளிவாக உணரமுடியவில்லை. மனிதன் முதலில் இறைநிலையை வழிபடும் நிலையை உணரவேண்டும் இதற்கு அவர் விளக்கமளிக்கிறார். இறைநிலையைப்பற்றி கீழ்வருமாறு கூறுகிறார்.

அங்கிங் கெனாதபடி எங்கம் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளாடு நிறைந்தது எது? தன்னருள்வெளிக்
குள்ளே அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கு இச்சை வைத்து உயிர்க்குயிராய்த்
தழைத்தது எது?....

என்ற தாயுமானவரின் பாடல் மகரிஷியின் மனத்துக்குள் ஆழப் பதிந்து விட்டது. இதனால் இக்கேள்விகளுக்குப் பதில் தேட முற்பட்டார் அவ்விடை தான்

இயற்கை என்பதே தெய்வம் சுத்தவெளி பூரணம்
இதுவேதான் பேராற்றல், காலமுடன் பேரறிவுமாகும்

என்று எல்லையற்ற இறை வெளியே தெய்வம் என்றார். இதை உணர்ந்த மனிதன் பல தெய்வம் பல மதம் என்று பேசமாட்டான். மதம் மனிதனைக் கொன்றுவிடும். மதம் பிடித்த யானை யாருக்கும் கட்டுப்படாது. அதேபோல் 'மதம்' என்ற நிலைக்கு ஆட்பட்டவன் தன் இனத்தவர்களையே அழித்து விடுவான். 'மதம்' யானைக்குப் பிடித்தால் தப்பி விடலாம் மனிதனுக்குப் பிடித்தால் ஆபத்து என்கிறார். இக்காலத்தில் மனித வாழ்க்கை முறையைப் பற்றி நாம் உண்மையாகச் சிந்திப்போம். பெருமதிப்பு வாய்ந்த ஆற்றலையும் நேரத்தையும் வீணாக்கித் துன்பத்தையும் அழிவையும் விளைவிக்கக்கூடிய பல செயல்கள் இவ்வுலகில் ஏன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன? இந்த அழிவிலிருந்து மனிதஇனத்தைக்

காப்பாற்றுவதற்கு இப்போது உலக விரிவான ஓர் ஆன்மிக விழிப்புணர்ச்சி 0உண்டாக்கப்பட வேண்டுமே தவிர 'மதம்' பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்கிறார். இப்படிப் பேசும் அருள்தந்தை மகரிஷி மதத்திற்கு எதிரானவர் அல்ல. 'மதம்' தேவை அம்'மதம்' 'ஒன்றே' என்று உணரவேண்டுமே அன்றிப் பல மதம் வேண்டாம் என்கிறார்.

தனிமனித மேம்பாடும் சமூக உறவும் மனவள அடிப்படையில் அமைந்தவை. மனிதர்களுக்கு இரண்டு கால்கள், இரண்டு கைகள் மூலம் ஒன்றுதானே. அதேபோல் ஒரே மனம் படைத்த மனிதன் ஏன் இரண்டு மதங்கள் மூன்று மதங்கள் எம்'மதம்' சிறந்தது. உம்'மதம்' தாழ்ந்தது என்று ஏன் சிந்திக்க வேண்டும். ஒரே முகம் கொண்ட மனிதன் ஓரே மனம் படைத்த மனிதன் மதத்தையும் ஒன்றே என்று எண்ண வேண்டும். அப்பொழுதுதான் சமூகம் சிறக்கும் நாட்டில் ஒற்றுமை தழைக்கும் என்கிறார். வாழ்க்கையில் விளைநிலமாகிய மனத்தில் எண்ணம் சொல், செயல் ஆகிய முத்தொழிலும் பிறக்கின்றன. எங்கும் செல்லும் வல்லமையுடைய எண்ணத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் அவசியம். அப்பொழுதுதான் அனைத்து மக்களும் ஒன்றே என்று எண்ணமுடியும். அனைத்து தெய்வமும் ஒன்றே என்று எண்ணமுடியும். இப்படி அனைத்தும் ஒன்றே என்று எண்ணினால் 'மதமும்' ஒன்றே என்ற கொள்கைக்கு வரமுடியும் என்கிறார். இதற்கு ஐம்புலன் அடக்கம் தேவை என்கிறார்.

**ஐம்புலன் அடக்கம்**

திருமூலர் ஐம்புலன் அடக்கத்தைக் கீழ்வருமாறு பகர்கிறார்.

**பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்**
**பார்ப்பான்பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே**

(திருமந்திரம், பா.1050)

என்கிறார். இதனையே அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி விளக்கும் போது,

**எண்ணங்கள் வலிமை மிகுந்தவை எண்ணங்களே**
**செயல்களாகப் பரிணமிக்கின்றன**

என்கிறார். அதாவது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் வேறுபாடின்றி அமைதல் அவசியம் என்கிறார். ஐம்புலன்களின் செயல்பாட்டால் இவை தடுத்தலுக்கு உட்பட்டவையாகி வருகின்றன. ஐம்புலன்களை அடக்கும்பொழுதில் நிலைத்து நீடித்த இன்பத்தைப் பெறலாம். உலக வாழ்க்கை இன்பமாய் அமையும் என்கிறார் மகரிஷி.

அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்நின்ற ஞானத்
தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே

என்று அழகை 'மனம்' ஒன்றுபட்டால் மனத்தை அடக்கினால் 'மதம்' என்ற நிலைக்குத் தள்ளமாட்டோம். 'மதம்' ஒன்றே என்று எண்ணுவோம் என்கிறார்.

சாதி, இனம், மதம், மொழி, செல்வம் இவற்றைப் பற்றி எழும் பேத உணர்ச்சிகள் அனைத்தும் பெற்றோர்களால் குழந்தைகள் கற்றுக் கொள்கின்றன. சாதியைப் பற்றியும், இனத்தைப் பற்றியும், மதத்தைப் பற்றியும், செல்வத்தைப் பற்றியும் தவறான ஒரு கண்ணோட்டத்தைப் பற்றி குழந்தைகளிடம் பரப்பி விடுகின்றனர். இதில் எந்தத் தவறும் இல்லை என்று சிலர் வாதிடலாம். என் மதத்தைப் பற்றிய சிறப்பை என் பிள்ளையிடம் பேசினேன் இதில் என்ன தவறு என்பர். இதற்குக் காரணம் அவர்கள் குழந்தைகளின்மேல் வைத்த பாசமே காரணம். ஆனால் அக்குழந்தைகள் தம்மதத்தைப்பற்றியோ தம்சாதியைப் பற்றியோ தெரிந்துகொண்டால் அதில் எந்தத் தவறும் இல்லை. மாறாக அடுத்தவர்களின் சாதி மதம் பற்றி விமர்சிக்க இது வழிவகுத்துவிடுகிறது. அதனால் அப்பிள்ளைகள் சமூக வாழ்விற்குப் பயனற்றவர்களாகிவிடுகிறார்கள். தீவிரவாதத்திற்கு இதுவும் ஒரு காரணம் என்றுகூடக் கூறுவதற்கு இடமுண்டு.

எடுத்துக்காட்டாக ஒருவருக்கு நல்ல வருமானம் இருக்கிறது. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அக்குழந்தைகளுக்கு நகைகள் பூட்டிப் பட்டுடுத்தி அலங்காரம் செய்து அதிகச் செலவு செய்து செல்லம்கொடுத்துப் பழக்கிவிடுகிறார்கள். இதனால் அதிகச் சுவையில் செல்வத்தில் பழக்கிவிடப்பட்ட குழந்தைகளின் உள்ளம் செம்மை அடைவதில்லை.

உடல் உழைப்பும் பழக்கமின்மையால் அதை அக்குழந்தைகள் துன்பமாகவே கருதுகிறார்கள். இப்படியே அக்குழந்தைகள் வளருவதால் சோம்பேறித்தனமும் வளருகின்றன. இத்துடன் மற்றக் குழந்தைகளைவிடத் தான்'உயர்ந்தவன்' என்ற தன்முனைப்பு ஏற்படுகிறது. இந்த வகையில் வளர்க்கப்படும் குழந்தைகள் வயதுவந்தபின் சமூக வாழ்விற்கு ஏற்றவர்களாக இருக்கமாட்டார்கள். தான் உழைக்காமல் பிறர் உழைப்பைக்கொண்டே வாழ்க்கை வசதிகள் பெற வேறுபாடுகளை வளர்த்துக்கொள்கிறார்கள். நான் உயர்ந்த சாதி, நான் உயர் மதத்தைப் பின்பற்றுபவன், எனக்கு மற்றவர்கள் அடிமை என்றெல்லாம் பேசித் திரிகின்றனர். சகோதரத்துவம் மடிந்து போய்விடுகின்றது. எனவே தெய்வம், 'மதம்' வேறுவேறாக அவர்களுக்குத் தோன்றுகின்றன. இந்நிலை மாற வேண்டும் என்கிறார் மகரிஷி.

மனித மனம் ஒன்றாக இருந்தும் பலவிதமான தெய்வ வழிபாடுகளால் கற்பனைகளுக்குட்பட்டு வெவ்வேறு திசையில் நினைவைப் பழகிக்கொண்டு ஒன்றை ஒன்றாக மாற்றிக் கரும் மயக்க மனப்பான்மை வளர்ந்துவருகிறது. அதன் விளைவாக மனிதனை மனிதனே வேறாக, பகையாகக் கருதுவது வழக்கமாகிவிட்டது. இதுபோன்ற பல பேத உணர்ச்சிகளே வாழ்க்கை போட்டியாகிவிடுகின்றன. அதனால் 'மதம்' 'சாதி' மனிதனைப் பிடித்துவிடுகின்றது. இந்தச் சாதியால், மதத்தால் தூண்டப்பட்டுப் பல தவறுகளைச் செய்து விடுகின்றான். தவறு நேராமல் இருப்பதற்கு மனிதன் 'இறைவன் ஒன்றே' என்று கற்றுக் கொண்டு உழைப்பை மட்டும் நம்பினால் மதத்தாலோ, சாதியாலோ சண்டைகள் வராது என்கிறார்.

பேதமற்ற சமுதாயம் அமைக்க வேண்டும் என்று பேசுகிறார்கள். எனினும் இதுவரையில் யாரும் பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடிவது இல்லை. அனுபவத்தில் அனுசரித்த அனைத்தையும் வெளிக் கொணர மக்கள் தயங்குகின்றனர். சாதி, மத வேறுபாட்டை வேரோடு களைய வேண்டும் என்றால், குழந்தைகளை இளம்வயது முதல் சகோதர்களாக மாற்ற முயலவேண்டும். எல்லாப் பேதங்களையும் ஒழித்துச் சமரச வாழ்வளிக்கும் ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்குக் குழந்தைகள் வளர்ப்புமுறையில் மாற்றத்தைத் தரவேண்டும் என்று வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகின்றார். குழந்தை வளர்ப்புக்கும் மதத்திற்கும் என்ன தொடர்பு என்று கேட்டால் அதற்கும் விடை பகர்கிறார் அருள்தந்தை.

குழந்தை மனத்தில்தான் எந்தவிதப் பேதமில்லா பாசஉணர்வு தோன்றும். "குழந்தையும் தெய்வமும் ஒன்று" என்று குறிப்பிடுகின்றனர். குழந்தை மனதிலும் எந்தவிதக் கலப்படமும் பகையும் இருக்காது, தெய்வத்திடமும் எந்தவிதப் பேதமும் பகையும் இருக்காது. இவர்கள் மனத்தில் நல்விதையை வளர்த்துவிட்டால் எதிர்காலத்தில் 'மதம்' வேறு வேறு என்ற நிலை உருவாகாது. தெய்வம் ஒன்று என்றால் மதமும் ஒன்றே என்று கூறமுடியும் என்கிறார்.

உலகில் நிலவும் மதங்களின் கொள்கைகளைக் கற்பது சமயச் சார்பின்மைக்கு எதிரானது என்று சொல்ல முடியாது. கொள்கையை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர 'மதத்தை' விமர்சிக்கக் கூடாது. வேறுபட்ட ஒற்றுமை உணர்வுக்கு ஊறு விளைவிக்கும் மதக் கொள்கை தேவை இல்லை. மதம் பற்றிய தவறான எண்ணங்களைக் களைந்து மக்களிடையே ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் 'மதம்' ஒன்றே அதுதான் அனைவரும் சமம் என்ற மதம் என்கிறார். மதத்தைத் தங்கள் சொந்த நலனுக்காகவும் கெட்ட நோக்கங்களுக்காகவும் பயன்படுத்துகிறவர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற முற்படுகிற நிலை வேண்டும் என்கிறார் மகரிஷி.

மதத்தின் பேரால் குழந்தைகள் தவறான வழிகாட்டலுக்கோ, மூளைச் சலவைச் சிந்தனைகளுக்கோ, ஆட்பட்டுச் சுய சிந்தனையற்ற இரக்கமற்ற காட்டு மனம் கொண்டவர்களாக ஆக்கப்பட்டுவிடக்கூடாது என்பது வேதாத்திரியின் கொள்கையாகும். எம்மதம் பற்றியும் யாரும் தெரிந்துகொள்ளலாம். ஆனால் மதம் பற்றிய வேற்றுமை இதில் இருக்கக்கூடாது என்கிறார்.

## மதித்து வாழ்வதே மதம்

மனிதவாழ்வு இனிமையானது, மென்மையானது, வாழ்வில் இன்பத்தைக் காத்து மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும். இயற்கை நியதிகட்கும், சமுதாயக் கருத்து, சூழ்நிலை இவற்றிக்கும் மதிப்பளித்து பிறப்புரிமையையும் சுதந்திரத்தையும் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டும். இந்தப் பெருநோக்கத்தோடு வாழ்வை நடத்த முற்காலத்தில் மதங்களின்மூலம் வாழ்வில் கட்டுப்பாடுகள் புகுத்தப் பெற்றன. முற்கால மக்களிடையே கல்வி அறிவு இல்லாத காரணத்தாலும், பக்தியினாலும் கட்டுப்பாடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு வாழ்வில் கடைப்பிடித்தனர். இக்காலத்தில் அறிவியல் உலக மக்களை ஒன்றிணைத்துவிட்டதோடு அல்லாமல், அறிவியல் அறிவு பரவிவிட்டது. கட்டுப்பாடுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்துவிட்டு அவரவர் விருப்பம்போல வாழ்வை நடத்தப் பெரும்பாலோர் துணிந்துவிட்டனர்.

மதங்களில் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது. அவரவர் விருப்பம்போல் செயல்புரியும் உரிமை வேண்டும். மனித சமுதாயத்தை மதத்தால் பார்க்காது மனத்தால் பார்க்க வேண்டும். மனிதன் சமுதாயத்தால் உருவாக்கப்பட்டவன். அதனால் மனிதன் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு தேவைக்கும் விருப்பத்திற்கும் அறிவிற்கும் மதிப்பளித்து தனது வாழ்வை நடத்த வேண்டியது அவசியமாகிறது. ஒவ்வொரு மனிதனும் தனது செயல்களைப் பிறர்க்குத் தீமையற்ற முறையில் கட்டுப்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். இந்த ஒழுக்கம் உணர அறிவிற்கு ஆராயும் திறன் வேண்டும். ஒழுக்கமே வாழ்வின் இயல்பாக அமைய, பயின்று பழகிக்கொள்ளவும் வேண்டும். உயிரின் பெருமையுணர்ந்து பிறர்க்கு அடிமையாகாமலும், பிறரை அடிமை கொள்ளாமலும் சுதந்திர வாழ்வின் இன்பத்தைத் துய்க்கவேண்டும். இப்படி இன்பத்தைத் துய்க்கவேண்டுமானால் மதங்களின் கருத்தை மதித்து வாழ வேண்டியது அவசியமாகிறது. மதத்தை மதிக்க வேண்டுமானால் முதலில் மனிதனை மதிக்க வேண்டும்.

சிந்திக்கும் ஆற்றலுள்ள மக்களெல்லோரும் இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் அவர்கள்தான், குடும்பம், சுற்றம், ஊர், உலகம் எனும் ஐவகைக் கடமைகளையும் முறையாக ஆற்றினால் தனிமனித வாழ்வும் சமுதாய வாழ்வும் இன்பமாகவே இருக்கும். கடவுளை

அறிந்திருந்தால் அருட்பேராற்றலே அறிவாக ஒவ்வொருவரிடத்திலும் செயல்புரிவதை உணர்ந்திருக்கலாம். அதனால் மனிதனுக்கு மதிப்பு வைத்து எந்த வகையிலும் வன்முறையில் ஈடுபடாமல் இருக்கக் கற்றுக் கொள்ளல் வேண்டும். மனிதனை மனிதன் மதித்து வாழும் பண்பும் உயர்ந்துவிடும். இப்படி இருந்தால் பக்திவழி நின்று அதன் பயனாக அறிவையும் செயல்களையும் முறைப்படுத்திக் கொண்டவர்கள் தானாகவே ஞானநெறிக்கு வாழ்க்கையைத் திருப்பி விட்டுக் கொள்வார்கள். இப்படி மனிதர்கள் ஞானநெறிக்கு வரும்போது மக்கள்மீது ஒரு பிடிப்பு ஏற்படுகிறது. பிடிப்பு ஏற்பட்டவுடன் மனிதனை மதிக்கக் கற்றுக் கொள்கிறான். மனிதன் மனிதனை மதிக்கத் தெரிந்து கொண்டாலே மதத்தில் நல்லிணக்கம் ஏற்பட்டுவிடும்.

இப்படி நல்லிணக்கம் ஏற்பட்டவுடன் அனைவரும் ஒன்றே என்று மனிதன் எண்ணுகிறான். மனிதநேயம் அவனிடம் உருவாகின்றது. இதனால் உலக சமுதாய வாழ்க்கை நெறி உலகப் பொது அருள்நெறி சார்ந்த சமயத்தை உண்டாக்கிவிடுகிறது. உலக நலம் பேணும் அருள் தந்தை வேதாத்திரி மகரிஷியின் உயர் சிந்தை சார்ந்த கருத்துகள் நம் உள்ளத்தைத் தூய்மையாக்கி மானுடம் வளரச் செய்துவிடுகிறது. மனிதகுலம் குழுவாகப் பிரிந்தாலும் உள்ளத்தில் ஏற்படும் ஒருமைப்பாட்டால் ஒரே குலமாகவே வாழலாம் என்பது மகரிஷியின் உயர்ந்த குறிக்கோள் ஆகும். மனிதன் பிறக்கின்றான்... வளர்கிறான்... வாழ்கிறான்... இறந்து விடுகிறான். எங்கிருந்து உலகத்திற்கு வந்திருக்கிறோம்? என்பதும் வாழ்க்கை முடிந்தபின் எங்கே போய்ச் சேர்வோம்? என்பதும் யாருக்கும் தெரியாது. ஏனெனில் பிறப்பு, இறப்பு என்ற இரு நிகழ்ச்சிகளின்போது, மனிதமனம் தனியாக இயங்குவது இல்லை. இறைநிலை இணைப்போடு ஒன்றியிருக்கிறது.

இறைவனோடு ஒன்றிவிட்டால் மதத்தில் வேறுபாடு தோன்றாது. ஒரு நல்லிணக்கம் அவனிடம் பிறக்கின்றது. ஆயினும் மனிதனுடைய கல்லைக் கட்டிய மனஉணர்வுகளால் ஆதிகாலத்தில் ஒரே இனமாக இருந்த மனித சமுதாயம் பிற்காலத்தில் மதம், ஆட்சி, பொருளுடைமை, புகழ் அதிகாரம் இவற்றால் தனித்தனியே பிரிக்கப்பட்டு மத நல்லிணக்கம் இல்லா மக்களாக வாழ்கின்ற அவல நிலையைப் போக்க மகரிஷி ஒரு நினைப்பை தன் படைப்புகள்மூலம் வெளிப்படுத்தி உள்ளார்.

மக்களிடம் மதநல்லிணக்கம் தோன்ற வேண்டுமானால், மக்களிடம் முதலில் சிந்தனையாற்றலைத் தூண்டிவிட வேண்டும். அதுவே தினசரி வாழ்விலும், கல்வி முறையிலும் மனித குலத்திற்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்துத் தேவையற்ற செயல்களை, சடங்கு முறைகளை ஒதுக்கிவிட்டு வாழ்க்கைத் திட்டங்களை முறையாக வகுத்துக் கொண்டு வாழவேண்டிய அவசியத்தைச் சிந்தித்து,

மனித சமுதாய வாழ்வுக்கு வேண்டிய திருத்தங்களைக் கூறி, மக்களை ஒருமைப்படுத்துகிறார். நம் அருள் தந்தை மகரிஷி அவர்கள்.

நமது வாழ்க்கையைக் கவனித்துப் பார்த்தால் மனித குலம் முழுமைக்கும் ஆட்சி ஒன்று; மதம் ஒன்று, பொருளாதாரச் சமத்துவ நீதி ஒன்று. மனித உரிமைச் சாசனம் ஒன்று. இவையே போதுமானவை. இதை முதலில் மனித சமுதாயத்திற்கு கொண்டு வர மகரிஷி நினைக்கின்றார். ஆனால் மனித வாழ்க்கையில் எத்தனையோ இடையூறுகள், குறுக்கீடுகள், தடைகள், பிணக்குகள் பரவி மத நல்லிணக்கத்தோடு வாழவிடாமல் தடுக்கின்றன. எப்பொழுதுமே மனித வாழ்வில் திருத்தங்களும், மாற்றங்களும் நிகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றன. அவை எல்லாம் அனுபவ, ஆற்றல்களுக்கு உட்பட்டவையே. எனவே அறிஞர்கள் ஒன்று கூடிச் சிந்தனை செய்து மக்களிடம் ஒரு மத நல்லிணக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்று மகரிஷி விழைகிறார்.

உலகம் என்ற மண்மீது அனைவரும் பிறந்தோம். உயிர்காக்கும் காற்று ஒன்றே, மூச்சு விடுவதற்கு உலகெங்கும் ஒளிவீசும் சூரியனும் ஒன்றே. கடல் ஒன்றே. நீர் ஆவியாகிப் பொழிய உலகில் உள்ளோர் எவரும் இதில் ஒன்றும் செய்ததில்லை. மனிதமனம் நீரில் தோன்றும் அலைகள் போன்றது. அந்த அலைகளுக்கு உட்பொருளானது நீர்தான். பல்லாயிரமாக இயங்கும் அலைகளுக்கு நீர் ஒன்றுதான் அடிப்படை. அதுபோன்று பல ஆயிரக்கணக்கில் இயங்கும் மன நிலைகளில் தோன்றும் எண்ணங்களாலும், செயல்களாலும் தீர்வு காணமுடியாது. மனமானது சிந்தனையில் ஆழ்ந்தால்தானே அலைநிலையில் உட்பொருளாக உள்ள இறைநிலையைத் தொட்டுவிடும். அங்குத்தான் எல்லாத் துன்பங்களுக்கும் தீர்வு காணக்கூடிய பேரறிவின் ஒளி தயாராக இருக்கிறது. எனவே மனிதனுக்குச் சிந்தனை அவசியம். இச்சிந்தனை வளர்ந்துவிட்டால் மக்கள் அனைவரும் ஒன்றே என்ற எண்ணம் வந்துவிடும். இதனால் அவன் பேரறிவான நுண்மாண் நுழைபுலன் என்ற சிறப்பை அடைகிறான். இந்த அடிப்படைத் தத்துவங்களை மனத்தில் கொண்டால், மனிதன் போரைக் கைவிட்டு அனைவரிடமும் நல்லிணக்கத்தை வளர்த்துக் கொள்ளமுடியும் என மகரிஷி விளக்கம் தருகிறார்.

இப்போரை மகரிஷி ஏன் இங்கே கூறுகிறார் என்ற கேள்வி எழுகின்றது. 'போர்' என்பது சட்ட விரோதமானது. சமூக விரோதம் மற்றும் இயற்கைக்குப் புறம்பானதும்கூட. எனவே அப்போர் மதத்திலும், சாதியிலும், இனத்திலும் எவ்விடத்திலும் ஏற்படக்கூடாது என்பதற்காகப் போரை வெறுக்கிறார் மகரிஷி. போர் இருந்தால் மக்களிடம் வேற்றுமை ஏற்படும். வேற்றுமை வளர்ந்துவிட்டால் மதநல்லிணக்கம் ஏற்படாது. உயர்வு, தாழ்வு என்ற மனப்பான்மை வந்துவிடும் எனவே மதநல்லிணக்கத்து மனிதன் போரைக் கைவிட வேண்டும் என்கிறார்.

வாழப் பிறந்த மனிதன் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்யும் திறமைகளை, இளம் வயதிலேயே, கல்வி கற்கும் காலத்திலேயே தெரிந்து கொள்ள வேண்டும். தெரியாவிட்டால் தானே உழைக்கும் திறனற்றவர்களாகி விடுகின்றனர். எனவே கல்வி முறையிலேயே வாழ்க்கைக்குத் தேவையான பொருள் உற்பத்தி முறையைக் கற்க வசதிகள் சமுதாயத்தில் அமைய வேண்டும். இன்றைய உலக சமுதாயச் சூழ்நிலையை ஆராய்ந்து பார்த்தால், உழைக்கும் திறன் குறைவு. அதை முறையாகக் கற்றுக் கொள்ளவேண்டும். உழைக்கும் திறன் வந்துவிட்டால் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு வராது. ஏற்றத்தாழ்வினால்தான் மனிதன் பிரிவுபடுகிறான். அனைவரும் சமம் என்ற தன்மை வேண்டுமெனில் உழைப்பு அவசியம்.

உழைப்பாளிகளிடமிருந்து உழைக்கத் தெரியாதவர்கள் அல்லது பணம் முதலாக உடையவர்களிடமிருந்து பறித்துண்கின்றனர். இவ்வாறான பறித்துண்ணல் மனிதனிடம் இருக்கும்வரை சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வும் நிறைந்திருக்கும். இதனால் பொறாமை, போர், பகை, வஞ்சனம் இவையெல்லாம் சமுதாயத்தில் வளர்ந்து கொண்டேதான் இருக்கும் அதனால் மக்களிடம் நல்லிணக்கம் தோன்றாது. மாறாக மதத்தின் பெயரால் அழிந்துபோகின்றனர். இதற்கு உலகில் வாழும் பேரறிஞர்கள் பலர் முன்வரவேண்டும். அவர்கள் அன்பும் கருணையும் கொண்டு, திட்டமிட்டுப் படிப்படியாகச் சமுதாயத்தில் சீர்திருத்தத்தைச் செயலில் கொண்டு வந்து, மனித சமுதாயத்தைக் காக்க வேண்டும். இத்தகைய அறிவு சான்றறோரின் தொண்டின்மூலம் எதிர்காலச் சந்ததிகள் அனைவருமே நீதியோடும் நிறைவோடும் நல்லிணக்கத்தோடும் வாழவழி காட்ட வேண்டும் என்று மகரிஷி எதிர்பார்ப்பதாகக் கூறுகிறார்.

என் உழைப்பாலும் அறிவின் திறனாலும் பெற்ற எப்பொருளும் எனக்குரியவை என்பதுதான் நீதி. அவர்கள் அதைத் துய்க்கலாம். பிறர்க்கு உதவி செய்யலாம். பிற உயிரைத் தன்னுயிர்போல் மதிப்பது உயர் பண்பு. தன் திறனால் தன்உணவை விளைவிக்கத் தெரியா தகுதியில்லா விலங்கினம்தான் பிற உயிரைக் கொன்று உண்ணும். மனிதன் மேன்மையானவன். அவனுக்கு வன்முறை வேண்டாம் இப்படி ஆராய்ச்சி செய்து, அதன்பின் மனிதன் தெளிவுடன் வாழ்வான் என்றால் கட்டாயம் மனிதனிடம் ஒற்றுமைப் பண்பும் வளர்ந்து நிற்கும். இந்த உலகம் மக்களுக்குப் பொதுவானது. செயல் செய்யத் தெரியாத முடியாத குழந்தைகள், பெரியோர்கள், உடல் ஊனமுற்றவர்கள் என்ற நிலை அறிந்து அவர்களுக்குப் பகுத்துக் கொடுக்கும் பண்பு வளர்ந்துவிட்டால் மதபேதமோ, இனவெறியோ வராது என்று மகரிஷி தம் படைப்புக்களின் மூலம் எடுத்துக்காட்டுகிறார். மதநல்லிணக்கம் எப்படி உருவாக வேண்டும் என்பதற்கு மேற்கூறிய எடுத்துக்காட்டினமூலம் வரையறை செய்கிறார்.

எப்பொழுது மனிதன் வேறுபடுகிறானோ அப்பொழுது மதம் தலைதூக்குகிறது. எப்பொழுது உழைக்க விரும்பாமல் இருக்கிறானோ? அப்பொழுது சாதி தலைதூக்குகிறது. எனவே மனிதன் சாதி, மத வேறுபாடு இல்லாமல் வாழ, அன்பு கருணை கொண்டு விளங்கப் போரில்லா சமுதாயத்தை விரும்புகிறார்.

வையமெல்லாம் வாழட்டும் வாழ்த்திவளம் காத்தினிதாய்
வளரட்டும் மெய்யறிவு வாழ்க்கையின்பம் துய்த்தலிலே
உய்யமெய்ப் பொருள்நாட்டம் உலகத்து மக்களிடம்
ஓங்குக மேலோங்குக நம்உள்ளமெல்லாம் ஒன்றுபட
(மகரிஷி)

என்று தம் மனவளக்கலை என்னும் நூலில் மக்கள் ஒன்றுபட வழிவகை கூறுகிறார்.

1958ஆம் ஆண்டில் சுவாமி வேதாத்திரி மகரிஷி நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் இன்று விரிவடைந்து இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், மலேசியா, கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. உலக சமாதானத்திற்காக அயராத சேவை செய்து வந்தவர் மகரிஷி; ஆன்மகப் பணியோடு அறிவியல் பார்வையோடு மக்களை ஒருங்கிணைக்க ஆசைப்பட்டவர்.

விலங்கினத்தின் வித்துத்தொடர் வியத்தகு மனிதஉருவாய்த்
தொடங்கி
விரிவடைந்து பல லட்சம் தலைமுறைகளாய் வந்த நீட்ப்பே நாம்
பலநாட்டில் வாழ்கின்றோம். பண்பாடு காலத்தால் படர்க்கை எய்தி
பரவி இனம், சாதி, மதம், மொழி, ஆட்சி இவைகளால்
எல்லை கட்டி
கலகங்கள், பொருள், புகழ், அதிகாரம் பெருக்கிக் கொண்டோம்.
காலங்கள் பல கடந்து கம்ப்யூட்டர் காலத்தில் உள்ளோம் இன்று
சில நிமிடம் நம்மைப்பற்றிச் சிந்திப்போம்.
தேவையற்ற பழக்கம் மாற்றி

சீர்திருத்த இறைஉணர்வும் அறநெறியும் மனவளக்கலையால் கற்றுக் கொண்டு மதநல்லிணக்கத்துக்குப் பாடுபடுவோம் என்கிறார்.

## இறையோடு இணைந்த செயல்

நாம் வாழ்த்தும்போது முதலாவது நமது மனம் இறை உணர்வோடு அதாவது அறிவின் இயக்கத்தில் நுண்ணிய பகுதியை அடைகிறது. 'வாழ்க' என்று சொல்லும்போது, நாமே முதலில் நம்மை வாழ்த்திக் கொள்கிறோம். அந்த அலை எழும்போதும் அவர்களுக்கு உதவியாக இருக்கிறது. இப்படி வாழ்த்தி, வாழ்த்திச் சிறிது காலத்தில்

தானாகவே இறை உணர்வில் கலந்திருக்கும் நிலை உருவாகிவிடுகிறது. இவ்வாறு வாழ்த்திப் பழகிக் கொண்டவர்களுக்கு எல்லாச் செயலும் அந்த இறையோடு இணைந்த செயலாகத் தோன்றும். அந்த இறை உணர்வே எல்லா மக்களையும் ஒன்று என்று எண்ண வைக்கும். எல்லாம் ஒன்று என்று எண்ணிவிட்டால் மக்களிடம் மதவெறியோ, சாதி வெறியோ இருக்காது. மாறாக மற்றவர்கள் எந்த மதமானாலும் எந்தச் சாதியானாலும் அவர்களையும் வாழ்த்தத் தோன்றும்.

இப்படி வாழ்த்திட நாம் பழகிக் கொண்டால் உலகில் சமாதானம் தானே வந்துவிடும். இப்படி ஒரு குறிப்பிட்ட மதத்திற்குள்ளாகவே உலக சமாதானம் வந்துவிடும். மக்கள் அனைவரிடமும் ஒற்றுமை ஏற்பட்டுவிடும். இதை மனம் விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே ஒவ்வொரு நாளும் நாம் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார். ஒவ்வொருவரும் தன்னைச் சமுதாயத்தின் சொத்தாகவே கருத வேண்டும். அந்நிலையிலேயே செயல்பட்டு நமது உயர்வுக்கும் சமுதாய உயர்வுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்ற வேண்டும். எவ்வளவு இயலுமோ அவ்வளவு சேவைகளையும் தன்னலமின்றி மனமொத்த நிலையில் மதநல்லிணக்கத்துடன் செயல்பட வேண்டும். இதனை அருள் தந்தை மகரிஷி கீழ்வரும் பாடல் வரிகள்மூலம் விளக்குகிறார்.

என் ஜனனம் என் மரணம் இரண்டையும் நான் தெரியேன்
எனினுமவை இரண்டினையும் என் மனத்தில் கொண்டே
பொன்முதலாம் பொருளனைத்தும் ஈட்டுகின்றேன் அவற்றைப்
புவிவாழ்வின் இயல்பொக்கப் பொதுநல மேகருதி
நன்மையெனும் வழிகளில் அவற்றைச்செல வாக்க
நற்சமயம் வாய்க்குமெனில் அனைத்தையுமே அளிப்பேன்
இன்முகமும் எளிமையுமே எனது செல்வம்
வீடோ ஏகவெளி எனத் துறவு எண்ணத்தில் பூண்டேன்

(மனவளக்கலை, ப. 101)

இவ்வாறு பணம், வீடு செல்வம் போன்ற பொருட்களோடு உறவு கொள்ளாது மனிதர்களோடு இன்முகத்தோடு மதநல்லிணக்கத்தோடு செயல்படுவதாக மனிதன் உறுதிகொள்ள வேண்டும். உறுதி கொள்ள வைக்க மதத் தலைவர்கள் சேவை மனப்பான்மையில் திளைத்திட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்.

மேலும் மகரிஷி தம்படைப்புகளில் செல்வத்தை ஈட்டலாம்; பொருட்களைத் துய்க்கலாம். உலகியல் வாழ்க்கை நடத்தலாம். ஆனால் மனிதன் அதில் ஒட்டிக்கொள்ளாத நிலைவேண்டும் என்கிறார். 'நான்' என்ற அகந்தை கூடாது என்கிறார். நான் இன்னமதம் என மார்தட்டக் கூடாது. நான் இன்னசாதி எனப் பெருமைப்படக்கூடாது. மாறாக 'நான்'

யார் என்ற நிலை மறவா மனநிலையில் இருக்கவேண்டும். சாதியால் மதத்தால் இன்பங்களைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. இயன்றவரை பிறர்க்குச் சேவை செய்துகொண்டே இருக்கவேண்டும். இதே மனநிலையில் இதே நோக்கத்தோடு வாழ்வை நடத்தினால் சாதிமதபேதம் தலை தூக்காது. மாறாக அனைவரும் ஒன்றே என்ற மதநல்லிணக்கம் தோன்றும் என்கிறார்.

உலக வாழ்வில் பொருள் பால், புகழ் செல்வாக்கு போன்றவற்றைப் பற்று ஏற்படுவது இயல்பே. ஆனால் அதற்காக நம் மக்களையே செல்வாக்கிற்காக, புகழுக்காக வேறுபடுத்தக்கூடாது என்கிறார். தீய எண்ணத்திற்கு ஒருபோதும் மனத்தில் இடமளிக்கவே கூடாது. நல்ல எண்ணத்தைத் தேடிப்பிடித்து மனத்தில் ஏற்றி வைக்கவேண்டும். எண்ணந்தான் அனைத்தும்! எண்ணத்துக்கப்பால் ஒன்றுமே இல்லை. எண்ணத்தின் உயர்வால் தனக்கும் உயர்வு. உலகமக்களுக்கும் உயர்வு. உலக மக்கள் அனைவரும் இயல்புடன் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு எண்ணம் முக்கியம் என்று தன்படைப்பின்வழி அறிவியல்முறையில் விளக்குகிறார் மகரிஷி. இதனைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

சமூகத்தில் ஓர்உறுப்பே உலகில் உள்ள
தனிமனிதன் என்று எவரும் உணர்ந்துகொண்டால்
சமூகத்தின் கூட்டுறவில் இன்பம் துன்பம்
சரிசமமாய் அனுபவிக்கும் சகிப்புண்டாகும்
சமூகத்திற்கு அவசியமாம் செயல்கள் அல்லால்
சதிஏதும் எவருமே செய்யாதவாறு
சமூகத்தின் சூழ்நிலைகள் அமைந்து விட்டால்
சன்மார்க்க நெறியினிலே மனிதன் வாழ்வான்

(மனவளக்கலை, ப. 148)

இவ்வாறு நல்லிணக்கத்தோடு வாழ்வதற்கு மகரிஷி வழிவகை அமைத்துத் தருகிறார்.

## உலக அமைதி

மனிதகுலம் இன்று நாடு, மொழி, இனம், சாதி சடங்கு, மதம் என்ற பெயர்களால் குழுக்கள் பலவாகப் பிரிவுபட்டிருக்கின்றது. அந்தந்தக் காலத்தில், அந்தந்த இடத்தில், வாழ்க்கைப் பொருட்களைப் பெறுவதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இத்தகைய கூட்டுகள் உருவாயிற்று. எதிர்காலத்தில் உலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைப் பொருட்கள் தேவையானதைப் பெறவும் மற்றவர்களால் துன்பம் விளையாமலும் உறுதிசெய்யும் ஓர் உலக நலத்திட்டம்தான் மனிதகுலத்திற்குத் தேவை.

அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்தில் இத்திட்டம் இன்றியமையாத தேவையாகிறது. இந்த நல்ல நோக்கத்தையும் அதை எளிதில் அடைய வேண்டிய திட்டத்தையும் உலக அறிஞர் மன்றத்தில் மகரிஷி சமர்ப்பித்துள்ளார். மேலும் தனது படைப்பில் பல இடங்களில் தனது மூச்சு உள்ளவரைக்கும் உலக சமாதானம் என்ற விளக்கத்தை உலகெங்கும் பரப்புவதாகக் கூறியுள்ளார்.

மேலும் உலக அமைதி என்பது தனிமனிதன் வாழ்வின் அமைதியிலிருந்து மலர்ந்து பரவி வலுப்பெற வேண்டும். பறித்துண்டு வாழும் பண்பாடு இன்று பரவலாக நிலவி வருகிறது. இது உழைத்துண்டு வாழும் பண்பாடாக மாற வேண்டும். இட்டுண்டு வாழும் பண்பாடாகவும், பகிர்ந்துண்டு வாழும் பண்பாடாகவும் மாற வேண்டும். இந்த ஒழுக்கப் பண்பாடு வளர்ந்துவிட்டால் மனிதர்கள் அனைவரும் ஒருவரே என்ற தன்மை ஏற்பட்டுவிடும். மதம் சாதி இனம் எனப் பிரிவுநிலைகள் இருக்காது. மாறாக உலக மக்கள் சமாதானமடைவர்.

இப்போது அறிவியல்யுகம் நடந்துகொண்டிருக்கிறது. ஒரு நாட்டு மக்கள் பல நாடுகளில் குடியேறியும் பல நாட்டு மக்கள் ஒவ்வொரு நாட்டிலும் குவிந்தும் வாழ்கின்றார்கள். போக்குவரத்து சாதனங்களாலும், செய்தித் தொடர்வு சாதனங்களாலும், மனிதகுலம் பொருளாதாரம், அரசியல், வாழ்க்கைப் பண்பாடு இவற்றில் ஒருங்கிணைந்துள்ளது. இந்நிலைக்குப் பொருந்துமாறு மனித அறிவுக்கு இறைநிலை உணர்வும், இறைவழிபாடும், அறநெறியும் விளங்கிக்கொள்ளவும் பின்பற்றவும் ஏற்றமுறையில் பல போதனை, சாதனை வழிகள் தேவையாக உள்ளன. அறியாமை, பழக்கம், உணர்ச்சிவயம் என்ற மூன்றாலும் கட்டுப்பட்டு அவற்றிற்கேற்றவாறு அறிவாட்சித் தரத்தோடு வாழும் மக்களைச் சட்டங்களைக் காட்டி அதிகாரம் செய்தும், இறந்த பின்னர் சொர்க்கம் நரகம் கிட்டுமென்று ஆசை காட்டியும் அச்சமூட்டியும் நல்வழிப்படுத்த முயல்கின்றன. ஆனால் அவற்றால் மதங்கள் திருத்தி வாழ்வில் அமைதியையும் மதநல்லிணக்கத்தையும் தோற்றுவிக்க முடியாது. விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கூடிய விளக்கத்தின்மூலமும் பயிற்சிகள்மூலமும்தான் தனிமனிதனின் அறிவிலும் அறத்திலும் நல்லிணக்கம் வளரும்.

பார் முழுதும் உலக சமாதானச் சங்கம் வேண்டும் என்று மகரிஷி விரும்புகிறார். பல பிரிவில் மக்களுக்குக் கடமை செய்து வாழ வேண்டும். ஆர்வமுடன் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும். இப்படி மனிதன் நடந்து கொண்டால் அனைத்து உலகமும் ஓர் உலகமாய் மாறிவிடும் என்கிறார். ஓர் உலகமாக மாறிவிட்டால் அன்பு, பணிவு, துணிவு, புலனடக்கம், கடமையுணர்வு உடையவர்களாகவும் மாறிவிடுவர். எம்மதத்தினருடனும் அன்பால் பழகுபவராகவும் ஒரு தனிப்பட்ட மதத்தில் மட்டும் பற்றுக் கொள்ளாதவராயும் மாறிவிடுவர். எனவே மனிதன் இவ்விதமாக எல்லாத் துறைகளிலும் தூய்மை பெற்று, உலகசமாதானம் பெற உலக சமாதான சங்கத்தை உருவாக்க முயலவேண்டும் என்கிறார்.

இச்சங்கம் தோன்றிவிட்டால் சர்வமத, சர்வகட்சி, சர்வதேச நோக்கங்களுடனேயே இச்சங்கம் செயலாற்றும். எனவே செயலாற்றும் விதத்தில் இச்சங்கம், மக்கள், அரசாங்கம், உலகம், பொருளாதாரம், கட்சிகள், மதங்கள் அனைத்தும் ஒன்றாகிவிடும். மதங்கள் ஒன்றாகி விட்டால் மக்களிடையே மதநல்லிணக்கம் தோன்றிவிடும். இதனை 'உலக சமாதானம்' என்ற நூலில் விரிவாக விளக்குகிறார்.

ஒன்று உயிர் என்றறியும் உன்நாட்டத்தை
ஒவ்வொருவரும் பழக வசதி செய்வோம்
அன்று அன்று அறிஞர் பலர் சத்சங்கத்தில்
ஆன்ம தத்துவம் விளக்கும் கடமைசெய்வார்
தொன்றுதொட்டுப் பல பெரியோர் தோற்றுவித்த
சுத்த சன்மார்க்க நெறிமுறை விளக்கும்
இன்றுவரை விரிந்துள்ள மதங்கள் எல்லாம்
இந்நிலையில் ஒன்றுபடும் பேதமன்று.

(உலக சமாதானம், ப. 143)

இவ்வாறு உயிரென்றும், ஆன்மாவென்றும், கடவுள் என்றும், அறிவு என்றும் சொல்லப்படும். அருபசக்திகளை உள்நாட்டத்தால் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள, கிராமங்கள் தோறும் நிர்விகற்ப சாதனை மன்றங்கள் என்ற நிலையங்களை ஏற்படுத்தி அதில் மக்களை ஒன்றாக இணைக்கும் முயற்சியில் ஈடுபடுவர்.

மனிதனிடம் மனிதன் பயங்கொள்ளல், பயங்காட்டல், மனிதனுக்கு மனிதன் பகை, மதி உயர்வு தாழ்வதனால் மனிதனுக்கு மனிதனே அடிமையாகுதல் மதிமயங்கி அழிவைத் தேடிக் கொள்ளல் போன்ற நிலைகளால் அன்பாய் இயல்பாய் இருக்க முடிவதில்லை. இதை அறிந்துகொண்டால் அன்பாக மாறிவிடுவான் எனவே மனிதனை மனிதன் அன்பாய் மதித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கு அறிவியல்நோக்கில் சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறார். "சில கணக்குகளில் எந்த எண்ணாலும் வகுக்கக்கூடிய ஒரு உத்தமப் பொதுஎண்ணைக் கண்டுபிடித்துக் கணக்குப் போட்டுச் சரியான விடையைக் கண்டுபிடித்துக் கொள்ளும் வழியைப்போல் உடல் தேவைகள், உணர்ச்சிகள், ஆராய்ச்சி, இயற்கைவளம், அறிவின் ஆற்றல், ஆண், பெண், சிறுவர், பெரியோர், எல்லோருக்கும் எல்லாவகைகளுக்கும் ஏற்றபடி ஒரு பொதுவான வாழ்க்கை முறையைக் கண்டுபிடித்து மகரிஷி தந்துள்ளார். இதை அடிப்படையாகக் கொண்டு அறிவாற்றலையும் உடல் பலத்தையும் பயன்படுத்தி மனிதவர்க்கம் என்றும் எப்போதும் இயற்கையிலே ஏற்படும் துன்பங்களைக் குறைத்துக்கொண்டு, போக்கிக் கொண்டு, இன்பங்களின் தன்மையறிந்து அளவோடு அனுபவித்து ஒற்றுமையாய் அன்பாய் சமாதானமாய் வாழ வழிவகை சொல்லிச் செல்கிறார்.

மனிதஇன வாழ்விற்கு அரசியல் சட்டங்கள்தான் ஒரு நல்ல கவசம். உலக சமாதான ஆட்சியில் யாரையும் யாரும் நம்பி வாழ வேண்டியதில்லை. சமுதாயத்திற்குத் தனிமனிதனும், தனிமனிதனுக்குச் சமுதாயமும் பொறுப்பாகிவிடும். எனவே மனிதன் மதநல்லிணக்கத்தோடு வாழ வேண்டுமெனில் சமுதாயப் பொறுப்பும் தேவை. இத்துடன் அன்பும் கடமை உணர்வும் தேவை.

அன்பும் கடமை உணர்வும்

எவ்வயிற்றுப் பிழைப்புக்கு இத்தொழில் செய்கின்றேன்
என எண்ணும் குறுகிய நோக்கம் தோன்றாது
நன்முறையில் மனிதஇனம் என்றும்எல்லா
நாட்டினிலும் குறைவின்றி அனுபோகித்து
இன்பமுடன் வாழ்வதற்கு இயன்றமட்டும்
என்கடமை செய்கின்றேன் என்றுஎண்ணும்
அன்பென்னும் ஊற்றினிலே எழும் ஆர்வத்தில்
அறிவு உடல்ஆற்றல்களை அர்ப்பணிப்பார்.

(உலகசமாதானம், ப. 266)

இன்று வயிற்றுப்பசிக்காக ஆகாரம்பெறும் பொருட்டே தொழில்களைச் செய்தால் அது குறுகிய நினைவு எழுந்து அற்றுப் போகும்.

உலகெங்கும் பரவி வாழ்ந்து வரும் மனித சமுதாயம் என்னை வாழ வைக்கிறது; வாழ்க்கைக்கு ஒத்தாசை செய்கிறது. ஆகையால் அதன் பொருட்டு என்னால் முடிந்த வரையில் உடல், சக்தி அறிவின் ஆற்றலைப் பயன்படுத்துவேன். மனித சமுதாயம் உலகெங்கும் எப்போதும் துன்பம் நீங்கித் தொல்லையற்று வாழ வேண்டும். மனிதன் என்ற முறையில் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன் என்னும் பொறுப்புடன் எனது கடமையைச் செய்கின்றேன்; ஆராய்வேன், செய்துகொண்டே இருப்பேன் என்ற பெருநோக்கத்துடன் அன்புமுறையிலே பணியாற்றி ஒவ்வொருவரும் வாழ்வார்கள் என்று அன்பையும் கடமையையும் எவ்வாறு தான்போற்றுவதாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு அன்பும் கடமையும் இருந்துவிட்டால் மக்கள் அனைவரும் ஒரு நல்லிணக்கத்தோடு நடந்துகொள்வர் என்பது திண்ணம்.

உலகெங்கும் எல்லோரும் எப்போதும் கூட்டாய்ச் சேர்ந்து சிறப்பான இயற்கையின் பரிணாம வேக விளைவுகளை நன்றாகவும் தெளிவாகவும் புரிந்துகொண்டு, சமூக நன்மையின் பிரதிபலிப்பே தனிமனிதன் நன்மை என்பதைக் கருத்தில்கொண்டு எல்லா மனிதர்களும் வாழவேண்டும் வாழ்வார்கள் என்கிறார் அருள் தந்தைமகரிஷி அவர்கள். இப்படிப்பட்ட உலகசமாதான ஆட்சியில் மனிதனுக்கு இன்பமும் துன்பமும் இருக்காது. மேலும் உலக சமாதான நாட்டமுடையோர்கள் ஆங்காங்கே சங்கங்களை

நிறுவி, மக்களுக்கு இத்திட்டத்தை விளக்கிக்கூறிப் பிரசாரம் செய்ய வேண்டும் என்று மகரிஷி ஆசைப்படுகிறார்.

**மனிதன் என்ற உயர்மதிப்போடு பொதுநிலை**

மனிதன் என்ற உயர் மதிப்போடு பொதுநிலையில் ஆராய்ச்சி செய்தால் அனைத்து மக்களும் ஒன்று என்ற எண்ணம் தோன்றும். அப்பொழுது அவர்களிடையே மதநல்லிணக்கமும் தோன்றிவிடும்.

நீதிநெறி முறை வாழ்வில் நீண்டகாலம்
நினைவைச் செலுத்தித் திறமை கண்ட நண்பா
வாதி, எதிர்வாதி, வழக்கறிஞன் நீதி
வழங்குவோன், நீயாகும் வழக்கொன்றுண்டு
சாதி, மத, தேச, மொழி, இன பேதங்கள்
தனி உடமைப் பற்று - இவை குற்றம் அன்றோ"

(உலக சமாதானம்)

சமூக வாழ்வில் பலவித இன்னல்களைத் தரும் சாதி, மதம், தேசம், மொழி, இன பேதங்கள் தனி உடமைப் பற்று போன்றவற்றை நிறம், தெய்வம் என்று மனிதன் கொள்வது குற்றமல்ல. தெய்வம் என்று மனிதன் சாதிமதப் பேதத்தால் சிக்குண்டு குற்றம் செய்வதைச் சுட்டிக் காட்டிச் சென்றுள்ளார்.

இதே போன்று சார்பு நிலையில் சமாதானம் இல்லை என்பதை 'ஆசிரியர் பயிற்சி குறிப்பேடு' என்ற நூலில் கீழ்வருமாறு விவரித்துள்ளார்.

அரசியலார் பிறநாட்டை அடக்கியாளும் முறையால்
அன்புவழி எனக்கூறும் மதத்தலைவர் பிறரை
இரவு பகலாய் முயன்று தன் மதத்தை விரிக்க
இழுத்துச் சேர்த்துத் தங்கள் இனம் பெருக்கும் முறையால்
பரவியுள்ள பொருள் துறையில் இயந்திரங்கள் மூலம்
பணம் சேர்க்கும் பொருள் தலைவர் போட்டியினால் வெற்றி
உரம் பெறவே நீடிக்கும் உட்கருத்தைக் கொண்டும்
உலக அமைதி பேச ஒத்துவருமோ விளைவு

(ஆசிரியர் பயிற்சிக் குறிப்பேடு, ப. 67)

அருள்தந்தை மகரிஷி மதத்தைப் பரப்பும் நிலையையும் அதனால் என்ன விளைவு ஏற்படும் என்பதையும் சுட்டிச்சென்றுள்ளார். மதத்தால் மற்றவர்களை இழுக்கக்கூடாது. மனத்தால், அன்பால் அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும் என்கிறார்.

**மனிதநேயம்**

எல்லா மனிதர்களும் இயற்கையின் பரிணாமச் சிறப்பின் ஒரு கூறுதான் என்ற உண்மையில் ஆதியில் இயற்கையின் இறைவெளி

நிலையே அறிவும் விரைவுமாக எல்லாமாக மலர்ந்திருப்பதால் எந்தத் தோற்றத்தைத் தெய்வம் என மதித்தாலும் அது அவன் அறிவின் வெளிப்பாடேயாகும். எனவே யார் எந்த உருவில் எந்தக் கருத்தில் தெய்வமென்று வழிபட்டாலும் அவர் அறிவையே வழிபடுகிறார் என்றுதான் பொருள். தெய்வம் எனும் இறைநிலையே அறிவாக விளங்குவதால் அனைவரும் வணங்குவது ஒரே தெய்வம்தான் இக்கருத்தினை,

> கடவுளை வணங்கும்போது கருத்தினை உற்றுப்பார் நீ
> கடவுளாய்க் கருத்தே நிற்கும் காட்சியைக் காண்பாய்

என்று தம்படைப்புகளில் ஒன்றாகிய 'மனவளக்கலை' என்ற நூலில் அருள்தந்தை மகரிஷி தெய்வம் ஒன்றே' என்பதை எழுதியுள்ளார்.

இந்தக் கருத்தில்தான் உலகப் பொது அருள் நெறி சமயம் என்று எல்லோருடைய வணக்க முறைகளும் ஒன்றே என்று ஒப்புக் கொண்டு மனித நேயமே பெரிது என மதித்து வாழ வேண்டும் என்கிறார். சிலை வணக்கம் என்பது மனித இனத்தின் பிரிவுபடாத கருத்து ஆகும். காலத்திற்கும் இடத்திற்கும் சூழ்நிலைகளுக்கும் அறிவின் வளர்ச்சிக்கும் ஏற்ப சிலை வணக்கத்தோடு சில சடங்கு முறையை மனித இனம் கூட்டிக் கொண்டது. இந்தச் சடங்கு முறையோடு கூடிய இறை வணக்கம் 'மதம்' எனப்படுகிறது. இம்மதத்தால் மனிதன் தனக்கென ஒரு பாதையை வகுத்துக்கொண்டு மக்களை வழி நடத்துகிறான். வழி நடத்தும் போக்கில் சில ஏற்றத்தாழ்வுகளைக் கடைப்பிடிக்கின்றான். அதனால் மதத்தின் பெயரில் சண்டைகளும், பூசல்களும் உருவாகின்றன. மனிதர்களிடையே மதநல்லிணக்கம் வளரமுடியாமல் போய்விடுகிறது. எனவே மனிதன் முதலில் மனிதநேயப் பண்போடு நடந்துகொள்ள வேண்டும் என்கிறார்.

மொத்தத்தில் வேதாத்திரி மகரிஷி ஆன்மிகத்தில் மேம்பட்டவர் மட்டும் அல்லர். அவர் அறிவியலைப் புரிந்துகொண்டுள்ளவரும் கூட. 'மதம்' என்பது அறிவியலிலிருந்து வேறுபட்டதன்று என்பது அவருடைய கருத்தாகும். அவை இரண்டுமே ஒன்றை ஒன்று முழுமைப் படுத்திக்கொள்வன ஆகும் என மகரிஷி கருதுகிறார். அறிவியல் இயற்கையைப் பற்றிக் கூறுவதாகும். மதமோ மனிதனைப்பற்றிக் கூறுகிறது. ஆனால் மனிதன் இயற்கையின் ஒரு பகுதியே. எல்லா ஆற்றல்களினுடைய ஒற்றுமைபற்றிய ஒரு கோட்பாட்டை மகரிஷி ஏற்படுத்தியுள்ளார். ஒன்றிலிருந்தே பலவும் வெளிப்பட்டுள்ளன. பிரபஞ்சம் முழுமையும் பிரம்மத்திலிருந்தே பரிணமித்துள்ளது என்பது மகரிஷியின் வேதாந்தத் தத்துவமாகும்.

**கல்விமூலம் மதநல்லிணக்கத்தைக் கொண்டுவரல்**

மனிதன் அகத்தாய்வுமூலமாக மெய்ஞ்ஞானத்தைப் பின்பற்றுகிறான். மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் ஒருங்கிணைந்த கல்வி

முறை இக்காலத்தில் இன்றியமையாத தேவை ஆகும். இக்கல்வியைக் கற்க விரும்பும் அனைவருக்கும் அது கிடைக்குமாறு செய்ய வேண்டும். இதைக் கற்பிப்பதில் வழிகாட்டியாகச் சேவை செய்யப் பல ஞானமடைந்த மெய்ஞ்ஞானிகளும், திறமை வாய்ந்த விஞ்ஞானிகளும் உலகம் முழுவதும் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்களைக்கொண்டு கல்வி முறையில் மெய்ஞ்ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் ஒன்றியைத்துக் கற்பிக்க வேண்டும். இப்படிக் கற்பித்தால்தான் மக்கள் மனிதவாழ்வின் தனித்தன்மையையும் மதிப்பையும் அறிந்துகொள்வார்கள். இயற்கையின் புறப் பண்புகளையும் மறை பண்புகளையும் பெற்றுள்ள ஒரு தொகுப்பே மனித இனமாகும். இந்த முறையில் ஒவ்வொரு மனிதனும் தான்பெற்றுள்ள இயற்கையின் கல்வி வல்லமையை உணர்ந்தால், அது ஒருவருக்கு ஒருவர் உயர்வு தாழ்வு மனப்பான்மையின்றிச் சரியாக மதித்து வாழ வழி காண்பார்கள். அப்பொழுது மதநல்லிணக்கம் தோன்றிவிடும்.

எல்லா மனிதர்களுக்கும் ஒரே ஒரு நில உலகமே உள்ளது. நாம் எல்லோரும் அதில் பிறந்து வாழ்ந்து வருகிறோம். ஒவ்வொரு ஆண்டும் மக்கள்தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. நாம் வாழ்வதற்காக இப்போதுள்ள புவியின் பரப்பை மட்டும் அதிகரித்துக் கொள்ள முடியாது. எனவே நாம் இந்த ஒரு புவியை மட்டுமே நம் எல்லோரின் தேவைக்காகவும் பங்கிட்டுத்தான் ஆக வேண்டும்.

குலமுதலாய் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும்கூடி உழைத்துப் பங்கிட்டு வாழ்ந்திடுவோம்
உலகில் பிறந்து விட்டஒவ்வோர் மனிதனுக்கும்
நிலஉலகம் சொந்தமென்ற நீதிநிலை நாட்டிடுவோம்

(மதமும் மனிதனும், ப. 79)

என்று வேதாத்திரி மகரிஷி தம் படைப்புகள்மூலம் மக்கள் எப்படி ஒன்றாகவும் மதநல்லிணக்கத்தோடும் வாழவேண்டும் என்பதை விளக்கிச் செல்கிறார்.

இன்று அறிவியல் வளர்ச்சியின் பயனாக மனிதகுலம் ஏராளமான வாழ்க்கை வசதிகளைப் பெற்றுள்ளது. இருப்பினும் மக்கள் அமைதியாக, மகிழ்ச்சியாக, மனநிறைவுடன் வாழ முடியவில்லை. மனிதகுலத்தில் துன்பத்திற்குத் தனிப்பட்ட காரணங்களும் உள்ளன. உடல்நலக் குறைபாடு, குடும்பத்தில் மணப்பிணக்குகள், தவறான முடிவுகளால் வரும் துன்பங்கள் போன்ற தனிப்பட்ட துன்பங்களும் உள்ளன. அதே சமயத்தில் சமுதாய அமைப்பில் மக்களின் பண்பாட்டில் உள்ள குறைபாடுகளின் காரணமாக மக்களால் ஒற்றுமையுடன் வாழமுடிவதில்லை. சமய வேறுபாடாலும் மதக் கொள்கைகளாலும் இன வேறுபாடுகளாலும் நல்லிணக்கம் தோன்றாது துன்பப்படுகின்றனர். அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி தனது வாழ்வில் பல்வேறு காலக்கட்டங்களில்

பெற்ற அனுபவங்களைக் கொண்டு சமுதாய அமைப்பின் மதவேறுபாட்டையும் இனவேறுபாட்டையும் களைத்தெறிந்து அதன்மூலம் மனிதகுலத்திற்குப் பல நன்மைகளையும் வழிவகைகளையும் செய்து வந்தார்.

இக்காலமானது அறிவியல் மிகுந்து ஓங்கி வளர்ந்து உள்ள காலமாக உள்ளது. உடல் கருவிகளுக்கு உபகருவிகள் பலவற்றைச் செய்து கொண்டோம். கற்பனைக் கதைகள்மூலம் ஒரு கடவுளுக்குப் பதிலாக ஒவ்வொருவரும் பல கடவுள்களை ஏற்படுத்திக் கொண்டோர் இந்நிலை மாற வேண்டும் என்றால் ஆறாவது அறிவைப் பெற்று, இறைநிலையில் ஊன்றி மனிதமனத்தைச் சிந்தனையில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் போரில்லா நல்லுலகத்தைக் காணமுடியும். பல மதங்கள், பல கடவுள் பழக்கம் ஒழிந்து உண்மை ஒன்றைத் தேர்ந்தெடுக்க முடியும் இவ்வாறு மகரிஷி அவர்கள் மதத்தை, மதநல்லிணக்கத்தை அறிவியலோடு பார்க்கிறார்.

மனிதநேயம்

எல்லா மனிதர்களிடத்தும் அன்பு செலுத்துவதே மனிதநேயம். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே ஆன்ம நேயம்

**அனைத்துயிரினரும் ஒன்றென்று**
**அறிந்த அடிப்படையில்**
**ஆற்றும் கடமையெல்லாம்**
**அன்பின் செயலாகும்** (வாழ்வியல் விழுமியங்கள் ப.27 மகரிஷி)

என்கிறார் வேதாத்திரி மகரிஷி. அன்பு குறையும்போது அகந்தை மேலோங்குகிறது; அறம் வீழ்கிறது. அகந்தை உறவைக் களங்கப் படுத்திவிடுகிறது. அகந்தை கொண்ட உறவில் அன்பு இருப்பதில்லை. ஆணவமே இருக்கின்றது. சுதந்திரம் இருக்காது. அடிமைத்தனமே இருக்கும். கொடுக்கல் இருக்காது. எதிர்பார்ப்புகள் மட்டுமே இருக்கும். அகந்தையில் உறவு மலராது. மணம் வீசாது. அகந்தை ஒழியும்போதுதான் உறவு மலர்ந்து ஊரெல்லாம் மணம்வீசும்.

நாம் மற்றவர்களிடம் எதிர்பார்க்கும் அனைத்தையும் நம்மிடம் மற்றவர்கள் எதிாப்பார்ப்பார்கள். நாம் மற்றவர்களை உயர்வாக அங்கீகரித்தால்தான் அவர்களும் நம்மை உயர்வாக எண்ணுவார்கள். எனவே மற்றவர்களை அங்கீகரிக்கும் தன்மைதான் மனிதனை விலங்குகளிலிருந்து வித்தியாசப்படுத்துகிறது. மனிதப் பார்வையின் நீளத்தையும் ஆழத்தையும் அதிகப்படுத்துவது இந்த அங்கீகரிப்புத்தான்.

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்உயிர்போல்**
**எண்ணியுள்ளே ஒத்துரிமையுடையவராய்**

என்று வள்ளலார் கூறுவதுபோலவே வேதாத்திரி மகரிஷியும் குறிப்பிடுகின்றார் என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகின்றது. எனவே ஒவ்வொரு மனிதனும் மனிதநேயப் பண்போடு விளங்கினால் மதநல்லிணக்கம் தானாக வந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

### அன்பும் கருணையும்

இயற்கையை ஆராய்ந்துபார்த்தால் அன்பும் கருணையும்தான் எங்கும் எதிலும் அமைந்திருக்கக் காணலாம். அன்பு என்பது எந்த ஒன்றையும் உடலாலோ மனத்தாலோ தன்னோடு இணைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது. அப்படி இணைந்துள்ள மற்றொன்றுக்குத் தனது ஆற்றலைத் தொடர்ந்து அளித்து, அதனைக் காத்துவருவது கருணையே. இதற்கு மகரிஷி ஓர் எடுத்துக்காட்டைத் தருகிறார். அதையும் தத்துவஞானி அறிவியல்கண்கொண்டு பார்ப்பவர் என்பதற்கு இந்த எடுத்துக்காட்டும் ஒரு சான்றாக அமைகிறது.

> ஒரு முட்டையைப் பாருங்கள் அதிலுள்ள அனைத்துப் பொருட்களையும் ஒன்றிணைத்து அதன் ஒடு பிடித்துப் கொண்டிருக்கிறது. இது அன்பு எனப்படுகிறது. அவ்வாறு பிடித்துக்கொண்டே குஞ்சு வளர்வதற்குத் தேவையான இராசாயன நீரை அது பாய்ச்சிக் கொண்டே இருக்கிறது. இதுதான் கருணை எனப்படுகிறது (வேதாத்திரி மகரிஷி).

இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் தன்னோடு மற்றவர்களையும் இணைத்துக் கொண்டு அன்பு பாராட்டினால் தானாகவே மத நல்லிணக்கம் பிறந்து விடும் என்பதுதான் மகரிஷியின் கொள்கையாகும். இத்தகு அன்பும் கருணையும் பற்றி ஒரு கவிதையாகத் தந்திருக்கின்றார்.

> அன்பும் கருணையும் அகன்ற நிலையிலுள்ளாய்
> என் மனதை விரித்து இணைத்துக் கொண்டாய் உன்னுள்ளே
> கர்ம வினைகளெல்லாம் கழிந்தன உணர்கின்றேன்
> உன்னையறிந்து உய்ய உலகோர்க்குத் தொண்டுசெய்வேன்
>
> (வேதாத்திரி மகரிஷி)

இக்கவிதை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டும். எனவே அன்பும் கருணையும் மதநல்லிணக்கத்துக்கு ஓர் ஆணிவேராகும் என்கிறார் மகரிஷி. மாறாக தேசம், சாதி, மதம், இனம், மொழி, உடைமை போன்றவற்றால் பற்று வைத்து ஒருவரை ஒருவர் பிரித்துக் காண்பதால்தான் மதநல்லிணக்கம் வளர்வதில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

மேலும் தனது வாழ்க்கை விளக்கத்தில் தன்னைப் பற்றிக் குறிப்பிட்டு விளக்கும்நிலையில் 'மதம்' பற்றிய கருத்துகளையும் விளக்கியுள்ளார். சிந்திக்கும் ஆற்றலுள்ள மக்களெல்லோரும் இந்த உண்மையை உணர்ந்துகொண்டால் அவர்கள்தான், தன் குடும்பம், சுற்றம்,

ஊர், உலகம் எனும் ஐவகைக் கடமைகளையும் முறையாக மனிதன் ஆற்றினால் தனிமனித வாழ்வும் சமுதாய வாழ்வும் இன்பமயமாக இருக்கும் என்கிறார். மனித சமுதாயம் என்ற பேரவையில் பிரிக்கமுடியாத தொடர்பு கொண்டுள்ள ஒவ்வொரு தனிமனிதனும் எல்லோருக்கும் ஒத்தும் உதவியும் வாழவேண்டும் என்றும் குறிப்பிடுகிறார். அப்படி மனிதன் இல்லை என்றால் பிறருக்கு உரிமைக்கேடும் துன்பமும் விளையும் என்கிறார். மற்றவர்களோடு தங்களுக்கோ பிறர்க்கோ அறிவிற்கோ உடல் உணர்ச்சிக்கோ தீங்கு விளைவிக்காத முறையில் மக்கள் அனைவரும் கூட்டுறவு பூண்டு வாழவேண்டும். அப்போதுதான் மனிதகுல வாழ்வில் அமைதி நிலவும் என மெய்யறிவு பெற்றவர்கள் உணர்ந்தனர். அவர்கள் வகுத்த வாழ்க்கை நெறியே மதம் (Religion) எனப்படுகிறது. இந்நெறி பிறழ்ந்தவர்களைத் திருத்தவும் தண்டிக்கவும் ஏற்ற ஒழுங்குமுறைகளும் மெய்யறிவு பெற்றவர்களால்தான் ஆட்சிச் சட்டமாகவும் அவற்றின் திருத்தங்களாகவும் புகுத்தப் பெற்றன.

எனினும் மதங்களும் ஆட்சியும் இன்றுவரையில் மனிதகுல வாழ்வில் அமைதி ஏற்படுத்துவதில் வெற்றி பெறவில்லை. காரணம் தெய்வநிலை, உயிர்நிலை, வாழ்வின் வளம் காக்கும் பொருளாதார நிலையைச் சார்ந்தவர்கள் மதத்தையும் ஆட்சியையும் நிர்வகிக்கும் பொறுப்பு ஏற்கவில்லை. இந்த உண்மைகளையெல்லாம் மகரிஷி தம் வாழ்க்கை விளக்கத்தில் எடுத்துக்கூறி மனிதன் மதநல்லிணக்கம் பெற வழிவகைகளை வகுத்துள்ளார். மேலும் மதங்களில் ஒற்றுமை வளர, மனிதநேயம் மேம்பட, மதநல்லிணக்கம் தோன்றக் கீழ்வரும் பாடல் வரிகளால் புலப்படுத்துகிறார்.

வாழ்க்கையே அறிவு உடல்நலம் பொருட்கள்
விஞ்ஞானம் அரசியல் இவ்வைந்தில் ஆகும்
வாழ்க்கையிலே இவ்வைந்து தத்துவத்தின்
வகையறிந்தோர் மனிதஇனம் அன்பாய்ச் சேர்ந்து
வாழ்க்கை இன்ப நலம்துய்க்க அறிவில் தேற
வறுமை ஐந்துபழிச் செயல்கள் ஒழிந்துவாழ
வாழ்க்கை ஒழுக்கங்கள் பல கற்பித்தார்கள்
வந்த பயன் இன்றைய நிலை கணித்துத் தேர்வோம்

(வாழ்வியல் விழுமியங்கள், ப. 40)

என்று மதத்தின் நோக்கம் பற்றி எடுத்துக்கூறி, சம்மதத்தால் மனிதர்கள் வேறுபடாது அன்பாய் வாழ வழிவகை செய்துள்ளார்.

மதங்கள் எல்லாம் எழுந்த வகை அறியாதோர்கள் மருட்சியினால் தம்மதமே உயர்வென்று எண்ணி மதபோதை கொண்டு ஆட்சி பலத்தினாலும் மக்கள் மிகவும் விரும்புகின்ற செல்வத்தாலும் மதம் மாற்றி விடுகின்றார்கள். இந்தச் செயலை மகரிஷி ஏற்கவில்லை. அவரவர்கள் 'மதம்' என்பதை மறந்து 'மனிதன்' என்று எண்ணி வாழ

வேண்டும் என்கிறார். இதேபோன்று எம்மதத்தையும் குறை கூறுவதையும் மகரிஷி விரும்பவில்லை. இதை விளக்க வந்த மகரிஷி அவர்கள்

உம்மதமே உலகத்தில்
உயர்வென்று பேசுகிறீர்
எம்மதத்தாரிடம் இல்லை
ஏழ்மை, பஞ்ச பாதங்கள்? (மனவளக்கலை, ப. 176)

என வினா எழுப்புகிறார். மாறாக மனிதன் உடல், பொருள், அறிவு, உலகம், அறிந்தோன் சொன்ன உடை, எண்ணம், வாழ்க்கை, ஒழுக்கங்களே மதம் என்கிறார். எனவே மனிதன் 'மதம்' என்று கூறாது வேறுபாடு கொள்ளாது அன்போடு நல்ல இணக்கத்தோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

மனிதன் வாழ்ந்து வருகின்ற இந்த உலகத்தில் மற்றைய சீவராசிகளும் வாழ்கின்றன. மற்ற சீவராசிகளுக்கும் மனிதர்களுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. அவை இயற்கை வளத்தை உள்ளது உள்ளவாறே வாழ்வின் வளமாகத் துய்த்து வாழ்ந்து கொண்டு வருகின்றன. ஆனால் மனிதன் மட்டும் என்றும் ஒருவருக்கொருவர் வேறுபட்டு வேறுவேறு உலகத்தில் 'மத' மயக்கத்தில் நிலைமறந்து ஏன் வாழ வேண்டும் என்கிறார். எல்லா மதத்திலும் 'இறைவன்' உண்டு; வணங்கும் முறையும் உண்டு. இதில் ஏன் ஏற்றத்தாழ்வு காட்ட வேண்டும் என்கிறார்.

எம்மதத்தும் கடவுள் என்ற குறிப்பு உண்டு.
எண்ணி வணக்கம் செலுத்தும் முறைகளுண்டு.
நம்மறிவைப் புலன்கள் தமைப் பண்படுத்தி
நல்வாழ்வைத் தரும் வழிகள் இவைகளாகும்
(மகரிஷி, மனவளக்கலை ப. 145)

என்று எல்லா மதத்திலும் இறைவன் இருப்பதாகவும் அவ்விறைவனைக் காண்பதிலும் மனிதர்கள் சண்டையிட்டுக் கொள்ள வேண்டாம் என்கிறார்.

தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வாழ்வோர் மதவெறியோடு இருப்பது தவறான ஒன்றாகும் என்கிறார். உடல்நலம், அறிவு, செல்வம், கீர்த்தி, ஒழுக்கம், வீரம், அழகு, காதல், ஞானம், கடமை போன்றவற்றைப் பெற்று இன்பமுடன் வாழவேண்டும் என்றால் அனைத்து மக்களையும் ஒன்றென மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாழ்வதைத் தவிர்த்துக் கருத்து வேறுபாடு கொள்ளக்கூடாது என்கிறார். மனிதன் வாழ்வே ஒரு கலைதான். எந்தப் பொருளையும் அழகுபடுத்தி, உருமாற்றி அனுபவிக்கிறான். அதன் விளைவாக எழக்கூடிய நன்மை தீமைகளை உணர்ந்து அவற்றைச் சரி செய்துகொண்டு போக வேண்டிய பொறுப்பும் ஏற்படுகிறது.

பொறுப்பு ஏற்படும் இடத்தில் ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்றும் தேவைப்படுகின்றன. இத்தேவைகளைப் பெற வாழ்க்கையில் போராட வேண்டியிருக்கின்றது. அப்போராட்டத்தில் மனிதனுக்கு மனிதன்

வேறுபடுகின்றான். 'மதம்' என்ற பெயரில் வேறுபடுகின்றான். கடவுள் என்ற பெயரில் வேறுபடுகின்றான். இவ்வேறுபாடு மனிதனுக்குத் தேவைதானா? எனக் கேள்வி எழுப்பும் மகரிஷி அதற்குரிய பதிலையும் தருகிறார். மனிதனை மனிதனாகப் பார்க்கும்வரை, மனிதன் மனிதனை நேசிக்கும் வரை மதநல்லிணக்கம் தோன்றாது என்கிறார்.

**மனமே கடவுள்**

மனிதனுக்குப் பக்தி மார்க்கம் வேண்டும். இந்த முறையில் எல்லாவற்றையும் இணைத்துப் பார்ப்போமானால் இந்த அறிவியல் உலகத்திற்கு ஏற்ற ஒரு மதம் உலக மதம் வேண்டும். இதுவரையில் வந்த எந்த மதமும் அடிப்படையில் ஒன்றுக்கொன்று முரண்பட்டது அல்ல. அமெரிக்காவில் 'லாஸ் ஏஞ்சல்ஸ்' என்ற இடத்தில் இது பற்றிக் கேள்வி ஒன்று எழுந்தது. பலர் பலவிதமான கடவுள்களை வழிபடுகின்றனர். நீங்கள் எல்லா மதங்களுடைய கருத்தும் ஒன்று என்று எப்படிச் சொல்ல முடியும் என்று கேட்டார்கள். அதற்கு வேதாத்திரி மகரிஷி கூறுகையில் "யார் கடவுளை வணங்கினாலும் தன்னுடைய எண்ணத்தைத்தான் மனத்தைத்தான் வணங்குகின்றானே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று பதில் கூறுகிறார்."

> கடவுளை வணங்கும் போது கருத்தினை உற்றுப்பார் நீ
> கடவுளாய்க் கருத்தே நிற்கும் காட்சியைக் காண்பாய்
>
> (மகரிஷி, மனவளக்கலை ப.19)

எனவே யார் எந்த வகையில் கடவுளை வணங்கினாலும் சரி, சிறிது நேரம் பொறுத்து எது நிற்கிறது என்று பார்த்தால் அவருடைய மனம் தான் அந்த வடிவம் எடுக்கிறது. விக்கிரகத்தையோ, சக்தியையோ வேறுபொருளையோ எதனைக் கடவுள் என்று வணங்கினாலும் அந்த வடிவம் எடுப்பது மனம்தான் என்கிறார்.

மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்காகச் சிறுகச் சிறுக நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் மனோதிடம், மனவலிவு கொள்வதற்காகவும் ஏதோ ஒருவழியில் உருவகப் படுத்திக்கொண்டு உன் மனத்தைத்தான் வணங்கி வருகின்றாய். ஆகவே உலகத்தில் உள்ள எந்த மதத்திலேயும் கடவுளைப் பற்றி சொல்லியிருந்த போதிலும்கூட அவர்களும் அந்த மனத்தைத்தான் வணங்குகிறார்களே யொழிய வேறு ஒன்றும் இல்லை. எனவே மனத்தின் சக்தியை உணரும் போது எல்லாம் வல்ல இறை சக்தியே ஊடுருவி இயங்கிக் கொண்டு இருக்கின்ற முறையிலே மனிதனிடத்திலே மனமாக இருக்கிறது. இப்படி இருக்கும் நிலையில் மனிதன் மனிதனாக மாறாது ஏன் பதமாக மாறிச் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும். இப்படிச் சண்டையிட்டுக் கொள்வதினால் மத நல்லிணக்கம் வளராது என்கிறார். அதற்கு ஒரேவழி அன்பும் கருணையும்தான் என்கிறார். 'அன்பு' ஒன்று இருந்தால் மதமே தேவையில்லை என்கிறார்.

இதனையே திருவள்ளுவரும் தன்குறள்வழி கூறுகின்றார்.

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணியது உடைத்து**

ஒருவரிடமிருந்து ஏதேனும் எதிர்பார்க்கின்ற வரையிலே உணர்ச்சி வயப்பட்ட நிலைதான் இருக்கும். அந்த உணர்ச்சி வயப்பட்ட நிலையிலேயிருந்து செயல்கள் செய்யச் செய்யப் பதிவுகள் ஏற்பட, ஏற்பட மீண்டும் அதையே செய்ய உலகமெங்கும் சிக்கல்களும் துன்பங்களும் மலிந்துதான் வரும். இவையெல்லாம் போக்கி உலகத்திலே அமைதி நிலவ வேண்டுமென்றால் ஒவ்வொருவரும் அவரவர் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் மதம் அழிந்து மத நல்லிணக்கம் தானே வளரும் என்கிறார். இதனைக் கீழ்வரும் கவிதையால் உணர்த்தவும் செய்கிறார்.

நன்றி கடமையுணர்வு விளைவறிந்து
நலம் நாடிச் செயலாற்றும் நல்விழிப்பு
என்னும் ஒரே நீதியாய்ச் செயலுக்கேற்ப
இறைவனே விளைவுகளாம் உண்மைகாணல்
தொன்றுதொட்டு மனிதன் தொழும் இறைவன்அங்குத்
தோற்றம் அவன் அறிவு ஒன்றே என்றுணர்தல்
இன்றுள்ள மதம் அனைத்தும் இணைத்துக்கொள்ளும்
இணக்கநெறி உலக மதம் கர்மயோகம்.

(மகரிஷி, மனவளக்கலை ப.197)

என்று விளக்கம் தருகிறார். சாதி சமயப் பிணக்குகளும் போராட்டங்களும் மீண்டும் தலை தூக்கும் இக்காலக்கட்டத்தில் மனிதனுக்கு ஒரு மாற்றம் தேவை. அத்தேவையை மனிதனுக்கு மத நல்லிணக்கப் பார்வையால் அருள்தந்தை மகரிஷி தம் படைப்புகள்மூலம் விளக்கி யிருக்கிறார். யாரையும் சாராமல் தம் விருப்பம்போல் இறைவனை வழிபட வேண்டும்.

இதேபோன்று மெய்விளக்கத் தவமுறையும், வாழ்க்கை முறையும் உலக சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள், ஆட்சிச் செயலாளர்கள், தொழில் துறைத்தலைவர்கள், செல்வந்தர்கள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், விஞ்ஞானிகள் இவர்களுக்கும் பரவ வேண்டும். அதன் விளைவாகப் பொருளாதாரத்துறை, அரசியல், கல்வித்துறை எல்லாவற்றிலும் ஒரு முழு மலர்ச்சியும் சீர்திருத்தமும் உண்டாகும். அப்போதுதான் உலகில் தனிமனிதன் வாழ்விலும் சமுதாய வாழ்விலும் நிலையான சமாதானமும் நல்லுறவும் அமையும் என்கிறார்.

எல்லாம் வல்ல ஒரு முழுமுதற்பொருளே தன் மாற்ற இயல்பால் (Evolutionary Process) பேரியக்க மண்டல களமாகி (Universal Field) நட்சத்திரங்கள், சூரியன், கோள்கள், உலகம் இவையாகிப் பல கோடி உயிரினங்களுமாகி இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்து வாழத்தக்க மேலறிவே ஆளும்நிலை அறிவாகும். இவ்வறிவ

மனிதனிடமே மேலோங்கி இயங்குகின்றது. அதனால்தான் மனிதன் சக மனிதனை மதித்து வாழும்போது எவரிடமும் சாதி மத வேறுபாடு தோன்றுவதில்லை என விளக்கம் தருகிறார். அவ்விளக்கத்தால் மதநல்லிணக்கம் தோன்ற வழிவகையும் கிடைப்பதாகக் கூறுகிறார்.

உலக சமுதாயத்திலே ஒரு உறுப்பினராக வாழும் மகரிஷி அவர்களுக்கு அவ்வப்போது தோன்றிய செயல்களின் விளக்கமே மகரிஷியின் வரலாறு ஆகும். இவ்வரலாறு விளக்கத்தில் இவர் கூறுவது எல்லாம் மக்களின் கூட்டு வாழ்க்கையைப் பற்றித்தான். எப்பொழுது கூட்டாக வாழத் தொடங்குகிறோமோ அப்பொழுதே மதநல்லிணக்கமும் தோன்றிவிடுகின்றன என்று 'தன்வரலாறு விளக்கம்' பற்றிய நூலில் குறிப்பிட்டுள்ளார். மனிதனைத் தவிர மற்ற எல்லா உயிர்களுக்கும் இயற்கை ஒழுங்கமைப்பே வாழ்க்கை வரலாறுகள். ஆனால் மனிதன் வரலாறு இயற்கை ஒழுங்கமைப்பையும் சிந்தனையின் சிறப்பாற்றலும் இணைந்த ஒரு கூட்டு இயக்க விளைவுகளாகும். கூட்டு விளைவுகளின் மூலம் மனிதன் தனது தேவைகளை விருப்பங்களை நிறைவு செய்து கொள்கிறான். எல்லா மக்களும் சமுதாயத்தால் உருவாக்கப்படுகிறார்கள். சமுதாயத்திற்கே தொண்டாற்றி வாழ்கிறார்கள். தனிமனிதன் சமுதாய இணைப்பு உண்மையினை அறிந்து சமுதாய நலனுக்காகவே தொண்டாற்றி வாழ்கிறார்கள். இத்தகைய மக்கள் நல்லிணக்கத்தோடு இருக்கும்வரை மனித இனத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் ஓங்கும் என்பது வேதாத்திரியின் கொள்கையாகும்.

மனிதர்களைத் தனித்தனியாகவும், குழுக்குழுவாகவும் பிரித்துப் பகையை வளர்ப்பது இரண்டு வகையான கோடுகள். ஒன்று விளைநிலத்தின்மீது எல்லை கட்டிய கோடுகள். மற்றொன்று நாடு. மாநிலம், மாவட்டம், கிராமம் என்று உலகின்மீது வரையப்பட்ட கோடுகள் இந்த வரையில் ஒரு தனிமனிதனோ அல்லது ஒரு குழுவினரோ நிலத்தைச் சொந்தம் பாராட்டும் ஒப்பந்தங்கள் உள்ள வரையில் மனிதனிடம் அமைதியும் முழுநிறைவும் ஏற்படாது. மாறாகப் பகை போர் இவை தோன்றிக் கொண்டுதான் இருக்கும். எனவே அவர்களுக்குள் சாதி, சமயம், மதம் என்ற எல்லைக்கோடு உருவாக்கி வேறுபடுபவர். இதை வளர விடக்கூடாது என்பதற்காகத்தான் மகரிஷி எண்ணம், செயல் தூய்மையாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். இந்த நியதியில்தான் 'உலக மகா சேவா சங்கம்' இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தன்படைப்புகள்மூலம் தெளிவுபடுத்துகிறார்.

வேதாத்திரி உலக சேவையைப் பற்றியே மக்களிடம் அதிகம் பேசுகிறார். எல்லோரும் மனஅமைதி பெறவேண்டுமென்றே மதக் கோட்பாடுகளை இறைவழி நின்று மக்களிடம் மதநல்லிணக்கத்தை வளர்த்துவரும் அரிய சேவையை வித்திட்டு வாழ்ந்து மறைந்தவர். உலக ஐக்கிய நாடுகள் சங்கத்தின் முக்கியக் குறிக்கோள் உலக அமைதி ஆகும். உலக சமுதாய சேவா சங்கமும் உலக அமைதிக்கான

மார்க்கத்தையே வலியுறுத்துகிறது. தனி மனிதன் மன அமைதியடைவதன் மூலமே உலக அமைதி ஏற்படும் என்று வலியுறுத்தி வருபவர் அருள் தந்தை மகரிஷி. இப்படி வாழ்வோமானால் தன் கடமையிலிருந்து தவறமாட்டோம். கடமை தவறாத எந்த மனிதனும் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு காட்டுவதில்லை என்கிறார். அதனால் மத நல்லிணக்கமும் அவனுக்குள் ஏற்படுகிறது.

பிரபஞ்ச இயக்கம்

விருப்பம், செயல், விளைவு, அனுபோகம், அனுபவம் எனும் ஐவகையும் உயிரினங்கட்குப் பொதுவாக அமைந்தவை. பிரபஞ்ச காந்த ஆற்றலின் நியதி உயிர்களிடத்தில் வெளிப்படும்போது இந்த ஐந்து வகைச் சிறப்புகளாக மலர்ச்சி பெற்று விளங்குகின்றது. ஆறு அறிவைப் பெற்ற மனிதனிடம் இவ்வைந்து வகையும் மிக விரிவாகப் பெருக்கமடைகின்றன. மனித உயிரின் இயக்க ஆற்றல் மற்ற உயிர்களைவிட மிக நுண்ணிய அதிர்வுகளிலும், இயங்கும் சிறப்புடையது. இதனால் இவ்வைவகை ஆற்றலும் காலத்தாலும் எல்லையாலும் விரிவு பெற்று உலக விரிவாகவும் நீண்ட காலத்தாலும் மனித வாழ்வில் ஒரு இணைப்பைக் கொண்டுள்ளது.

ஒரு நிகழ்ச்சி அல்லது செயல், ஒரு மனிதனிடம் அல்லது மனிதனுக்கு நடைபெறுகிறதென்றால் அதற்குக் காலத்தாலும் பல மக்கள் உள்ளத்தாலும் ஒரு இணைந்த தொடர்பு நிச்சயமாக இருக்கிறது இதை ஒவ்வொரு மனிதனும் எண்ணுகிறான்; பேசுகிறான்; செயல்புரிகின்றான். ஆனால் தனக்குள் மற்றவர்களை இணைத்துக்கொள்ளாது வேறுபடுத்திப் பார்ப்பதால் இணைப்பு துண்டிக்கப்பட்டு நல்லிணக்கம் தோன்ற இடம் கொடாது வாழ்கின்றான். எனவே இந்நிலை மாற அருள் தந்தை வேதாத்திரி பிரபஞ்ச இயக்கத்தை எடுத்துக்காட்டி மனிதன் மதநல்லிணக்கத்தோடு வாழவேண்டும் என்கிறார். எனவே தனிமனிதனின் ஆற்றலான விருப்பம், செயல், விளைவு, அனுபோகம், அனுபவம் எனும் ஐவகை இணைந்த 'மனம்' எனும் ஒரு ஆற்றல் பிரபஞ்சகாந்தம் எனும் பேரியக்கக் களத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்கிறார்.

இப்பிரபஞ்ச எல்லைக்குள் எல்லாம் வல்ல இறைநிலை என்னும் தெய்வம் ஒன்றுதான். அதன் பல்வேறு ஆற்றல்களைக் கொண்டு பெயர்கள் பலவாகப் பேசப்படுகின்றன. இந்தப் பெயர் வித்தியாசத்தை வைத்துக்கொண்டு எண்ணிறந்த மதங்கள் உலகில் நிலவி வருகின்றன. இந்தக் குழப்பம் மனித வாழ்வில் பல குழப்பங்களுக்கும் போர், பகை முதலியவற்றிற்கும் வழிவகுப்பதால் அனைத்து மரியாதைக்குரிய மதத்தலைவர்களையும் ஒன்று கூட்டி உண்மையான ஒரு தெய்வத்தைத் தேர்ந்தெடுத்து உலகுக்களிக்குமாறு கூறும்படி உலகப்பொது மதத் தலைவர்கள் மகாநாட்டைச் செயல்படுத்தத் தத்துவமேதை மகரிஷி விரும்புகின்றார். இவற்றை உலக மக்கள் மதநல்லிணக்கத்தின் திட்டமாகக் கூடக் கருதலாம் என்கிறார்.

பிரபஞ்ச பரிணாமத்தின் உச்சநிலையில் மலர்ந்ததுதான் மனித இனம். மனித இனத்திற்கு மேலாக உயர் அறிவுபடைத்த ஓர் இனம் தோன்ற வேண்டுமா? என மகரிஷி கேள்வி ஒன்றை நம்முன் வைத்து அதற்கு விடையும் பகர்கிறார். "விஞ்ஞானப் பூர்வமான இயற்கைத் தத்துவக் கல்வியும் மனித நேயப் பண்புகளையும் உடல் நலத்தையும் மேம்படுத்துகின்ற ஒழுக்கப்பழக்கக் கல்வியும் வருங்காலச் சமுதாயத்தின் வித்துக்களாகிய இன்றைய இளைய தலைமுறையினருக்கு அவசிய அவசரத் தேவை என்பதை விளக்குகிறார். இந்தத் தேவையானது இளைஞர்களிடம் கிடைத்துவிட்டால் வருங்காலத்தில் சாதிச் சமயப் பிளவுகளோ பொருளாதார ஏற்றத்தாழ்வுகளோ இன வேறுபாடுகளோ அவர்களிடம் வளராது. எனவே 'மத நல்லிணக்கம்' வளர ஒழுக்கத் தேவைகளை இன்றைய இளைஞர்களிடம் வளரச் செய்ய வேண்டும் என்கிறார் மகரிஷி.

இன்றைய காலக்கட்டத்திற்குப் புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும். போதை, போர், பொய், புகை ஒழித்து அமுல் செய்வோம். அதிகச் சுமை ஏதுமில்லை. அவரவர்தம் அறிவின் ஆற்றலினால் உடல் உழைப்பால் வாழ்வதென்ற முடிவும் மதி பிறழ்ந்து மற்றவர்கள் மனம் உடல் வருத்தாதநெறியும் உணவுக்கு உயிர் கொல்லாத நோன்பும் பொது விதியாய்ப் பிறர் பொருளை வாழ்க்கைச் சுதந்திரத்தைப் போற்றிக் காத்தும் பிறர் துன்பம் போக்கும் அன்பும் இளைஞர் சமுதாயத்தில் வளர்ந்து விட்டால் தானாகவே மதநல்லிணக்கம் மேலோங்கி விடும் என்பதில் அருள் தந்தை வேதாத்திரி அசையா நம்பிக்கைக் கொண்டு உள்ளார்.

குடும்பத்தில், சமுதாயத்தில் நாட்டில், உலகில் எல்லா மக்களிடையேயும் நட்பு நலம் காக்க வேண்டியது மனித இன வாழ்வுக்கு மிகவும் அவசியம். மத இணக்கம் குலையக் கூடிய மனோநிலைகளை மாற்றி ஒவ்வொருவரும் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். இப்படி உயர்த்திக் கொள்வதற்காக அகத்தாய்வு என்ற தலைப்பில் எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலையொழித்தல் என்ற சிந்தனைகளை நமதாக்கிக்கொண்டால் ஒவ்வொருவரும், ஏன் உலக மக்கள் அனைவருமே நண்பர்களாக வாழலாம். எளிய வாழ்க்கை, இன்சொல், இன்முகம் காத்தல் ஆகிய மூன்றும் ஒருவரிடமிருந்தால் அவரைச் சூழ்ந்துள்ளவர்கள் அனைவரையும் மனம் ஒத்த நண்பர் களாக்கும். எண்ணம், சொல், செயலால் எப்போதும் எவருக்கும் நன்மையே விளைவிக்க நாட்டத்தோடு இருக்க வேண்டும் என்று மகரிஷி அறிவுறுத்துகிறார்.

இவர் கருத்துகளோடு தாயுமானவர் கருத்தும் ஒத்திருக்கின்றது.

**எல்லோரும் இன்புற்றிருக்க**
**நினைப்பதுவே யல்லாமல்**
**வேறொன்றறியேன் பராபரமே** (தாயுமானவர்)

என்ற தாயுமானவரின் சத்தியம் நம்மில் தழைத்தோங்கட்டும். அதனால் மதத்தால், சமயத்தால் பொருளால் யாரும் வேறுபடமாட்டோம் என்று தாயுமானவரின் கருத்தையும் தம்படைப்புகளில் மேற்கோள் காட்டியுள்ளார்.

உலகில் வாழும் நாம் ஒரு கிராம் மண்ணைக் கூட உருவாக்கிய தில்லை; உருவாக்கவும் முடியாது. அப்படி இருக்க என் மதம் உயர்வு உன் மதம் உயர்வு என்று எப்படி உரிமை கொண்டாட முடியும் என வினவுகிறார். அதேபோல் கூட்டு வாழ்க்கையைக் குறிப்பிடுகிறார். இதனைக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நான் என்றால் உடல் உயிர் மனம் மெய் நான்கும் ஓர்
நல்லிணைப்பில் எழும் கூட்டு அலைக் குறிப்பு
ஊன் உடலோ உணர்ச்சிகளின் ஏற்றத்தாழ்வு
உயிர்த்துகளோ பரிணாமத் தொடரில் வந்த
ஆன்மாவின் சரித்திரத்தின் சுருக்க வித்து
அவ்வித்துக்கும் வித்தாம் அருட் பேராற்றல்
வான் அடக்கிச் சூழ்ந்தகன்று உயர்ந்தமெய்யாம்
வாலறிவே அகத்துவாம் அனைத்துக்குள்ளும் (மகரிஷி)

என்று மனிதர்களின் நல் இணைப்பை எடுத்தோதுகிறார். மேலும் மனிதர்கள் வாழும் நிலையில் மத நல்லிணக்கத்தின் மார்க்கத்தைக் குறிப்பிடுகிறார். "மனிதனே பொதுஉடைமையாகவென்றால் மனமாற்றம் மக்களெல்லாம் அடையவேண்டும் மனிதர்களில் மதி மிகுந்தோர் சிலர்முன் வந்து மக்களுக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு மனிதர்கட்குச் சேவை செய்து அன்பால் பண்பால் மண்ணுலகில். இம்மாற்றம் விளைக்க வேண்டும். இப்படிச் செய்தால் மனிதர் எல்லோரும் படிப்படியாய்ச் சில ஆண்டிற்குள் மனம்மாறி அனைவரும் நல்லிணக்கம் அடைந்து விடுவர்.

உலக மக்கள் வாழ்வில் அன்பும், அறமும் அமைதியும் ஓங்க வேண்டும் என்றால் உள்ளம் அமைதி அடைய வேண்டும். உள்ளத்தின் அமைதியைப் பொருத்தே உலகத்தின் அமைதியும் அமைகின்றது. நல்லெண்ணத்துடன் பொது நலத்திற்கு வேண்டிய சொல்லும் கருத்துகளும் சூழ்நிலைகளுக்குப் பொருந்தாமலிருக்கலாம். அவை பின்னர் அனுபவப் பொது நிலையறிவு கூடும் போது இரு மதத் தரப்பிணையும் ஆதரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். மனித சமுதாயத்தின் நலம் விரும்புவர்களைப் பார்த்து உலக சமாதானத்தை எடுத்துக்கூறுகிறார். உலகில் எந்தப் பாகத்திலும் தேசத்திலும் எவராலும் எந்தப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதை எந்தத் தேசத்தில் வாழும் மனிதரும் அனுபவிக்கின்றான். அதைப்பெற விழைகின்றான். அப்படி இருக்கும் நிலையில் ஒரு மதக் கருத்தைப் பிறிதோர் மதவாதி ஏன் ஏற்றுக் கொள்வதில்லை. தன் மதக் கருத்தை மட்டும் ஏன் பின்பற்ற வேண்டும். எனவே உணவு, உடை இவற்றையெல்லாம் பகிர்ந்து கொள்ளும் மனிதன் எல்லா மதக் கருத்துகளையும் மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லா மதத்தையும் ஒன்றிணைத்து ஒரு மதமாக்கிக் கொள்ள வேண்டும் என உலக சமாதானம் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

உலகப்பொது நியதியில் நல்லிணக்கம்

தனிமனிதன் இன்று படும் துன்பம், ஆன்ம தத்துவத்தை அறியாது மிரளும் மாயை இனி நமது சமாதான உலகில் ஏது? எங்கு எவரும் எப்போதும் கூட்டாய்ச் சேர்ந்து புனிதமுள்ள இயற்கையினைப் புரிந்து கொண்டு, பொதுநலனே தம் நலனாய்க் கருதி வாழ வேண்டும். அப்படி நாம் வாழ வேண்டும் எனில் உலகில் மனிதர்கள் தங்களுக்குள் வேறுபடுத்திக் கொள்ளாது இருக்க வேண்டும். அதேபோல் பிறந்துவிட்ட ஒரு தனிமனிதனுக்கு வாழவும் அவ்வுலகத்தில் வளரவும் வழிசெய்தல் வேண்டும். இறந்து விடும் வரைக்கும் இந்த உரிமை உண்டு. இதனை எவர் தடுத்தாலும் அது அநீதியே ஆகும் என்று துணிவாகத் தன் கருத்தைப் புலப்படுத்தி உள்ளார். அதே சமயம் மனிதன் சக மனிதனை துன்புறுத்தும் மதி மயக்கத்தை தெளிய வைக்கப் பல அறிஞர்களை உதவிக்கு அழைக்கின்றார். தனித்தனியே அரசுகள் பல இருந்த நாளில் இந்த உலகத்தில் சண்டைகள் அடிக்கடி தோன்றலாயிற்று. மனிதர்களுக்கு நாட்டாடை, நாட்டுப்பற்று என்று மாறி மாறித் தோன்றிக் கொண்டே இருக்கும். இப்படி இந்த நிலைகள் மாற வேண்டும் என்றால் இனிமேல் உலகத்தில் ஒரே ஆட்சி நிலைபெற வேண்டும். அப்படி ஆட்சி அமைந்தால் மதமும் ஒன்றாக அமையும் மத நல்லிணக்கமும் தோன்றும் எனத் தன் வலிமைக் கருத்தை அழுத்திச் சொல்லிச் செல்கிறார்.

உலக அமைதி என்பது தனிமனிதன் வாழ்வின் அமைதியிலிருந்து மலர்ந்து பரவி வலுப்பெற வேண்டும். பறித்துண்டு வாழும் பண்பாடு இன்று பரவலாக நிலவி வருகிறது. இது உழைத்துண்டு வாழும் பண்பாடாக மாற வேண்டும். பிறர்க்குக் கொடுத்து வாழும் பண்பாடாகவும் அமைதல் வேண்டும். பகிர்ந்து வாழும் பண்பாட்டில்தான் ஒத்தும் உதவியும் வாழும் ஒழுக்கம் வளரும். அப்படி வளரும் ஒழுக்கப் பண்பாட்டில் கண்டிப்பாக ஒரு நல்லிணக்கம் தோன்றக் கூடும் என்று மகரிஷி எதிர்பார்க்கின்றார். இந்த எதிர்பார்ப்பில் தவறும் ஒன்றும் இல்லை என்பதும் மகரிஷி அவர்களின் கருத்தாகும். பல தொழில் செய்யும் வல்லுநர்கள், பணக்காரர்கள், ஆட்சிப் பற்றுடையோர்கள், பொறுப்புடையோர்கள், விஞ்ஞானிகள், பயிர்த்தொழில் வரலாறு புவியியல் வல்லோர்கள் அனைவரும் இந்த நில உலகில் ஒரு மையமான இடத்தில் கூடித் திட்டங்களை வகுக்க வேண்டும். அத்திட்டங்கள்மூலம் மத நல்லிணக்கத்தைக் கடைப்பிடிக்க முடியும் என்கிறார். இதற்காக எல்லா நாடுகளின் மக்களிடமும் தன் மதநல்லிணக்கக் கொள்கையைத் தெரிவிக்க விழைந்தவர் நம் அருள் தந்தை மகரிஷி.

நாகரிகத் தொடக்கக்கால சமுதாயத்திலிருந்து மனித இனம் அறிவு வளர்ச்சி அடைந்துள்ள காலக்கட்டத்திற்கு வந்திருக்கிறது. தத்துவம் மற்றும் அறிவியல் அறிவு உலகம் முழுவதும் நன்கு வளர்ந்துள்ளது. ஆனால் மனிதன் மட்டும் இன்னும் 'மதம்' என்னும் இருட்டில் இருக்கின்றான். எடுத்துக்காட்டாக, ஒரே ஒரு உலகில்தான்

வாழ்ந்து வருகிறோம். கடலும் ஒன்றுதான். கடலில் நீர் ஆவியாகி மேகங்களாக மாறிப் பூமியில் மழையாகப் பெய்கிறது. இந்தத் தண்ணீரே உலகிலுள்ள அனைத்துக்கும் ஒன்றுதான். நாம் எல்லோரும் எவ்விதப் பாகுபாடுமின்றி காற்றையே உள்ளே இழுத்தும் வெளியேவிட்டுப் பின் அதே காற்றையே திரும்பவும் பயன்படுத்தி வருகிறோம். அனைத்து உலகத்திற்கும் ஒரு சூரியன்தான் இருக்கிறது. ஆனால் மனிதன் மட்டும் ஒரே மதத்தைப் பின்பற்றாது பல மதம் பல சமயம் என்று வாழ்கிறான். இப்படி மனிதன் வாழ்ந்தால் மதநல்லிணக்கம் வளராது. மாறாக வேற்றுமை உணர்வுதான் வளரும் என்கிறார்.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், விலங்குகளையோ, தாவரங்களையோ போலில்லாமல் தான்விரும்பும் முறையில் செயல்படும் சுதந்திரம் பரிணாமத்தில் மனிதனுக்குக் கிடைத்திருக்கிறது. அவனுடைய விருப்பம் சரியாக இருக்கும் பட்சத்தில் அவன் உயர்வடைகின்றான். இல்லை எனில் அவனுக்குத் தாழ்வுதான். சங்ககாலப் புலவர் கணியன் பூங்குன்றனார் கூறும் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதுதான். இதில் பல விடயங்கள் இருக்கின்றன. எது நல்லதோ அதை விடுத்து, எது பிடிக்கிறதோ அதையே மனிதன் எடுத்துக்கொள்கிறான். உலகம் முழுவதிலும் நிலவும் பிணக்குகளுக்கும் குழப்பங்களுக்கும் இதுவே காரணம் ஆகும். எது பிடித்திருக்கிறதோ அதை விடுத்து, எது சரியோ அதையே மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை மகரிஷி புலப்படுத்தியுள்ளார். மனிதன் சுதந்திரமாக மதத்தைப் படித்துக் கொள்ள வேண்டும் மதத்தால் வேறுபடக் கூடாது என்கிறார்.

### மனம்-மறைபொருள்

மனம் ஒரு மாபெரும் மறைபொருளாகும். இறைநிலையே தனது பரிணாமத்தால் 'வேதான்' எனும் நுண் விண்ணாகத் தொடங்கி, பஞ்சபூதங்கள், அண்டங்கள் உலகம் இவையாகி, ஓரறிவு முதல் ஐந்தறிவு உயிரினங்களில் எல்லை கட்டிய உணர்வு நிலைகளையுடைய மனமாகி விடுகிறது. மனிதனிடத்து அம்மனமே புலன்களைக் கடந்து நின்று நுண்ணிய பொருட்களெல்லாம் அதை விட நுண்ணிய நிலையிலிருந்து உணர முடிகிறது. விரிந்தகன்ற எல்லை இல்லாத இறைவெளியைக் கூடத் தன்னகத்தே அடக்கிக் கொள்ளவும் மனம் ஆற்றலைத் தருகின்றது. மனத்தைப் பற்றி விளக்கச் சில கவிதைகளைத் தத்துவஞானி விளக்குகிறார். மனித மனம் ஒருமுகப்பட்டால்தான் சக மனிதனோடு ஒன்றுபட முடியும். எனவே 'மனம்' பற்றி மனிதன் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனித மனதைப் பற்றி மனிதர் அறியாமல்
மயங்குகிறார், மயக்குகிறார் உண்மை எங்கு காணும்
மனம் என்றால் சீவகாந்த அலையன்றி வேறோ

மனம் நிலைத்தால் அறிவு அதே இறை வெளி மெய்ப்பொருளாம்
மனம் ஆற்றும் வினைகளெல்லாம் மறுமுனையில் தெய்வம்
மாறாமல் சுருக்கிக் கருமையத்தில் வைக்கும்
மனம் அறிவு உயிர் தெய்வம் காந்தம் இவை உணர
மாய நிழல் விண்ணறிவு மனிதருக்குத் தேவை"
(ஞானக்களஞ்சியம், மகரிஷி, ப. 658)

என்கிறார். தனிமனிதன் மனித சமுதாயம், மனித குலம் எவரெனினும் 'அடக்கம்' என்ற உயர் நெறியை உணராமலும், அதன் வழியே வாழாமலும் அடங்காமை என்ற குழியில் விழுந்து அதனால் விளையும் துன்பங்களே மனிதகுல வாழ்க்கைத் துன்பங்கள் ஆகும். இயற்கை நியதியை அறியாமலோ, அலட்சியம் செய்தோ, உணர்ச்சி வயப்பட்டோ மனிதன் செயலாற்றும்போது ஏற்படும் விளைவுகள்தான் துன்பங்கள். பொருளிழப்பு, ஏழ்மை, நோய்கள், உறுப்பிழப்பு, அகால மரணம் ஆகிய அனைத்துக் கேடுகளுமாகும். இத்துன்பங்களுக்கும் கேடுகளுக்கும் காரணம் 'மனம்' ஒருமுகப்படுத்தாததால் வந்த விளைவே ஆகும். எடுத்துக்காட்டாக ஓர் அணையில் ஓர் ஆறு கலக்கின்றது. ஆற்றுநீரின் அளவிற்கும், அதன் குணத்திற்கும் தக்கபடி அணைநீரை ஆற்றுநீர் தரம் மாற்றி விடுகிறது. இதே போன்று, பேரியக்க மண்டலத்தில் உள்ள வான்காந்த ஆற்றல் எல்லாப் பொருட்களிலும் ஊடுருவி, குறைகளைப் போக்கி, மாற்றம் செய்து கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய எண்ணம், சொல், செயல் என்ற மூன்று வகையிலிருந்தும் எழும் அலைகள், சீவகாந்த அலையிலிருந்து எழும் தன்மாற்ற அலைகளாகும். ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற, 'தர' மாற்றங்களை மனிதன் எப்போதும் பெற்றுக் கொண்டேயிருக்கின்றான். எனவே மனிதன் எப்போதும் மனஆற்றலுடன் இருந்தால் மதஒற்றுமையுடனும் இனஒற்றுமையுடனும் வாழமுடியும் என்கிறார்.

மனித சமுதாயம் வளம் பொருந்தியதாக இருக்க வேண்டுமென்ற கருத்து எல்லா மக்களுக்கும் பொதுவாக இருக்கிறது இதற்கு இறைநிலை வேண்டும். இறைநிலையைப் பெறுவதற்கு மனம் கட்டுப்பாடு வேண்டும் அப்படி இருந்தால் மனிதனுடைய மன உணர்வில் அனைத்துயிர்களும் நலமாய் இருக்க முடியும். எந்த மதம் இறையுணர்வைத் தக்க உள்ளப் பயிற்சி முறையை அளிக்க வல்லதோ அந்த மதம்தான் மனிதனுக்குத் தேவையாகிறது. எந்த மதம் செயல்-விளைவு ஞானத்தைப் பண்பாட்டு அடிப்படையில் அளிக்க வல்லதோ அந்த மதமே மனிதனுக்குத் தேவைப்படுகிறது. அத்தகைய மதத்தால் பண்பட்ட மக்கள் எப்படி வாழ்வார்கள் வாழ வேண்டும் என்ற கொள்கையை இறை அண்ணலாகிய மகரிஷி தனது 'பிரம்மஞானம்' என்ற நூலில் விரிவான விளக்கத்தைத் தந்திருக்கிறார். உயிர்கட்கும், உலகுக்கும் பேரியக்க மண்டலத்துக்கும் மூலப்பொருளான தெய்வநிலை இதுதான் என்று விஞ்ஞானிகளும் மெய்ஞ்ஞானிகளும் ஒன்று கூடி ஆராய்ந்து மக்களுக்கு உணர்த்த வேண்டியது அவசியம் என்கிறார்.

இவ்வாறு எல்லாம் மகரிஷி கூறுவது எந்தத் துறையையும் குறைக் கூறுவதற்கு அல்ல. மாறாக 'மதம்' என்ற வெறியில் நல்லிணக்கத்தை மறந்து 'போர்' என்ற வன்முறையில் ஈடுபடும் மனித இனத்தைத் திருத்துவதற்காகவே தனது நோக்கமாகக் கொண்டுள்ளார். மனித குலத் தலைவர்களைத் தூண்டு அவர்கள்மூலம் குறைகளைத் திருத்தி நலம் காண வைப்பது அவரது கொள்கையாகும். மனித இனம் தோன்றி இலட்சக்கணக்கான ஆண்டுகள் சென்றுவிட்டன. ஆனால் இன்னும் எல்லா நாடுகளிலும், எல்லா மூலைகளிலும் மக்கள் ஒருவருக்கு ஒருவர் வேற்றுமை மனப்பான்மையில் வாழ்வதாக மகரிஷி கூறுகிறார். இவர்களை ஒன்றுபடுத்த வேண்டும் என்றால் 'மனம்' ஒன்றுபட வேண்டும் என்கிறார். இதற்குப் பகவத்கீதையை எடுத்துக்காட்டுகிறார். மனிதன் தன்னுடைய எல்லா உறுப்புக்களையும் தனது ஆத்மாவைச் சமமாகப் பார்ப்பதுபோல உலகிலுள்ள அனைத்து மக்களையும் சமமாகப் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும் என்கிறார். மனம் வசப்பட்ட பிறகு முயற்சி செய்யாமல் இருந்தால் அதாவது மனத்தை முழுமையாகப் பரமாத்மாவிடம் இணைப்பதற்குரிய தீவிர சாதனை புரியாவிட்டால் 'சமத்துவம்' தானாக வந்துவிடாது. இதற்கு முயற்சி வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடல்நீர், கிணற்றுநீர் வேறு வேறாகப் பேசப்பட்டாலும், கடல்நீர்தான் ஊற்றின்மூலமாகக் கிணற்றுநீராக இருக்கிறது. இவ்வாறு அகண்டகாரமான இறைநிலை தனது இயக்கத்தில் எடுத்திருக்கும் ஒவ்வொரு வடிவம், குணம், உணர்வுகள் என்ற சிறப்புகளைத் தனித்தனியே அடையாளம் காட்டுவதற்காக ஏற்பட்ட விளைவுகளே பல விதமான பெயர்கள். எனவே மதங்கள் பல பெயர்களில் இருந்தாலும் மதநல்லிணக்கம் என்ற கூட்டு நிலையிலே சமுதாயம் உயர்வுபெற வேண்டும் என மகரிஷி விழைகிறார். மனிதனுக்குள் ஏற்கனவே உறைந்துள்ள தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே சமயம் என்ற சூத்திரத்தைத் தன்தாரக மந்திரமாக உச்சரிப்பவர் மகரிஷி. இதனையே சுவாமி விவேகானந்தரும் தன்கருத்தாக முன் வைக்கிறார். "தெய்வங்களாகுங்கள். பிறரைத் தெய்வங்களாக்குங்கள்" என்கிறார். இதிலிருந்து அவர் உணர்த்துவது உண்மையான சமயம் என்பது தெய்வத்தை உணர்வது என்கிறார். இது இன்றைய காலத்திற்கு மிக அவசியமான ஒன்றாகும். மூடநம்பிக்கை, மனிதனின் பெரும் பகைவன்தான். ஆனால் மதவெறி அதைவிட மோசமானது என்கிறார். எனவே மகரிஷியின் கருத்துக்கு வலுசேர்ப்பதுபோல் பல மகான்களும் மதச்சார்பு கூடாது என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

தெய்வ ஆற்றலின் தன்மைகளையும், சிறப்புகளையும் அறியாமலோ, அலட்சியம் செய்தோ, உணர்ச்சி வயத்தால் தன் முனைப்பு கொண்டோ அளவு மீறியும், முறை மாறியும் மனஆற்றல் செயல்புரிய வேண்டும். அச்செயலுக்கேற்ப ஏற்படும் விளைவுகள்தான் செயல் விளைவுகள் எனப் பெயர் பெறுகிறது. இச்செயலில் சிறிதளவும் தவறாமலும் பிழையில்லாமலும், அன்பும் கருணையுமே இயல்பாக

அமைய வேண்டும் அப்பொழுதுதான் மக்களின் மதச்சார்பின்மை வளரமுடியும், மக்களிடம் நல்லிணக்கமும் ஏற்படும் என்று தன் படைப்பாகிய செயல்-விளைவுத் தத்துவம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மாறிவரும் சமூகத்தில் என்றுமுள்ள நித்தியப் பண்புகள் வாய்ந்த விழுமியங்கள் பல உள்ளன. அந்த விழுமியங்கள்தான் மொழி இணக்கத்தைம் சாதி இணக்கத்தையும் மதஇணக்கத்தையும் பின்னிப்பிணைய வைப்பது என்கிறார். இந்திய மக்களிடம் தத்துவ ஞானமும் சமயப்பொறையும், பரந்தபோக்கும் வேண்டும் என்றும் தத்துவஞானி பறைசாற்றுகிறார். வெவ்வேறு இடங்களில் வெவ்வேறாக உற்பத்தியாகி வெவ்வேறு பெயர்களையும், வடிவங்களையும் கொண்டு நேராகவும் வளைந்தும் செல்லும் பல ஆறுகள் இறுதியில் கடலில் சேர்வதுபோல் பல நம்பிக்கைகளைப் பல கொள்கைகளைக் கொண்ட மதவாதிகளும் மதத்தலைவர்களும் மதபேதம் கொண்ட மக்களும் இறுதியில் 'இறைவன்' ஒருவனே என்ற நியதியில் ஐயக்கியமாகின்றனர். இப்படி இருக்க வாழும்போது ஏன் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும் எனக் கேள்விகளை எழுப்புகிறார் மகரிஷி. எனவே இக்கேள்விக்கு அவர் தரும் பதில் முதலில் மனிதனின் இதயம் இணைய வேண்டும். ஒன்றுபட்ட மனத்துடன் அனைவரும் சேர்ந்து இன்பமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். உலக நேயத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். எல்லா சீவராசிகளையும் நட்புறவு விழியுடன் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் இறைவனும் நம்மை நட்புறவுடன் பார்ப்பார் என்கிறார். இவ்வாறு நாம் செயல்-வினைத் தத்துவத்தோடு வாழ்ந்தால் மனித நல்லிணக்கம் தோன்றிவிடும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

### சமயப்பொறை

எந்த எந்தப் பக்தன் நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகின்றானோ அந்த அவனுடையா அசையா நம்பிக்கைக்குத் தக்க வடிவத்துடன் இறைவன் காட்சி தருகின்றான்.

யாதொரு தெய்வங் கொண்டீர்அத்
தெய்வமாகி ஆங்கே (சிவஞானசித்தியார்)

இக்கருத்து நம் மகரிஷி கருத்தோடு ஒப்புநோக்கத்தக்கது. சமயப்பொறையுடன் வாழச் சில வழிமுறைகளையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது தமது சமயத்தை அதிகமாகப் புகழ்வதும் பிற சமயப் பிரிவுகளை அதிகமாக இகழ்வதும் கூடாது. ஏதாவது அவசியம் ஏற்பட்டால் புகழவோ கண்டிக்கவோ உரிமை உண்டு. அவ்வுரிமை மிதமாக இருக்க வேண்டும். பிற சமயத்தினருக்குரிய மரியாதை தர வேண்டும் இவ்வாறு ஒரு தனிமனிதன் நடந்து கொண்டால் அவன் மற்றவர்களிடமிருந்து மேம்பட்டவனாகிறான். சமய நல்லிணக்கம் அவன் மனத்தில் ஊன்றி வளர்வதோடு எல்லோரும் சமம் எனப் பாவிக்கப் பழகி விடுகின்றான். எனவே சமுதாயத்தில் மதநல்லிணக்கம் பரவி விடுகின்றது. சமயப்பொறையால் மனிதன் மனிதனாகக் கருதப்படுகின்றான்.

மனிதன் பிற சமயங்களின் அடிப்படைத் தத்துவங்களை அறிந்து அதனைப் பின்பற்றி நடக்க வேண்டும். மக்கள் பல சமயங்களைப் பற்றி நன்றாகப் புரிந்துகொண்டு நல்வாழ்விற்குப் பாடுபட வேண்டும் என்பதுதான் மகரிஷியின் நோக்கமும் ஆசையும் ஆகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் சர்வ மத சமரசத்தை எடுத்தோதியதுடன், சமயங் கடந்த ஆன்மிக நேயத்தை மிகத் தெளிவாக உணர்த்தியவர் இராமலிங்கர். "எம்மதநிலையும் நின்னருள் நிலையில் இயங்குதல் அறிந்தனன் எல்லாஞ் சம்மதமாக்கிக் கொள்கிறேன்" என்று இராமலிங்கர் சமரச சத்த சன்மார்க்க சங்கம் என்னும் அமைப்பில் குறிப்பிட்டுள்ளார். எனவே இராமலிங்கர் கூறும் கருத்தின் வழியே வேதாத்திரி மகரிஷியும் கூறுகிறார். உலகத்தில் எந்த ஒரு நாட்டிலும் பல்வேறு பிரிவினர்களிடையே சகோதரத்துவ உணர்வும் அன்பும் நிலவ வேண்டும் என்கிறார். மனிதன் பல வழிகளையும் பின்பற்றிச் சென்றாலும் ஒரே கடவுளை நோக்கித்தான் செல்ல முடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர் மகரிஷி. தான்நம்பியதை மக்களிடம் தம் படைப்புகள்வழி எடுத்தியம்புகிறார்.

## பாரதியார் பார்வையில் மதம்

வேதாந்த மதத்தின் வேரினைக் கண்டவர் மகாகவி பாரதியார். இவர் சர்வமத சமரசநெறி கூறும் பாடலை மக்களுக்குத் தந்துள்ளார்.

பூமியிலே, கண்டம் ஐந்து மதங்கள் கோடி
புத்தமதம் சமணமதம் பார்ஸி மார்க்கம்
சாமியென யேசு பதம் போற்றும் மார்க்கம்
சநாதனமாம் அறிந்து மதம் இஸ்லாம் யூதம்
நாமமுயர் சீனத்துத் 'தாவு' முதலாம் பார்மேல்
யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே
யாவினுக்கும் உட்புதைந்த கருத்தில்கொன்றே.

(பாரதி பாடல்களில் சமுதாயநெறி, ப. 72)

என்று எண்ணிறந்த மதங்கள் தோன்றினாலும் அனைத்து மதமும் கூறும் கருத்து ஒன்றே என்கிறார். இதைத்தான் வேதாத்திரி மகரிஷி "உலகளாவிய மதம் என்று பெருமை பேசவேண்டுமானால் ஒரே மதம் சமுதாயத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்கிறார். ஒரே மதம் தோன்றினால் மட்டும் போதாது. அம்மதத்தால் அன்பும் அகிம்சை நெறியும் தொண்டுள்ளமும் வளர வேண்டும். அப்பொழுதுதான் மத நல்லிணக்கம் வளரும் என்கிறார். வேற்றுமை மதத்திலும் ஒற்றுமை காணும் மதநல்லிணக்கப் பண்பே உலகளாவிய மதத்திற்குரிய தேர்வுப்பாடமாக அமைய வேண்டும் என்று மகரிஷி விரும்புகிறார். அதே சமயத்தில் மக்கள் புனிதத்தன்மையுடன் தூய்மை, இரக்கம் முதலானவை எல்லா மதத்திலும் உண்டு என்பதையும் தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். மகரிஷி வேண்டுவது எல்லாம் ஒன்றே

ஒன்றுதான். மத சகிப்புத்தன்மை மட்டுமன்று. பிற சமயத்தவருடன் இணக்கம் காட்டி அரவணைக்க வேண்டும் என்பதையும் அவர் கொள்கையாக வளர்த்திருந்தார்.

உலகம் அனைத்திற்கும் ஒரு மதம் போதும் என்று உணர்த்திய மகரிஷி மேலும் அதன் குறிக்கோளையும் குறிப்பிட்டுள்ளார். மத கண்டனத்திற்கும் ஒடுங்கிய எண்ணங்களுக்கும் இடம் தரலாகாது. மாறாக எல்லா மக்களிடத்தும் தெய்வத்தைக் கண்டு உண்மையாகிய தெய்வத் தன்மையை அடைவதற்கு உதவிபுரிந்து நிற்பதுதான் மதநல்லிணக்கக் குறிக்கோளாகும் என்கிறார் மகரிஷி. அறிவால் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியாது; அன்பு வேண்டும்; ஒற்றுமை வேண்டும்; பொறுமை வேண்டும்; அப்பொழுதுதான் அன்பு செலுத்த முடியும். அன்பைப் பெற முடியும். இப்படி செலுத்துவதும் பெறுவதும் மனிதன் பெற்றுவிட்டால் வாழ்க்கைக்குப் பொருள் இருக்கும் அத்தகைய அன்பை அடிப்படையாக் கொண்ட ஒரு மதத்தை மக்களுக்குத் தேவை என்கிறார். உலகத்தில் எந்நாட்டைச் சேர்ந்தவனனாலும் சரி, எந்த மதத்தைச் சேர்ந்தவனனாலும் சரி எல்லாவழிபாடுகளும் அன்பினால் ஒழுங்குபடுத்த வேண்டும். ஒவ்வொரு மதத்திலும் பிராத்தனைகள் உள்ளன. ஆனால் பணத்திற்காகவோ, உடல் நலத்திற்காகவோ பிரார்த்திக்காது அனைவரும் ஒன்றுபடப் பிரார்த்திருப்பது நலம் தரும் என்கிறார். இந்த பிரார்த்தனைதான் மனிதநேயத்திற்கு வழிவகை செய்யும். மனிதநேயம் என்பதை முன்னர் விரிவாகக் கண்டோம். இருந்தபோதிலும் செயல் திட்டத்திலும் மனிதநேயம் பண்பை விளக்கி மதநல்லிணக்கத்திற்கு வித்திடுகிறார். மனிதருக்கு மனிதர் இருக்கவேண்டிய தொடர்புறவு பற்றி விளக்குகிறார். மனிதனை மனிதன் மதித்துச் செலுத்தும் செயல்பாடுதான் அன்பு என்று விரிவாகப் பொருள் தருகிறார்.

அன்பு, கனிவு, கருணை, பக்தி, ஈதல் போன்ற குணங்கள் மனிதனை மனிதநேயத்திற்கு அழைத்துச் செல்கின்றன. மக்களுடைய நிலத்தையோ ஆட்சியையோ அடிப்படையாகக் கொண்டதல்ல, அங்கே வாழுகின்ற மக்களின் மனிதநேயப் பண்பை வைத்துத்தான் சிறப்பாகக் கருதப்படுகின்றன. மகரிஷி தன் படைப்புகளில் மனிதர்களை மட்டும் உறவாக எண்ணாமல் இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துமாறு பணிக்கிறார். ஒரு தனிமனிதன் இன்பமாக வாழ எண்ணுகிறான். இந்த எண்ணச் செயல்பாடுகளைக் கடக்கப் பல நிலைகள் உள்ளன. அந்த நிலைகளில் அவன் மேற்கொள்ளும் முயற்சிகளே கடமையாகக் கருதப்படுகின்றன. அந்தக் கடமைகள் மனத்தைப் பொறுத்தவரையில் பொதுவாகக் கருதப்பட்டாலும் மதக் கட்டுப்பாடுகளால் கற்பனையாகவோ தனிமனிதனின் ஆதாயத்தைக் கருதியோ அல்லது ஒழுக்கம் கருதியோ இல்லை. அறிவியல் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டவையாகக் கருத இடமுண்டு. ஆராய்ச்சி செய்து கூறுகையில் அனைத்து மதப்போதனைகளும் அறிவியல், மருத்துவம், பொருளாதார மேம்பாடு ஒருவரை ஒருவர் நேசிக்க உதவ

வழிவகுக்கும் ஒரு திட்டம்தான் எனலாம். உலக நலத்தொண்டராக விளங்கியவர் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி. அதனால்தான் மனிதகும் மனநிறைவோடும் அமைதியோடும் வாழ்வதற்கு அறிவியல் நோக்கில் ஆராய்ந்து மனிதனுக்கு மதநல்லிணக்கம் தேவை என்கிறார். இவருடைய படைப்புகளில் கூறிய புதியதொரு சமதர்ம சமுதாயத்தின்வழி கண்டிப்பாக மதநல்லிணக்கம் தோன்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மனிதகுல வாழ்வின் வளத்திற்காகத் தங்கள் உழைப்பையும் அறிவையும் தியாகம் செய்து இறைத்தொண்டாற்றிய அத்தனை மகான்களைப் போலவே நம் அருள்தந்தை மகரிஷியும் மதமும் மனிதனும் எப்படி ஒன்றுபட்டு இணைய வேண்டும் என்பதை நூல்வழி செயல்படுத்தியிருப்பது பாராட்டுக்குரிய வகையில் அமைந்துள்ளது.

காலத்தாலும் இடத்தாலும் தேவையை அடிப்படையாகக் கொண்ட பழக்கத்தாலும், சில பல பழக்கங்களும் கருத்துகளும் அவ்வப்போது ஆங்காங்கே உருவானாலும் ஒருவர் அறிந்ததைப் பலரும் அறியச் செய்ய ஒரு பாலமாக அருள்தந்தை படைப்புகளின்வழி நிற்கிறார்.

### வேதாத்திரியின் ஞான விளக்கம்

தெய்வம் என்பது ஒன்றா? பலவா? ஒன்று என்றால் எந்தப் பேராற்றலைத் தெய்வம் என்று ஏற்றுக்கொள்ளலாம்? என்று மகரிஷி ஒரு கேள்வி கேட்கிறார். அதற்கு ஞானமார்க்கத்தில் வழியும் சொல்கிறார். இயற்கையில் நடைபெறுகின்ற வியத்தகு நிகழ்ச்சிகளுக்கு எந்த ஆற்றல் காரணம் என்று ஆராய்தலும் ஆகும். அவ்வாறு ஆராயும்போது இயற்கை நிகழ்ச்சிகளைக் காணுதலால் ஓர் உவப்பு, மகிழ்ச்சி, நிறைவு ஆகியவை உண்டாகின்றன. அதுதான் பேரின்பம், துன்பம், இன்பம், அமைதி (Pain, Pressure, Peace, Ecstasy) என விளக்கப்படுகிறது. இந்த நான்கு உணர்வுதான் மனித மன உணர்வுகளாகிய அனுபவம் எனப்படுகின்றன. வேறுபட உணர்தல் என்பது நேற்றுப் பார்த்த ஒன்றுக்கும், இன்றைக்குப் பார்க்கப்படும் பிறிதொன்றிற்கும் உள்ள வேறுபாடுகளை இன்ன அளவு எனக் கண்டுகொள்வதாகும். எனவே இந்த அடிப்படை உணர்வுகளை வைத்துத்தான் மனிதன் இறைஉணர்வைத் தேட முடியும்.

நிலை, பொருள், சிவம், தெய்வம், பூரணம். ஆனால் அதன் அலை விரைவுதான் நிகழ்ச்சி மனம் ஆகும். எனவே மனத்தை அறிந்தால்தான் அறிவை அறியலாம்; அறிவை அறிந்தால் அறிந்த அவ்விடத்திலேயே தெய்வத்தையும் அறியலாம். உலகில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் உத்தமர்கள் தோன்றி அறிவுரைகள் வழங்கி வருகின்றனர். இன்றைய அறிவியல் உலகத்தில் மனிதன் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழ்ந்து கொண்டு இருக்கிறான். இனத்தாலும் மதத்தாலும் பொருளாதாரத்தாலும் இன்றைய இளைஞர்களில் சிலர் சீரழிவை நோக்கிச் சென்று அழிகின்றனர். இக்காலக்கட்டத்தில் நம் அருள்தந்தை மகரிஷியின் ஞானம் பற்றிய விளக்கம் இளைஞர்களின் மனத்தைச் சீர்செய்கிறது. திருக்குறள்மீது

மதிப்புக் கொண்ட மகான்கள் பலர். அவர்களில் வேதாத்திரி மகரிஷியும் ஒருவர். எனவே தனிமனிதனுக்கு வேண்டிய பண்புகளாக வள்ளுவர் ஒழுக்கத்தை வலியுறுத்துகிறார். அவர்வழி வந்த மகரிஷியும் ஞான விளக்கத்தில் தனிமனிதப் பண்புகளை விளக்கி மனிதன் ஒன்றுபட வைக்கின்றார்.

ஞானம் எனும் அறிவைப் பெற்ற மனிதன் கடவுளுக்கு இணையாவான். கடவுள் இன்னது என்று உணர்வதாலும் அனைத்தையுமே கடவுளாக எண்ணுவதாலும் நீக்கமற நிறைந்திருக்கும் பொருளே கடவுளாகிறது என்ற உணர்வு வலுத்து நிற்கும் மனத்தையுடைய மனிதனைப் பிறர் கடவுளாகக் காண்கின்றனர். இதனைக் கீழ்வரும் பாடலால் விளக்குகிறார்.

"கடவுள் எனப்படுபவனே மனிதனானான்
கருத்தியங்கிக் கருத்துயர்ந்து கருத்தறிந்தான்
கடவுளாய் அனைத்தையுமே கண்டுவிட்டான்
காண்பவனே ஆதியந்தமாகி நின்றான்
கடவுள் நிலை யறிந்தவனே அறியாதோர்க்குக்
கருத்துணர்த்தும் நூல்கள் பலஎழுதிவைத்தான்
கடவுள் இரகசியம் அதனை வெளியாய்க்காட்டும்
கடமையே சிறந்ததெனக் கண்டான் ஞானி." (மகரிஷி)

என மகரிஷி ஞான விளக்கத்தில் கூட மனிதனின் கடமையை விளக்குகிறார். எவன் ஒருவன்தான் கடமையில் தவறாது நடக்கிறானோ அவன் தான் மற்றவர்களையும் மதித்து நடப்பான் என்கிறார். பொதுவாக 'நான்' என்பது அகந்தை எனத் தத்துவ அறிஞர்கள் கூறி வருகின்றனர். ஆனால் மகரிஷி மட்டும் 'நான்' என்பதை மனித இயக்கம் என விளக்கம் தருகிறார். அவரவர் அறிந்த அறிவின் ஆற்றலே இதற்குக் காரணம் என்கிறார். இதனைத் தன்கவிதைமூலமும் எடுத்தியம்புகிறார்.

உருவங்கள் அனைத்திற்கும் ஊடே உண்டு
ஒரு சக்தி என்ற உண்மை எவரும் ஏற்பர்
அருவமாய் உள்ள அதே கடவுள் என்றும்
அது இயக்கும் உருவமே 'நான்'
ஒருவனாய் உள்ள அந்த அருபமே 'நான்'
உருவனைத்தும் ஒரே தோற்றம் என்பான் ஞானி
இருவருமே சொல்கின்ற கருத்து ஒன்றே

என்று ஞான அறிவு பற்றி விளக்கம் தருகிறார். இவ்விளக்கத்தின் மூலம் மனிதன் தன்னைப்பற்றி அறிந்துகொண்டபின் அனைவரும் ஒன்றெனக் கருதவேண்டும் என்கிறார். மகரிஷியின் ஆன்மிகப் பார்வை ஏனைய பக்திநெறியில் காணப்படும் ஆன்றோர்களிலிருந்து சற்று வேறுபட்டதாகவே காணப்படுகிறது. தத்துவம் என்றாலும் தர்க்கம் என்றாலும் கருத்தளவில் மட்டும் நின்றுவிடக் கூடாது. அந்தச் சிந்தனை சமுதாயத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் பயன்பட வேண்டும் என்பது வேதாத்திரியின் அடிப்படைக் கோட்பாடாகும்.

தனிமனிதன் மன அமைதியடைவதன்மூலமே உலக அமைதி ஏற்படுகிறது. இக்கொள்கையை வலியுறுத்தி ஒவ்வொருவரும் தன்னைத்தான் அறிந்து, மெய்யுணர்வு பெற்று உலகத்திற்குத் தான்செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்று மகரிஷியின் மதக்கொள்கையைப் போதிக்கிறது. ஓருலக ஆட்சி, உயர் ஒழுக்கம் இவற்றையே உலக சமுதாய சேவா சங்கமும் போதிக்கிறது. இச்சேவா சங்கம் குழந்தைகளை மையமாக வைத்து அனைவரையும் ஒன்றிணைக்கிறது.

உலகக் குழந்தைகள்
எல்லோரும் ஓரினமாய்
இவர், உடையார் எனும் பேதம்
இல்லாமல் குருகுலத்தில்
பலகலைகளைப் பயின்று
பண்பால் உலகைத் திருத்தி
நலம் பெருக்கும் நன்னாளே
நாடனைத்தும் பொங்கும் நாள்

என வேதாத்திரி மகரிஷி குழந்தைகள்மூலம் உலக மேன்மையைக் காட்டுகிறார். அதேபோல் மனிதன் வாழும் உலகமும் அவர் உயிர் வாழத் தேவையான பொருட்களும் அனைவருக்கும் பொதுவானவை என்பதை மகரிஷி தமது அருளியல் கொள்கையின்மூலம் விளக்குகிறார்.

## எதிர்காலத்தில் மதநல்லிணக்கம்

மதங்களை ஏற்படுத்தியவர்கள் அறிவில் முழுமைபெற்று தெய்வநிலை உணர்ந்த பேரறிஞர்கள். அவர்கள் தெய்வநிலையை அகத்தவத்தால் தெளிவாக அறிந்தவர்கள். அந்தப் பேரறிவில் உலக மக்கள் அனைவரும் அன்போடும் அமைதியோடும் ஒற்றுமையோடும் வாழக் கண்ட வாழ்க்கைநெறிதான் அறம். மதங்களைப் பின்பற்றுவோர் களின் பெரும்பாலோர் தெய்வநிலையை உணராததால் அறநெறியையும் தெளிவாக உணரமுடியவில்லை.

பரிணாம விதியின்படி விலங்கினங்களின் பல கோடி தலைமுறைகள் மூலமே மனித உருவம் தோன்றியுள்ளது. மனித இனம் வாழத்தொடங்கி இக்காலம் வரையில் விலங்கினச் செயல்களான பிற உயிரைக் கொன்று அவற்றின் உடல்களை உணவாகக் கொண்டு வாழும் பழக்கப் பதிவுகளாகத் தொடங்குகின்றன. விலங்கினத்தின் உடல் பறித்து உண்டு வாழும் ஒரே செயல் மனித மனத்தில் பொருள், புகழ், அதிகாரம் புலனின்பம் எனும் நான்கு வகையில் பேராசையாக மாறியும், பெருகியும் தொடர்ந்தும் வந்து கொண்டிருக்கின்றன. கருத்துத்தொடராக வந்து கொண்டிருக்கும் விலங்கினச் செயல்களாக மனிதகுல வாழ்வில் பரவி பேராசை முதலான ஆறு குணங்களும் அவற்றின் விளைவுகளான ஐந்து பெரும்பழிச்செயல்களுமாகத் துன்பங்களைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன.

இதனால் மதத்தின் பெயரால் பல நாடுகளிலும் பகை, பிணக்கு, போர் இவை அடிக்கடி மனிதகுலத்தில் ஏற்படுகின்றன. இதனால் மதங்களின் உள்நோக்கமே மறைந்து கொண்டிருக்கின்றது. இவற்றை எல்லாம் மாற்றியமைக்க வேண்டும். இச்சிந்தனையை எதிர்காலச் சந்ததியர் களுக்கும் தெளிவோடு விளக்கவேண்டும். இதற்கு அறிவியல் முறையிலான பயிற்சியோ செயல்படுத்தும் கல்விமுறையோ இன்னும் உருவாகவில்லை என்கிறார் மகரிஷி.

இன்றைய காலத்திற்கு மதங்களில் போதிக்கப்பட்ட சட்டங்களும் வாழ்க்கைநெறிகளும் ஈடுகொடுக்க முடியாத நிலையில் மக்களின் பழக்கவழக்கங்களும் வாழ்க்கைநிலைகளும் மாறிவிட்டன. மதங்களில் வாழ்க்கை நலத்திற்கான அனைத்து நற்கருத்துகளும் முறைகளும் பொதிந்துள்ளன. இப்படிப் பொதிந்துள்ள போதிலும் மக்களுக்கு மதங்களின் மீதுள்ள நம்பிக்கை குறைந்துகொண்டே வருகிறது. சிறப்பாக அறிவியல் அறிவு பெற்ற இளைஞர்களில் சிலர் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றனர். அறிவியல் அறிவு வளர்ச்சியால் மக்களுக்குச் சிந்தனை ஆற்றல் மிகவும் கூடிவிட்டது. பயன்பாட்டுப் பொருட்கள் பல்லாயிரமாகப் பெருகிவிட்டது. பழங்கால மதச்சட்டங்கள் இக்காலத்தில் பல பொருத்தமற்று இருக்கின்றன. எனவே இக்குழப்பங்களிலிருந்து மனிதனைக் காப்பாற்ற இறைநிலையைப் புகுத்தி ஒரே மதமான பொதுமதத்தின் கொள்கையைப் புகுத்த மகரிஷி வேண்டுகோள் விடுக்கின்றார். இதற்கு ஏற்ற சிந்தனைப் பயிற்சியும் தெளிவும் வேண்டும்.'. எனவே ஒவ்வொருவரும் அறிவுக் கூர்மையால் நீண்ட காலமாக சமுதாயத்தில் படர்ந்துள்ள பாசிகளை விலக்கிக் கொள்ள வேண்டும் இந்த அறிவியல் காலத்தில் இன்றியமையாத தேவையாகும். இதற்காக முதலில் முதன்மையான இறைநிலையை உள்ளது உள்ளவாறே அறிந்து கொள்ள வேண்டும். காலத்திற்கு ஏற்ற திருத்தங்களை ஏற்றுக்கொள்ளும் மதங்களே சமயம் என்ற உயர்வோடு எதிர்காலத்தில் மக்களுக்கு நல்ல பயன் அளிக்கக் கூடியதாகவும் நிலைத்திருக்கக் கூடியதாகவும் அமையும் என்கிறார்.

எதிர்கால மதநல்லிணக்கம் வளரப் பாடுபடுபவர்கள் முதலில் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். 'நான்', 'எனது' என்பதை விடுத்து 'நாம்', 'எங்கள்' என்ற பொருள் பொதிந்த வார்த்தைகளைப் பேசி ஒன்றுபட்டால் எதிர்காலத்தில் அனைவரும் ஒன்றாக இணைவர் என்கிறார் மகரிஷி. இதற்கு அறிஞர்கள், மதவாதிகள், தத்துவவாதிகள், அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் எனப் பலரும் ஒன்று கூடி உலக சமாதான அமைப்பை நிறுவவேண்டும் என்கிறார். இத்தகைய புரட்சிகரமான திட்டம் நமக்குக் கொஞ்சம் துன்பம்தான். இருந்தாலும் அனைவரும் முயற்சி செய்தோமேயானால் எதிர்காலத்தில் எல்லோரும் உலகமதமாம் சகோதரத்துவத்தை அடைவர். சகோதரத்துவம் பெருகிவிட்டால் நமக்குள் நல்லிணக்கம் தோன்றிவிடும். நாட்டில் சமத்துவம் வளர்ந்தால் போட்டிகளும் போர்களும் அழிந்துவிடும்.

இனிவரும் இளையசமுதாயத்தினருக்கு ஒரு பாடமாகவும் அமையும். இப்பாடத்தைக் குழந்தைகளும் இளைஞர்களும் கல்வியின் மூலமாகவோ குடும்பத்தினர்மூலமாகவோ கற்றுக்கொண்டால் எதிர்காலத்தில் குறைகளும் குற்றங்களும் குறைந்துவிடும். உலகமெங்கும் வாழும் சமூக சேவா சங்கத்தின் மாணவ மாணவிகள் தங்கள் நோக்கத்தை அதாவது அனைவரையும் ஒன்றிணைக்கும் கொள்கையை உங்கள்மூலம் பரவ உலகம் எதிர்நோக்கி நிற்கின்றது. எனவே ஆங்காங்கே செயல்படும் சேவாசங்க மாணவர்களை இக்கோட்பாட்டை வெற்றியோடு நடத்த அழைக்கின்றார்.

## தாய்மார்களின் பொறுப்புகளில் மதநல்லிணக்கம்

மனித வாழ்க்கை போட்டியின் காரணமாக ஏற்பட்ட, ஏற்பட இருக்கும் தீமைகளை அடியோடு போக்கவேண்டுமென்றால் உலகம் முழுதும் ஒரே ஆட்சியின்கீழ் வரவேண்டும். அவ்வாட்சியும் குழந்தைகளைப் பொதுச்சொத்தாகக் கொள்ளும் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட வேண்டும் என்கிறார். இல்லாவிடில் இன்றுள்ள சாதி, மதபேத, தேச, இனமொழி பேதங்களும் தனி உடைமைப் பற்றும் நீங்கவே நீங்காது என்று தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றார். இச்சாதி மதபேதம் இருக்கும்வரை மனிதரின் வாழ்வில் அமைதி என்பதே இருக்காது. அதற்கு தாய்மார்கள் செய்ய வேண்டிய தியாகம் ஒன்றுண்டு என்பதைத் தன்கவிதைமூலம் விளக்குகிறார். அவரவர் குழந்தைகள்மீது பாசத்தை மட்டும் விட்டுவிட்டு உலகிலுள்ள குழந்தைகள் எல்லாமே நம்முடையது எனக் கொள்ள வேண்டும். இதனைத் தன் பாடல்மூலம் விளக்க முற்படுகிறார்.

> எடுத்துரைப்பேன் தாய்மார் கூட எதிர்காலத்தின்
> இருள் சூழ்ந்த வாழ்க்கைநிலை எண்ணிப்பார்க்க
> அடுத்தடுத்து வரும் யுத்தம் விளைக்கும் தீங்கு
> அணுகுண்டு பெருகுவதால் ஆகும் மாற்றம்
> தடுக்கவெனில் குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்கி
> தரணியெல்லாம் ஓராட்சி காண நீங்கள்
> விடுத்தால் அல்லாமல் மக்கள் பாசம் ஒன்றை
> வேறு வழியில்லை உங்கள் பொறுப்புணர்வீர்
>
> (மகரிஷி, உலக சமாதானம், ப. 160)

என்று தாய்மார்களின் பொறுப்புணர்ச்சியில் மதநல்லிணக்கத்தைத் தேடுகிறார். வாழ்க்கையில் சமஉரிமை, சமநிலை ஆகியவற்றைப் பெண்கள் பெறவேண்டுமெனில் குழந்தை வளர்ப்பின் பொறுப்பினை மீண்டும் வலியுறுத்துகிறார்.

எதிர்காலத்தில் மொழிகளில்கூட ஒரே மொழியைத்தான் மக்கள் பேசவும் கற்றுக்கொள்ளவும் வேண்டும் என மகரிஷி விரும்புகிறார். அம்மொழிக்கு உலகப் பொதுமொழி எனப் பெயர் சூட்டுங்கள் என்கிறார். மொழியைப் பற்றி மக்கள் தவறாகக் கருதுகின்றனர். பொருள் தெரிவதற்கு

மட்டும்தான் மொழிகள் உள்ளன. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்கும் பழகுவதற்கும் மொழி தேவையில்லை என்கிறார். இன்றைய காலக்கட்டத்தில் அறிவியலிலும் சரி, மக்களின் பழக்க வழக்கத்திலும் சரி, மாற்றங்கள் வந்தாலும் இன்னும் சில இடங்களில் சாதிச் சண்டையும் மதச்சண்டையும் மொழிச் சண்டையும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இப்படி நடப்பது கூட அறவே ஒழியவேண்டும் என்று அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி தம் படைப்புக்கள்வழி பல மதநல்லிணக்கக் கருத்துகளை வெளியிட்டுள்ளார். எனவே எதிர்காலத்தில் மக்கள் அனைவரும் ஒன்றே என்று எண்ணும் நாளே மகரிஷியின் இன்பநாளாகும்.

### பொதுஉடைமையில் இணக்கம்

சமுதாயத்திலுள்ள எல்லா மக்களுக்கும் சொத்தைச் சமமாகப் பங்கிட வேண்டும் என்பது பொதுவுடைமைக் கொள்கை எனத் தத்துவ வாதிகள் குறிப்பிடுவர். ஆனால் இதற்குப் பதிலாக ஒவ்வொரு தனிமனிதனையும் அவனைச் சமுதாயச் சொத்தாகக் கருதவேண்டும் என்று மகரிஷி குறிப்பிடுகிறார். இப்படி எண்ணும் இவரது எண்ணம் பல நூற்றாண்டுகள் ஆனாலும் ஆகலாம். ஆனால் இவரது எண்ணம் கண்டிப்பாக நிறைவேற வேண்டும் என்பதுதான் அனைவரின் நோக்கமாகும். இதற்கு மனப்பயிற்சியும் உடற்பசியும் தேவையாகும். இத்தேவையை எப்படி அறிவது என்பதை மகரிஷி நமக்குப் புலப்படுத்துகிறார்.

அலை அலையாய் இயங்கும் மனத்தடித்தளமே நிலைபொருள்
அது தெய்வம் கடல் போன்று அலை போன்றதே மனம்
நிலைபொருளாம் சிவம் நித்தியம் என்றோதிடும்
நெடுவெளி உன் அறிவாகும். உனது அலையே மனம்
கலையுணர்வால் மெய்ப்பொருளாம் கண்காணா ஒன்றினைக்
கண் காது மூக்கு முகம் குணம் உருவம் மயங்கி நாம்
சிக்கியுள்ளவரை உண்மைநிலை விளக்கம் கிட்டுமோ

(மனவளக்கலை, தொகுதி 3, மகரிஷி, ப. 108)

எனவே உண்மையைத் தெளிவாக உணராமையினால்தான் பொதுமைப் பண்பையோ சமயத் தொடர்பான சகிப்புத் தன்மையையோ நாம் அறிந்து கொள்ள முடிவதில்லை என்கிறார். எனவே பொதுவுடைமைப் பண்பில்தான் மதநல்லிணக்கத்தைக் காணமுடியும்.

இப்போதைய அதாவது இன்றைய உலகம் திருந்த என்ன வேண்டும் என்ற கேள்விக்கு நம் அருள்தந்தை வேதாத்திரி விளக்கம் தருகிறார். "சிந்தனையாற்றல் பெற்ற மக்கள் எல்லோரும் புரிந்துகொள்ளத் தக்கமுறையில் உயிர்நிலை விளக்கமும் மன இயக்க ஒழுக்கப் பயிற்சியும் தான்வேண்டும் என்கிறார். உலக நாடுகளனைத்தும் இணைந்த ஒருலக ஆட்சி வேண்டும் என்கிறார். மக்களை மயக்குநிலையில் ஆழ்த்தும் மதமோ சாதியோ இல்லா நிலைவேண்டும் என்கிறார்.

அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி. பிரம்மஞானப் பேரவாவினால் தம்படைப்புகளில் பகவத் கீதையின் சாரமும் நபிகள் தந்த திருக்குரானும் புனித பைபிளின் போதனையையும் கலந்து மனிதகுல வாழ்விற்குப் பயன்பெறும் ஒற்றுமைக் கருத்துகளைத் தந்திருக்கிறார். அவர் படைப்புகளில்கூட அனைத்து மதக் கருத்துகளைக் கையாண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**இயற்கைவழி நலம்காணல்**

உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனித சமுதாயத்தில் நாம் ஒவ்வொருவரும் ஓர் உறுப்பினரே ஆவர். ஒவ்வொரு தனிமனிதனிடத்தும் வியத்தகு முறையில் இயற்கை அமைப்பும் நியதியும் சிறந்து விளங்குகின்றன. ஆறாவது அறிவின் சிறப்பான பண்பாடு ஒழுக்கமும் ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஒவ்வொரு அளவில் ஓங்கி இருக்கிறது. நாம் வாழுகின்ற உலகமும் அது சுற்றிச்சுற்றி வந்து கொண்டேயிருக்கின்ற இடமாகிய மையத்தில் இயங்கும் சூரியனும் இதுபோன்ற கோடிக்கணக்கில் வான்வெளியில் மிதந்து உருண்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற சூரியன்களான நட்சத்திரங்களும் சேர்ந்த ஒரு கூட்டுக் காட்சியே பேரியக்க மண்டலமாகும். இப்பேரியக்க மண்டலத் தோற்றங்களில் இன்பதுன்ப உணர்வுகளை உடையவற்றைச் சீவ இனங்கள் என்று கூறுகிறோம். சீவ இனத்தில் விரும்பி நகரும் விரைவும், இன்ப துன்ப உணர்வுகளைப் புலன்களால் துய்ப்பதும் உயிரினத்தின் இயல்பாகும். இதற்கும் மேலாக உணர்ந்து விளைவறிந்து திட்டமிட்டுச் செயல்புரிந்து வாழும் ஆறாவது வளமாக உருமாற்றி அழகுபடுத்தி வாழும் ஆற்றல் பெற்றவன் மனிதன். இதனால் வாழ்வதற்குப் பொருட்கள் தேவையென்ற விருப்பத்தோடு மனித உறவும் நட்பும் இன்றையக் காலக்கட்டத்திற்குத் தேவைகளாகிவிட்டன.

இத்தேவைகளுக்காக ஒவ்வொரு தனிமனிதனும் போராட வேண்டிருக்கிறது. காரணம் பொருளாதார அடிப்படையால் நட்புறவு பாதிக்கப்படுகின்றது. அதேசமயம் நல்லிணக்க உறவுகளும் பாதிக்கப்படுகின்றன. வாழ்க்கையில் பணமில்லை என்றால் உறவுகள்கூட உதிரிகளாக விலகிப் போகின்றன. இயற்கை பேரியக்க மண்டலத் தோற்றங்களும், அவை ஒவ்வொரு பொருளிலும் கோள்களிலுமிருந்து தோன்றும் அனைத்தும் இயற்கையின் முதல் நிலையான தூய இறைவெளியிலிருந்து தோன்றியுள்ளன. அந்த வெளியிலிருந்து அணு முதல் அண்ட கோடிகளான உயிரினங்கள் அனைத்தும் பரிணாமம் என்ற இயற்கையின் சிறப்பாற்றலால் ஒன்றிலிருந்து மற்றொன்றாகத் தோன்றின. எனவே இயற்கை வளங்களை மனிதன் வாழ்வில் வளமாக மாற்றுகின்றபோது இயற்கையின் பரிணாமச் சிறப்பும் அதன் இயக்க நியதிகளும் அறிந்த அளவிலேதான் வாழ்வுக்கு நலம் பயப்பனவாக அமையமுடியும் என்கிறார் மகரிஷி.

இயற்கையின் இயல்பான பரிணாம ஆற்றலுக்கு மனிதன் விரும்பிச் செய்கின்ற செயல்கள் விரைவிலும் முறையிலும் முரண்பட்டால் மனிதனுக்குத் துன்பமும் இழப்பும்தான் விளையும். எனவே இறைநிலையை உணர்ந்து மதிப்பளித்து வாழவேண்டியது ஒவ்வொரு தனிமனிதனின் கடமையாகிறது. மேலும் தனிமனிதன் ஒவ்வொருவனும் உலக சமுதாயத்தில் ஓர் உறுப்பினன்தான். காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப சமுதாயத்தின் விரிவு வேறுபடலாம். குடும்பம், ஊர், நகரம், நாடு, கண்டம், உலகம் என்ற ஒவ்வொன்றும் மனித சமுதாயத்தின் எல்லைகளே. ஓர் எல்லைக்குட்பட்டவர்களுக்கு மற்றொரு எல்லைக்குட் பட்டவர்கள் ஒத்தும் உதவியும் வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால்தான் மதஇணக்கமும் வாழ்வில் அமைதியும் இனிமையும் அமையும் என்று அருள்தந்தை விளக்கமளிக்கின்றார். மனிதவாழ்வின் மேன்மைக்கும் வளத்திற்கும் இன்றியமையாத தேவைகள் இறையுணர்வு என்று முன்னர் குறிப்பிட்டிருந்தார். இவ்இறையுணர்வை மனிதன் மதித்து உணர்ந்து போற்றினால்தான் சக மக்களுடனான இணக்கம் தோன்றும் என்று கூறுகிறார். அதேசமயம் மக்கள் வாழவேண்டுமென்றால் இறை வழிபாட்டையும் அறநெறியையும் போதனை செய்துகொண்டே இருக்க வேண்டும் என்கிறார். இறைநிலையை அறிவியல் அறிவின்மூலம் மக்கள் விளங்கிக்கொள்ளுகின்ற காலம் வந்துவிட்டது.

எனவே மக்களில் சிந்தனையாற்றல் பெற்றவர்கள் அனைவரும் தெய்வம், உயிர், அறிவு, சீவகாந்தம் என்ற நான்கு மறைபொருட்களையும் தெளிவாக உணருகின்ற வகையில் எடுத்துச்செல்லும் வகையில் அருள்தந்தை மகரிஷியின் நல்லிணக்கக் கருத்துகள் அமைந்துள்ளன. இக்கருத்தை அனைத்து மக்களிடமும் கொண்டு செல்லும்வகையில் அவரது படைப்புகள்வழி காட்டப்பட்டுள்ளன. மேலும் அவர் கூறும் கருத்துகள் சமுதாய மக்களுக்குப் பயன்படும்வகையில் அமைந்துள்ளன. மதம், ஆன்மிகம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த எந்த ஒழுக்கநெறியும் சரி, நீதிநெறிக் கோட்பாடுகளும் சரி எல்லையற்ற மனிதத் தத்துவம் முழுவதையுமே தனது எல்லையாகக் கொண்டுள்ளது என்கிறார். இந்த எல்லை தனிமனிதனைக் கருத்தில் கொள்கிறது. சமுதாயம் என்பது தனிமனிதர்களின் சேர்க்கைதான். தனிமனிதனுக்கும் அவனது நிலையான உறவுகளுக்கும் இந்த நீதிநெறி பொருந்துமானால் சமுதாயத்திற்கும் பொருந்தும். ஆகவே மனிதகுலத்திற்கு என்றுமே ஆன்மிக மதம் அதாவது மக்களை இணைக்கும் மதம் அவசியமாக இருப்பதை நாம் விரும்புகிறோம். அதேசமயம் மதத்தை அறிவியல் வாயிலாக ஆராய்ச்சிக்குரியதாகக் கொண்டால் அது மனிதமனத்திற்குக் கிடைக்கக்கூடிய உயர்ந்த சிறந்த நலமான பயிற்சியாகவும் அமையும்.

**முன்னேறுவதற்கு மதநல்லிணக்கம் தேவை**

மனித மனத்தை முன்னேற்றுவதற்கான தூண்டு சக்திகளுள் மிகவும் சிறந்தது மதநல்லிணக்கமாகும். ஆன்மிகமும் இறையுணர்வும்

நமக்குத் தரும் சக்தியைப் போன்று வேறு எந்த ஒன்றும் தருவதில்லை. ஆன்மிக சக்திகள் எப்பொழுதும் அழிந்துவிடுவதில்லை. மனிதர்கள் நல்லவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் வாழவேண்டும் என்றால் இறைநிலையைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இயல்பாகப் பிறப்புரிமை உண்டு. அப்பிறப்புரிமையின் ஆற்றலைத் தருவதும் தூண்டுசக்தியாக இருப்பதும் மதநல்லிணக்கமே ஆகும். எதிர்கால மதத்தின் இலட்சியங்கள் உலகில் நல்லதாகவும் உன்னதமாகவும் இருக்கின்ற அனைத்தையும் தழுவியதாக இருக்க வேண்டும். அதேவேளையில் எதிர்காலத்தில் எல்லையற்ற மக்கள் ஒன்றுபடல் வேண்டும். அனைவரும் ஏற்றுக்கொள்ளும் தன்மை உடையவனவாக மதநல்லிணக்கம் உருவாக வேண்டும் என்று வேதாத்திரி மகரிஷி வேண்டுகோள் விடுக்கின்றார்.

உலக மக்களை வாழ்விக்க எழுந்த சிந்தனையே தத்துவமாகும். பால்படும் நெய்போல் மனிதனிடத்தில் மறைந்திருக்கும் இறைத் தன்மையை வெளிக்கொணர்வது தத்துவத்தின் பணியாகும். இதைத் தம் இறைச்சிந்தனைமூலம் மதநல்லிணக்கத்தின்மூலமாகவும் மானுட மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியவர் நம் அருள்தந்தை வேதாத்திரி அவர்கள். 'உண்மை' என்பது எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. அதைக்காண விழைவதில் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றனர். நாடு, மொழி, இனம், மதம், காலம் என்ற கட்டுப்பாடு அவர்களுக்கு இல்லை. இதைக் கடந்து உலகெங்கும் ஒன்றுபட்டு உணர்வு நிலையில் ஒன்றுபட வேண்டும். சொல்லும் முறையும் கடைப்பிடிக்கும் நெறியும் வேறுபடுகின்றதே தவிர அடிப்படைக் கருத்து ஒன்றுதான். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் மதநல்லிணக்கம் தரும் விளக்கம் ஆகும்.

சாதி சமயச் சண்டையை விடவேண்டும், விட்டவுடன் சோதி வடிவம் கண்டேன் என்கிறார் வள்ளலார். அதாவது இறைநிலையை அடைந்ததாகக் குறிப்பிடுகிறார். வள்ளலாரின் வழிவந்த மகரிஷியும் தன் உடலில் வள்ளலார் இருந்துகொண்டு இருத்தலால் மனிதநேயம் ஆன்மநேயம் போன்ற பண்புகளையும் சாதி சமய வேற்றுமைகளையும் களைவதற்கு அருள் காட்டினார் என்கிறார். அவர் வழிகாட்டுதலால் தன் படைப்புகள்மூலம் மதநல்லிணக்கத்தைப் பறைசாற்றினேன் என்கிறார். இவரது படைப்புகள்வழி மக்கள் மனிதநேயத்துடன் நடந்துகொள்ளப் பெரிதும் உதவிகரமாக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பிறருடைய கொள்கையை வெறுத்து ஒதுக்காத பண்புடைமை அக்கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்ற பொதுநோக்கு என்ற இரண்டினையும் மக்களுக்கு எதிர்காலத்தில் கற்பிக்கும் நிலையை உருவாக்க வேண்டும். மதக் காழ்ப்புணர்ச்சியால் மக்களை அச்சுறுத்தக் கூடாது. சொந்த நாட்டிலேயே ஒதுக்கப்பட்ட மக்களையும் வரவேற்றுப் புகலிடம் கொடுக்கும் பண்பும் வளர வேண்டும். தன் சொந்தச் சாதியினரால் வெறுத்து ஒதுக்கப்பட்டவரையும் அன்பினால் அரவணைத்துக் கொள்ளும்

மனப்பான்மையை மக்கள் பெற்றுவிட்டால் எதிர்காலத்தில் மகரிஷி விரும்பியதுபோல் ஒரே சாதி, ஒரே மதமாக மாறிவிடும்.

ஒன்றுபட்ட மத, சமய உணர்வு வெள்ளம், உலக சமய வயல்களிடையே சமரச நெறிப்பயிரைச் செழிப்படையச் செய்ய வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதுபோல் வேதாத்திரியும் மதச் சண்டை என்னும் போர்களத்தை மதநல்லிணக்கம் என்ற பயிரை வளர்த்து செழிப்படைய நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்கிறார். மத விகற்பங்களும் மதச்சண்டைகளும் அவற்றினின்று ஏற்பட்ட கொடிய பிடிவாதமும் இப்பூவுலகத்தை நாசம் செய்துவிடுகின்றன. இந்த அழகிய மண்ணுலகில் மதச்சண்டையால் கொடுஞ்செயல்கள் நடக்கின்றன. அதனால் மானிட உதிரத்தை எங்கும் பரவச்செய்து நாகரிக வாழ்க்கையை அழித்துவிடுகின்றன. எனவே இந்த மதபேதக் கொடிய பேய் மக்களைப் பிடிக்காதிருந்தால் இவ்அழகிய பூவுலகம் பேரெழில் கொண்ட உலகமாக மாறிவிடும். அதனால் மக்கள் அனைவரும் ஒரே உலகநியதியில் ஒன்றுபட்டு வாழ்வார்கள் என்பது உறுதி என அருள்தந்தை விளக்கமளிக்கிறார்.

தற்காலத்தில் மக்கட் சமுதாயத்தில் மன வளமும் தன்னம்பிக்கையும் குன்றிப் போயுள்ளன. மனவளமும் தன்னம்பிக்கையும் சமய உணர்வால் பேணி வளர்க்கப்பட்டுவிட்டால் மதநல்லிணக்கம் என்ற பயிரை யாராலும் அழித்துவிட முடியாது. மதநல்லிணக்க அறிக்கையை வெளியிடும் தத்துவஞானிகள் கூறுவது என்னவென்றால் உலக அமைதியும் நீதியும் தழைப்பதற்கு அனைத்து மதங்களின் ஒத்துழைப்பு வேண்டும் என்கின்றனர். அதேசமயம் மதத்தின் பெயரால் மற்றவர்களை அடக்கியாளக் கூடாது. யாரையும் புண்படுத்தக் கூடாது. மனித உயிர்களைக் கொல்லக்கூடாது. சித்திரவதையில் இறங்கக்கூடாது என்பதைத் தத்துவஞானிகளும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். எனவே நம் அருள் தந்தை மகரிஷி தம்படைப்புகளில் மத நல்லிணக்கத்தைக் காணும் மக்களை அறிவியல் கண்கொண்டு பார்க்கச் சொல்கிறார். எனவே அன்பு, கருணை, இறையுணர்வு போன்ற நியதிகளில் கொண்டுள்ள மதமே மக்கள் மதமாக மாறவேண்டும்.

### சமயமும் - அறிவியலும்

சமயத்திற்கும் அறிவியலுக்கும் உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறார். "சமய உணர்வற்ற அறிவியல் முடமாகும். அறிவியல் உணர்வற்ற சமயம் குருடாகும்" என அமெரிக்க ஞானி எமர்சன் குறிப்பிட்டதை இங்கு நினைவுகூர்கிறார் மகரிஷி. முதலில் ஆன்மிக அறிவியல் நோக்குகளைப் பயிலவேண்டும். சமய-அறிவியல் கூட்டிணைப்பைப் பற்றியும் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அறிவியல் என்பது உண்மையையும் ஒற்றுமையையும் கண்டறிவதேயாகும். பூரணமாகிய ஏகத்துவத்தைக் கண்டடைந்த உடனே அறிவியல் தனது

எல்லையை அடைந்து மேற்செல்லாது நின்றுவிடும். எந்த ஒரு பொருளிலிருந்து மற்றெல்லாப் பொருள்களும் ஆக்கப்படுகின்றனவோ அதனைக்கண்டு பின்னர் வேதியியல் முன்னேற்றமடைவதை ஒழித்து நின்றுவிடும். பேரண்ட இயக்கத்தை விளக்கி அணுவைப் புரிந்து கொண்டாலே எல்லா வலிமைகளும் தோன்றுவதற்கு இடமாகிவிடும்.

அறிவியலுக்கும் சமயத்திற்கும் மோதல் இல்லை. தத்துவ உண்மைகளைச் சமயம் ஆராய்கின்றது. வேதியியல் மற்றும் இயற்கை அறிவியல் பௌதிக உலகின் உண்மைகளை ஆராய்கின்றது. சமயத்தைக் கற்க விரும்பும் ஒருவன் படிக்கவேண்டியது அவனுடைய மனமே. இதனை மனவளக்கலையின்மூலம் விளக்குகிறார். அறிவியலும்-சமயமும் கருத்தொத்த கூட்டிணைப்பாக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் சமயப்பொறை நிலவும். எனவே அருள்தந்தை மகரிஷி தம்படைப்புகளில் ஆன்மிகத்தை அறிவியல் கண்கொண்டு காணும் நெறியைப் பகர்ந்திருப்பது சிறப்புடையதாகிறது.

தனிமனிதனும் சமுதாயக் கடமையும்

அமைதியான சமுதாயம் உருவாகவேண்டும் என்றால் நாட்டில் ஒருவர் கூட வேலையற்றவராக இருத்தல் கூடாது என்பது மகரிஷியின் கருத்தாகும். பசி என்பது அனைவருக்கும் பொதுவானதுதான். இப்பசியைப் போக்கப் பொருள் பெற மனிதன் விழைகின்றான். பொருள் பெற வாய்ப்பு இல்லை எனில் மனிதன் குற்றச்செயலில் ஈடுபடுகின்றான். அறிவியல் அறிவின் வளர்ச்சியும் அறிவியல் சாதனங்களும் பெருகியுள்ள இக்காலத்திற்கேற்ப மக்களிடம் நலமே பயக்கும் வாழ்க்கைப் பண்பாடு அமைய வேண்டும் என்றால் கல்வியும் தொழிலும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று மகரிஷி ஆசைப்படுகின்றார். இதனைத் தன்கவியால் மக்களுக்கு உணர்த்துகின்றார்.

உருவாகி உடல்வளர்ந்து வாழ்கின்றேன் என்
உடல் வளர்த்து அறிவூட்டி வாழ்வதற்கென்னை
ஒரு மனிதனாக்கி வைத்தும் இன்றும் கூட
உணவு உடை மற்றும் பல வசதி எல்லாம்
தருகின்ற மனித இனம் தனக்கு என்றன்
சக்திதனைப் பயன்படுத்துகின்றேன் என்ற
பெருநோக்கச் செய்கையாம் பற்றற்ற வாழ்க்கைப்
பேரறமே அறிஞனவன் சமுதாயக் கடமை என்கிறார்

(மனவளக்கலை, தொகுதி, ப. 239)

சமூகத்தில் ஓர் உறுப்பே தனிமனிதன் என்று அனைத்து மக்களும் உணர்ந்துகொண்டால் சமூகத்தில் கூட்டுறவு இன்பம் துன்பம் கிட்டும் என்கிறார். சரிசமமான இன்ப துன்பங்களை அனுபவிக்கும் சகிப்புண்டாகும் என்கிறார். அதேபோல் சமூகத்திற்கான அவசியமான செயல்கள் மட்டும் செய்தால் மனிதன் சுகமாக வாழலாம். அது

அல்லது மனிதன் சதி ஏதும் செய்யாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அமைந்துவிட்டால் சன்மார்க்க நெறியினிலே மனிதர் வாழ்வார் எனச் சமுதாயக் கடமைகளைப் பற்றி எடுத்துரைக்கின்றார். தனிமனிதனின் மன அமைதியிலிருந்துதான் குடும்பம், ஊர், நாடு, உலகம் என்ற பரந்த நிலையில் அமைதி நிலவுகிறது. உலக சமாதானம் என்ற எல்லைக்குப் போக வேண்டுமானால் முதலில் தன்னுடைய சமுதாயக் கடமையை ஒழுங்காகச் செய்ய வேண்டும். மனித இன வாழ்வில் குழப்பங்களும் தடைகளும் இருக்கின்றவரை மனிதஇன வாழ்வின் சமாதானம் இருப்பதில்லை. ஆட்சி அதிகாரத்தில் எளியவர் வலியவர்களுக்குப் பணிந்துபோவதால் ஏற்படும் குறுகிய கால சமாதானவே இன்று நிலவி வருவதைக் காணமுடிகிறது. உலகம் முழுவதும் சேர்ந்து ஒருங்கிணைந்த முறையில் நீடித்து நிலவும் சமாதானம்தான் மனிதனை ஒன்றுபடுத்தும் என்கிறார்.

அரசியல் தலைவர்களும், தொழில்துறைத் தலைவர்களும், மதத்தலைவர்களுமே ஒன்றுபட்டு உலக சமாதானத்தைக் கொண்டு வரமுடியும். மாறாக அவர்களுக்குள் சண்டைகளும் குழப்பங்களும்தான் ஏற்பட்டு வருகின்றன. எனவே மகரிஷி கூறியதுபோல மனிதன் மனிதனாக வாழ அன்பும் கருணையும் வேண்டும். அத்துடன் மனிதன் சமுதாயக் கடமைகளையும் செய்தல் வேண்டும். இப்படி அன்பும் கருணையும் இல்லா மனிதன்தான் மனிதருள் வேறுபாடு காண்கின்றான். மனிதருள் வேறுபாடு ஏன்? என்ற இந்தச் சிந்தனை எல்லா மக்களின் உள்ளத்திலும் கண்டிப்பாக எழும். சிலருக்கு அடிக்கடி எழுந்து கொண்டே இருக்கும். இந்தக் கேள்விக்கு மகரிஷி கூறும் பதில்கள் மனிதன் நமது கடமைகளைச் சரிவரசெய்து வந்தால் மனிதனுக்குள் வேறுபாடு இருக்காது என்கிறார். வினைப்பயனே ஒரு தேகம் கண்டாய் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கின்றனர். 'கரு' என்ற மூலதனத்தை வைத்துத்தான் நாம் அனைவரும் வாழத் தொடங்குகின்றோம். அப்படி இருக்கும் நிலையில் மனிதன் ஏன் வேறுபட வேண்டும் என்கிறார். எனவே மனிதன் மனிதனை மதித்து நடக்கவேண்டும் என்றால் முதலில் அவரவர் சமுதாயக் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும் என்கிறார்.

### அறிஞர்களின் கடமை

தனிமனிதன் கடமைபற்றி பேசிய மகரிஷி, அறிஞர்களின் கடமையையும் பேசுகிறார். இதனைத் தன்கவிமூலம் விளக்குகிறார்.

> ஐந்தொழுக்கப் பண்பாட்டை வாழ்வில் அமுலாக்க
> அறிஞர் குழுஆங்காங்கே அமைத்து மக்கட்கெல்லாம்
> சிந்தனையையூட்டி வாழ்வுசிறக்கத் தொண்டுசெய்வோம்
> சீர்திருத்தம் எப்போது மனிதவாழ்வில் வேண்டும்

எந்தெந்தக் காலத்தோஇடம், காலம், தேவை
இவையொப்பத் தோன்றியன எத்தனையோ செயல்கள்
அந்தச்செயல் அக்கருத்து இன்று சிந்தனைக்கோ
அனுபவத்திலோ துன்பம் அளிக்குமெனில் தவிர்ப்போ

(மனவளக்கலை, தொகுதி, ப. 40)

அதாவது மக்களுக்குச் சிந்தனையைத் தூண்ட வேண்டும் என்கிறார். எச்சிந்தனை எனில் மக்கள் அனைவரும் ஒன்றே என்று எண்ணும் சிந்தனையைக் குறிப்பிடுகிறார். அப்படி எண்ணக்கூடிய சீர்திருத்தத்தை அறிஞர்கள்தாம் உருவாக்க வேண்டும். இடம், கால மனித வாழ்க்கைக்கு வேறுபட்டதாக இருக்கக்கூடாது என்கிறார். இதனை அவர் விளக்கமளிக்கையில் காலத்தால் வேறுபட்டவர் களையோ இடத்தால் தள்ளி வைப்பவர்களையோ ஏளனம் செய்யாது. அவர்களை ஒன்றிணைத்துக்கொண்டால் போரில்லா பெருவாழ்வு நமக்கு அமையும் என்கின்றார்.

இறைவா நற்கர்மயோகம் உலக சமயமென்ற
எண்ணமதை என்னுளத்தே எழுப்பிவிட்டாய் அறிவேன்
உறைவாய் என்னுளத்தறிவாய் உனக்கு எனைத்தந்தேன்
ஒரு சிறிய தொண்டனாக எனையுலகுக் காக்கு
முறையாகத் தலைவர்களை அறிஞர்களை இணைத்து
முழுஅளவில் மனிதகுலம் உணர்ந்துஏற்கச் செய்வாய்
மறைவாக மாந்தருள்ளே அறிவாக உளநீ
மண்ணுலகில் மக்களிடம் பரவவிடல் வேண்டும்

(வேதாத்திரியம், ப. 11)

என்று அறிஞர்களின் கடமைகளையும் அதனால் மக்களை எப்படி ஒன்றுபடுத்தி அவர்கள் மனத்திலிருக்கும் மதபேதத்தைக் களைய வேண்டும் என்பதை ஆழமாகத் தம்பதிவாக முன்வைக்கிறார்.

இயற்கை என்பது தெய்வம். இது அனைவருக்கும் தெரிந்த உண்மைதான். எனவே இயற்கையான தெய்வத்துடன் ஒன்றும் மனிதன் இயற்கையாகப் படைக்கப்பட்ட மனிதர்களை மட்டும் ஏன் வேறுபடுத்திப் பார்க்கின்றான். அவர் மனிதனை மனிதன் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார். மனிதனுடைய ஐந்து புலன்களுக்கு எட்டுவன சில பொருட்களே. இந்நிலையைக் கடந்து மனித மனத்தின் ஆறாவது கட்டமான மறைபொருள் உணர்அறிவினைப் பெற வேண்டும். இந்த உணர்வினைப் பெறவைப்பது அறிஞர்களின் கடமையாகும். ஆதிமனிதன் தோன்றிய காலத்திலிருந்தே பிறவித்தொடர்கள் தொடர்கின்றன. அவை கோடிக்கணக்கான தலைமுறைகளாகத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. ஒரு தலைமுறையில் ஓரிடத்தில் மற்றவர்களுக்குக் கிடைக்காததை, உணர்ந்தவர்கள் உணராத அவர்களுக்கு அக்காட்சியைப் புரிய

வைக்கின்றனர். இதை உணர்ந்த அறிஞர்களும் ஞானிகளும் எடுத்துச் சொன்னதும் அவர்கள் நம்புவதற்கு இடம்கொடுப்பது இல்லை. இவ்வாறாகப் பொய்க்கதைகள் பல தெய்வத்தின் பெயரால் உலவி வருகின்றன. இந்தப் பொய்க்கருத்துகளுக்கு மனிதர்கள் இடம் கொடுப்பதைத்தான் அறிஞர்கள் ஆறாவது அறிவாகத் தூண்டுகின்றார்கள். இது இவர்களது கடமையாகும். கற்பனைக் கதைகள்மூலம் ஒரு கடவுளுக்குப் பதிலாகப் பல கடவுள்களைத் தேர்ந்தெடுக்கின்றோம். ஒரு பொதுமதத்திற்குப் பதிலாகப் பல மதங்களை நாடிச் செல்கின்றோம். எனவே மகரிஷி இந்த உண்மையை உணர்ந்து அறிஞர்களின் வாயிலாகப் பல கடமைகளை முன்வைக்கின்றார்.

### வாழ்க்கைக்குமூலதனம் ஒற்றுமை

மனிதகுலம் வாழவேண்டும் என்றால் முதலில் அவன் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். வாழ்க்கைக்குப் பொருள் தேவைப்படுகிறது. இதனால் ஒன்றுபட்ட மனம் பொருளுக்காக வாழ்க்கைக்காக வேறுபடுகின்றது. தனிமனிதனிடமிருந்து பொருள் பறிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றான். அக்காலத்தில்கூடக் கடல் கொள்ளைமூலமாகவும் போர்மூலமாகவும் பிறருடைய பொருளைக் கவர்ந்து அனுபவித்து வந்தார்கள். இக்கொள்கை தவறு என்பதை மகரிஷி சுட்டிக்காட்டுகின்றார்.

வாழ்க்கையினால் சிந்தனைக்கு மேலும், மேலும்
வளம்பெருகி விட்டதினி ஒன்று சேர்ந்து
வாழ்க்கையினைச் சிந்தனையால் வளப்படுத்தும்
வகைகளையே ஆராய்ந்து முயற்சியோடு
வாழ்க்கையிலே நிறைந்துள்ள துன்பம் போக்க
வந்திருக்கும் அனுபவங்கள் அனைத்தும் சேர்த்து
வாழ்க்கைக்கு மூலதன மாக்கிக் கொள்வோம்
வாழ்ந்திடுவோம் நம்மூலம் முடிவறிந்து
(மகரிஷி)

பொருள்துறையில் பணம் என்பது உழைப்பின் அடையாளம் (Token of labour is money) இயற்கை வளம் என்பது அனைவருக்கும் எளிதாகக் கிடைக்கின்றது. இது தவிர்த்துப் பொருளுக்காகச் சாதியைக் காட்டியும், இனத்தைக் காட்டியும் வாழ்வது தவறு. வாழ்க்கைக்கு மூலதனம் உண்மையான உழைப்பாகும். இதை ஏன் சொல்கிறார் எனில் மனிதன் "என் சாதி உயர்ந்தது. நீ தாழ்ந்தவன். உன்னிடம் உழைப்பது என்பது உன்னிடம் சம்பளம் பெறுவது என்பது எனக்குப் பெருத்த தலைகுனிவு" என்ற பார்வையில் உழைக்காது பிறர் உழைப்பைச் சுரண்டிவாழ்வதை உணர்ந்த நம் அருள் தந்தை உழைப்புதான் ஒருவனது வாழ்க்கைக்கு மூலதனம் என்கிறார். மாறாக மதநல்லிணக்கத்தை மறந்து, போராலும் வன்முறையாலும் வாழ்வதைக் கண்டிக்கிறார். அதனால்தான் போரில்லா நல்வாழ்வு

வேண்டும் என்கிறார்.

நிலத்துக்கடியில் விளையும் கனிமங்கள், உலோகங்கள் மற்றும் விலை மதிக்கத்தக்க பொருட்கள் போன்ற செல்வங்கள் அனைத்தும் சமுதாயப் பொதுநிதியாக (Social Security Fund) ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் போரில்லா சமுதாயம் உருவாகும். ஓர் மதம், ஓர் உலக ஆட்சி என்று அமைந்துவிட்டால் மக்கள் மற்றவர்களுடைய உழைப்பை உறிஞ்சமாட்டார்கள். இதற்கு வலிமைமிக்க ஒரு மன்றம் தேவைப்படுகிறது என்கிறார். அம்மன்றத்தில் உள்ளவர்கள் உலகிணைந்தவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அனைத்து மக்களுக்கும் நல்லது கிடைக்கும் என்கிறார். வேதாத்திரியத்தில் மகரிஷி ஐந்தாவதாக வாழ்க்கைநெறியாகச் சீர்செய்த பண்பாட்டை முன்வைக்கிறார். இப்பண்பாடு உலகப் பொதுவான பண்பாடாக விளங்குகிறது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் மனத்தால் வேறுபடக் கூடாது என்கிறார். முதலில் சமயத்தை ஒன்றுபடச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றார். ஓர் உலக ஆட்சியை நாம் அமைத்துவிட்டால் போர் அச்சம் அழிந்துவிடும் என்கிறார். போரழிந்தால் பார் முழுவதும் ஏழ்மைநிலை போய் பண்பாடு தழைக்கும் என்கிறார்.

பலநாட்டில் வாழ்கின்றோம்<br>
பண்பாடு காலத்தால் படர்க்கை எய்தி<br>
பரவி இனம் சாதி மதம் மொழி ஆட்சி<br>
இவைகளால் எல்லை கட்டி<br>
கலகங்கள் பொருள் புகழ் அதிகாரம்<br>
புலன் பற்றால் பெருக்கிக் கொண்டோம் (மகரிஷி)

அதாவது இன்று கணினி காலத்தில் வாழ்கின்றோம். இன்று ஒரு நிமிடம் நாம் சிந்தித்துப் பார்த்தோமானால், தேவையற்ற பழக்கத்தை மாற்றிக்கொண்டு விடலாம். அனைவரும் சமம் என்ற உண்மைநிலைக்கு வந்துவிடலாம். கல்வி நிலையங்கள் எவ்வளவு பெருகி வந்தபோதும் இன்னும் பல மதம் என்ற பேதம் உருவாகுவது சரியா? என்கின்றார். 'கல்வி' என்ற அதிகாரத்தை வைத்த தெய்வப் புலவர் ஒரு தனிமனிதனுக்கு வரையறை செய்யவில்லை. ஒரு நாட்டுக்கு மட்டும் கூறவில்லை. கல்வி அனைத்து மக்களுக்கும் தேவை என்கிறார். இதுதான் பொதுவுடைமை. அதுபோல் எல்லாவற்றையும் எல்லோரும் பெறுவதற்கு மகரிஷி பாடுபட்டிருப்பது அவர்தம் படைப்புகளின்வழி தெளிவாகின்றது.

உயிர்-தெய்வம்-மனிதம் என்ற இரண்டினிடத்தும் ஏற்படும் அன்பின் பிணைப்பு முதல் உபகரணமாகச் சொல்லப்படுகின்றது. மகரிஷியிடம் உயிர், கடவுள், உலகியல் ஒழுக்கநெறி, தவம், சிறந்த இலட்சியம் போன்ற உன்னதக் கொள்கைகள் நிரம்பியிருந்ததால்,

அவர் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் தன்மையில் தன் முயற்சியை எடுத்துள்ளார். மனிதன் செய்யும் குற்றங்களை மூன்றாகப் பிரிக்கலாம்.

1. அறியாமை
2. அலட்சியம்
3. உணர்ச்சிவயம்

இந்த மூன்று குற்றங்களினால் அவன் மனிதனை மனிதனாகப் பார்ப்பதில்லை. எனவே மனிதனை வேறுபடுத்திப் பார்க்கக் கற்றுக் கொள்கின்றான். அதனால் புறக்காரணங்களைத் தேடுகின்றான். அதனால் சாதி பேதங்களைக் காரணங்களாகக் காட்டி, மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்கின்றான். இதனால் சமயப் பூசல்களும் மதச்சண்டைகளும் எழுகின்றன. ஒருவருக்கு ஒருவர் உயர்த்தியும் தாழ்த்தியும் கொள்கின்றனர். எனவே மதநல்லிணக்கத்திற்குப் பதில் மதவேறுபாடுகள்தான் அதிகம் காணப்படுகின்றன. இவற்றைக் களைய முன்வந்தவர் அருள்தந்தை மகரிஷி ஆவார். எனவே மகரிஷியின் விருப்பத்தை உணர்ந்த மனிதகுலம் பிறர்நலம் காத்தும் பிற்கால நலன் கருதியும் எண்ணம் செயல் உணர்ந்து மதநல்லிணக்கத்தோடு வளர வேண்டும். இப்படி வாழ்வதால் பாதுகாப்பான வழியும் பிறக்கும்.

இந்தக் காலக்கட்டத்தில் மனிதமனம் ஆழ்ந்து உணர்ந்து கொள்ளக்கூடிய பேருண்மை ஒன்றுள்ளது. அதுதான் பொதுமதமாகும். ஓர் மதக்கொள்கையாகும்.

இத்தகைய உயர்சமயநெறி வகுத்து உள்ளேன்
இதுபொதுவாம் உலக அருள்நெறி சமயமாகும்
ஒத்து இது உலகெங்கும் வாழ்மக்கட்கெல்லாம்
ஒரே தெய்வம் சுத்தவெளிஉயர் அருட்பேராற்றல்
சுத்த சன்மார்க்கநெறி ஒத்துதவி வாழும்
தூயகாந்தத் தத்துவமே இதற்கு வேதமாகும்

(மனவளக்கலை, ப. 161)

என்று சமயத்தின் தத்துவத்தை விளக்குகின்றார். அத்துடன் மனிதனுக்கு ஒருவருக்கொருவர் உதவும் மனிதப் பண்பும் வேண்டும் என்கிறார்.

அமைதி அல்லது சம உணர்வு

நம் முன்னோர் வழங்கியுள்ள தத்துவக்கருத்து அமைதியுடன் இரு. இல்லை எனில் சம உணர்வைக் கடைப்பிடி என்பதாகும். எண்ணிறந்த பிறவிகளில் ஆற்றியுள்ள செயல்களின் பதிவாக விளைந்ததே மனிதப்பிறப்பு ஆகும். இப்பிறப்பிலாவது அனைவரையும் இணைத்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு முதலில்

இறைநிலையை உணர்ந்து அத்தோடு இன்புற்று வாழவேண்டும் என்பதே மனிதப் பிறவியின் நோக்கமாகும்.

வாழவேண்டும் என்றெண்ணி உலக மீது
வந்ததில்லை வினைத்தொடராய்ப் பிறந்துவிட்டோம்
வாழவேண்டும் உலகில் ஆயுள் உள்ளமட்டும்
வாழ்ந்தோர்கள் அனுபவத்தை தொடர்ந்து பற்றி
வாழ்வென்ற உரிமை எல்லார்க்குமுண்டு
வாழ்வோர்க்குச் சாதகமாய் வாழுமட்டும்
வாழஉள்ளோர் அனைவருமே ஒன்றுகூடி
வகுத்திடுவோம் ஒரு திட்டம்

(உலக சமாதானம், ப. 190)

அத்திட்டமே உலக சமாதானம் என்ற ஒரு உலக ஆட்சி என்கிறார். மனிதகுலம் வாழத்தொடங்கிய காலத்தில் கல்வி அறிவும் நூல் அறிவும் அவ்வளவாக இல்லை. அதனால் அக்காலத்தில் மனிதகுலத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. இந்நிலையில் அமைதி ஏற்படுவதற்குப் பதில் போர்களும் பூசல்களும் ஏற்பட்டன. ஆனால் இன்று அறிவியல் உலகமாக மாறிவிட்டது. கல்வியின் அறிவைப் பெற மக்கள் ஆர்வமுடன் உள்ளனர். அதனால் மதத்தைப் பற்றியும் மக்களைப் பற்றியும் அவர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். அச்சிந்தனையால் மனிதகுலம் ஒன்றே என்பதாகும். இதற்கு ஆக்கச் சக்தியாக மகரிஷி தம்படைப்பின் வழி மதநல்லிணக்கத்தைப் போதிக்கிறார். போதித்ததை ஏற்றுக்கொள்ளும்வகையில் மக்களுக்கு எடுத்துச்செல்லும் பாலமாக அவரது படைப்பு இருப்பதை நாம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

அருள்தந்தை மகரிஷி ஒரு சமூக அறிவியல் அறிஞர் என்று அடித்துக்கூற இடமுண்டு. இறைநிலை, தெய்வநிலை, மதக்கோட்பாடு, ஆலயவழிபாடு, சடங்குகள் எனப் பல நிலைகளில் அவர் மனித வாழ்வில் ஊடுருவி இருந்த உணர்வுகளைக் கண்டறிந்து அறிவியல் கண்கொண்டு மதக்கோட்பாட்டை நல்லிணக்கத்தைக் கண்டுபிடித்துக் கூறியுள்ளார். இது யாராலும் மறுக்கவோ மறக்கவோ முடியாத ஒன்றாகும்; இன்னொன்றையும் முன்வைக்கிறார். அனைத்து நெறிகளிலும் சிறந்தநெறி அன்புநெறி என்று கூறுகிறார். அழுக்காறு கொள்ளாதே, தன்னலம் தேடாதே, இழிவான சீற்றத்திற்கு இடம் தராதே, இப்படி நடந்துகொண்டால் அன்பு நம்மைத் தேடி வரும் என்கிறார்.

## தியானமும் மனமும்

மனத்தைக் கட்டுப்படுத்துவது என்பது இயலாத காரியம். ஆனால் மனத்தைக் கட்டுப்படுத்த தியானத்தால் முயற்சி செய்யலாம். மழை நீரின் வழியை மாற்றவேண்டுமானால் அதன் ஓட்டத்திற்கு மாற்றுவழி

ஒன்று கண்டுபிடித்தாக வேண்டும். நீர் முழுவதும் அதில் திரும்புமாறு செய்யவேண்டும். அதேபோல் தொடர்ந்து தியானம் செய்தால் மனம் ஒரே நிலையில் இருக்கும். மதத்தோடு தியானத்தையும் மனத்தையும்எப்படித் தொடர்புபடுத்த முடியும் என்ற வினாவைச் சிலர் எழுப்ப முடியும். மனம் ஒரேநிலையில் இயங்கினால்தான் மதநல்லிணக்கத்தில் ஈடுபடமுடியும். மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தால் இந்தமதம் சிறந்தது அந்தமதம் சிறந்தது என்று மதபேதத்தில் ஈடுபட்டு துன்பத்தில் மனிதன் சிக்கிக் கொள்கிறான். மனம் அமைதியுற்றபோது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போது மனிதநேயப் பண்பு நம்மிடையே மிகுந்து நிற்கும். அப்படி நிற்கும்போது எல்லோரும் ஒருவரே எனப் பார்க்கத்தோன்றும். கண்ணின் தன்மை பிறரைச் சாந்தமாகப் பார்ப்பதுதான். அப்படி மற்றவர்களைச் சாந்தமாகப் பார்க்கும்போது மனிதனை மனிதன் நேசிக்கக் கற்றுக்கொள்கிறான்; மதிக்கக் கற்றுக்கொள்கிறான்.

இப்படி 'மனத்தை' நேர்வழியில் உறுதியான வழியில் வைத்துக் கொள்ள வேண்டும். இதற்குத் தியானப்பயிற்சி வேண்டும். எப்பொழுது ஒருவன் தியானப்பயிற்சி எடுத்துக்கொண்டுவிட்டானோ அப்போதே அவன் மதநல்லிணக்கத்திற்கு இணங்கிவிட்டான் என்று உணரலாம். உருவ அளவில் மனத்துக்கு எல்லை கட்டிக்கொண்டு பல நாடுகளிலும் சிதறி வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இவர்கள் நாடு, தேசம், இனம், சாதி, மதம் என்னும் வேறுபாடுகளைக் கற்பித்துக்கொண்டு அதனால் வாழ்க்கையில் பலவிதமான துன்பங்களையும் அனுபவித்து வருகிறார்கள். இத்துன்பத்தைக் களைய வேண்டுமெனில் ஒன்றுபட்ட மனநிலை வேண்டும். மனம் ஒன்றுபடத் தியானப்பயிற்சி வேண்டும். தியானப் பயிற்சினால் மனமும் செயலும் ஒருங்கே அமையப் பெறுகின்றன. அதனால் ஒன்றே குலமாகவும் இனமாகவும் மதமாகவும் கருதுகிறான் என மகரிஷி மனத்திற்கு விளக்கமளிக்கின்றார். மனத்தூய்மை தவத்தினால் வரும்; தவத்தினால் மனம் ஒருமுகப்படும். தியானத்திற்கும் மனத்துக்கும் மகரிஷி மிகவும் முக்கியத்துவம் கொடுக்கின்றார். மனமும் தியானமும் நம்வரை தொடர்புபட்ட செய்தியாக இருந்தாலும் அதன் பரந்துபட்ட நிலைக்கு மனிதன் வருகின்றான். அதனால் மனிதன் மதத்தாலோ, சாதியாலோ பிரிக்கப்படுவதில்லை என்று தியானத்தின்மூலம் கோடிட்டுக் காட்டுகின்றார். இப்படித் தியானத்தில் மனிதன் ஈடுபடும்பொழுது அவனுக்குச் 'சினம்' வருவதில்லை. சினத்தால் இனவேறுபாடுகள்தான் வளரும். சினத்தால் மக்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளமாட்டார்கள். 'சினம்' உதட்டில் இருக்கலாம்; உள்ளத்தில் இருக்கக்கூடாது என்கிறார் மகரிஷி.

## சகோதரத்துவத்தில் மதநல்லிணக்கம்

சகோதரம் என்ற வார்த்தையைச் சக + உதிரம் என்று பிரிக்கலாம். ஒரே வயற்றிலிருந்து தோன்றியவர்கள் என்பதைக்

குறிக்கும். ஆனால் அவர்களுக்குள்ளே போட்டியும் பொறாமையும்தான் மிகுந்திருக்கின்றது. இந்நிலைக்குக் காரணம் ஏற்றத்தாழ்வுகள்தான் காரணம் என்கிறார். இந்தப் பூமியில் தோன்றியுள்ள தாவரங்கள் புழுப்பூச்சிகள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் தாயாக விளங்குவது பூமிதான். எல்லா உயிரினங்களும் வயிறார உண்ணும் அளவு உணவு உற்பத்தியைக் கொடுப்பதும் பூமிதான். துன்பமின்றி வாழ்வதற்கேற்ப தட்பவெப்ப நிலையை உருவாக்குவதும் பூமிதான். எல்லாவற்றுக்கும் தனித்தனியாக வாழ்வதற்குச் சுதந்திரத்தையும் கூட்டாக வாழ்வதற்கு கருணையையும் எந்த எதிர்பார்ப்பும் இன்றித் தருவதும் பூமிதான். இப்படி எந்த எதிர்பார்ப்புமே இல்லாமல் வழங்கும் பூமியில் பிறந்த மனிதன் மட்டும் ஏன் விலகி வாழக் கற்றுக்கொள்கிறான். தன் உடன் பிறந்த சகோதரனிடமே வேறுபட்டுப் போகின்றான். இந்நிலை மாறவேண்டும் என மகரிஷி விரும்புகிறார். மேலும் பூமியானது ஒரு வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் வாழ இடம்தருவதில்லை. ஓர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் இடம்தருவதில்லை. மாறாக அனைத்து உயிர்களுக்கும் இடம்தந்து உயிரினங்களை ஒன்றுபடுத்து கிறது. இந்த இயற்கை தரும் அறிவை மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும். மதபேதம் இல்லாது வாழ்வளிக்கும் பூமியைப்போல் மனிதன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இதனையே,

> **காக்கை குருவி எங்கள் சாதி**
> **நீர்கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
> **நோக்குமிடமெல்லாம் நாமின்றி வேறில்லை**
>
> (பாரதியார் கவிதைகள், ப. 83)

என்கிறார் பாரதியார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் தம்படைப்புகள்வழி மகரிஷி அடையாளம் காட்டியுள்ளார்.

இவற்றை எல்லாம் சிந்தித்து உணர்ந்து கொள்ளும்போது உலக மக்களோடு ஒத்து இணைந்து வாழ வேண்டும் என்ற மனநிலை இயல்பாக மனிதனுக்கு உருவாகின்றது. அப்படிப்பட்ட மனநிலையில் ஒருவன் உருவாகினால் அவன் நட்புநலம் காத்துச் சகோதர மனப்பான்மையில் வாழ்கின்ற சூழல் உருவாகும் என்கின்றார். உள்ளம் அழுதாலும் உதடுகள் சிரிக்கட்டும் என்பது பழமொழி. எனவே பிறர்மீது அன்பு செலுத்தும் நமது சகோதரத்துவ முகம் பிறர் மனத்தில் நிலைத்து நிற்கும் என்கிறார். உடல் முழுவதும் இரத்தம் ஓடிக் கொண்டிருந்தாலும் அதற்கு இயக்க மையமாக இருப்பது இதயம்தான். உடல் முழுவதும் காற்று ஓடிக்கொண்டிருந்தாலும் அதற்கு இயக்க மையம் நுரையீரல்தான். இதேபோன்று உயிருக்கும் இயக்க மையம் உண்டு. நமது உடலில் முதுகுத்தண்டின் அடிப்பாகத்திற்குச் சற்றுக் கீழே உட்புறமாக மிகச் செறிவாக அமைந்துள்ள விந்து நாதத்திரவம் உயிரியக்கத்திற்கு மைய ஆதாரமாகத் திகழ்கிறது. அதேபோல

மதநல்லிணக்கத்திற்கு மைய ஆதாரம் சகோதரத்துவம் என்று உணர வேண்டும் என்கிறார். இதனைத் தம் பாடல்வழியும் புலப்படுத்துகிறார்.

ஒன்றறிவோம் தேகசுகம் அறிவுசெல்வம்
: _ற்றார்ஊர் உலகம்அண்டம் சந்தர்ப்பங்கள்
என்றவைகள் பொருந்துவதற் கேற்றவாறு (மகரிஷி)

இவ்வாறு சகோதரத்துவ மனப்பான்மையை வளர்த்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். நட்புறவாய் ஒன்றுபடும் மாபெரும் சக்தி மதநல்லிணக்கம்தான். இந்த இணக்கத்தை உணர்ந்துகொண்டால் யாதொரு போரும் தீமையும் இருக்காது என்கின்றார். கோடிக்கணக்கான செல்கள் சேர்ந்த ஒரு தொகுப்பே நமது உடலாகும். இந்தச் செல்களை ஒன்றோடு ஒன்று இணைத்துக் கட்டுமானமாக வைப்பது நமது கடமை ஆகும். அதைப்போலவே உலகில் உள்ள பல மதங்களின் தொகுப்பே மக்களின் மனிதநேய மதமாகும். இம்மதத்தைப் பொதுமதமாகத் தம்கட்டுமானத்துக்குள் வைத்துப் பாதுகாக்கவேண்டும் என்கிறார்.

பக்திமார்க்கத்தில் நல்லிணக்கம்

மனிதனுக்கு இப்பக்தி மார்க்கம் தேவையான ஒன்றாகும். எல்லாவற்றையும் இப்பக்தி மார்க்கத்தில் இணைத்துப் பார்த்தால் இந்த அறிவியல் உலகில் அனைத்து வகையான கடவுள்களும் ஒன்றுதான் என்ற அடிப்படைக்கு வரமுடியும். எந்தக் கடவுளும் எந்த மதமும் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறுபட்டதல்ல; முரண்பட்டதும் அல்ல. எல்லாம் ஒன்றே என்கிறார் மகரிஷி. இது எப்படிச் சாத்தியப்படும்? என்ற கேள்விகள் எழுமேயானால் அதற்கும் மகரிஷி பதில் தர முற்படுகிறார். யார் கடவுளை வணங்கினாலும் தன்னுடைய எண்ணத்தைத்தான் வணங்குகிறானே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதேபோல் ஒவ்வொரு மனிதனும் மனத்தைத்தான் வேண்டுகிறானே தவிர வேறு ஒன்றும் இல்லை என்கிறார்.

கடவுளை வணங்கும்போது கருத்தினை உற்றுப்பார் நீ
கடவுளாய்க் கருத்தே நிற்கும் காட்சியைக் காண்பாய்

என்று பல கடவுள் பழக்கத்தை வேண்டாம் என்கிறார். எனவே யார் எந்தக் கடவுளை வணங்கினாலும் சிறிதுநேரம் கழித்துப் பார்த்தால் எது நிற்கிறது என்றால் அவரவர் மனமேதான் அந்தந்தக் கடவுள் வடிவமாகத் தெரிகின்றது என்கிறார். விக்கிரகத்தையோ சக்தியையோ, அண்டகாரமாக இருக்கக் கூடியதையோ வேறுபொருளையோ எதனையும் கடவுள் என்று வணங்கினாலும் அந்த வடிவம் எடுப்பது நம் மனம்தான் என்கிறார். எனவே உலகத்தில் உள்ள எந்த மதத்திலேயும் கடவுளைப் பற்றிச் சொல்லியிருந்த போதிலும் அவர்களும் மனத்தைத்தான் வணங்கி இருக்கிறார்கள் என்பது

தெரியும். மனத்தின் சக்தியை உணரும்போது எல்லாம் வல்ல இறை சக்தியே ஊடுருவி இயங்கிக்கொண்டு இருப்பதை மதநல்லிணக்கத்தில் உணர முடிகிறது.

முடிவுரை

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அருளிய சிறந்த படைப்புகளான அவரது நூல்களில் மதநல்லிணக்கம் பற்றி ஆராய்ந்து பார்த்தோமேயானால் பல செய்திகள் நமக்குப் புலப்படுகின்றன. அறிவியல் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு போகின்றது. மக்கள் எண்ணிக்கை அச்சம் தரும் அளவுக்கு உலகில் பெருகிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கைப் பொருள்களின் எண்ணிக்கை மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போகிறது. அரசியல் பொருளாதாரத் துறைகளில் குழப்பமும் சிக்கலும் மிகுந்து வருகின்றன. தனிமனிதன் வாழ்வில் அச்சமே சூழ்ந்திருக்கிறது. எந்த நாட்டிலும் சமுதாயத்திலும் அமைதி என்பதில்லை. பல துறைகளிலும் குழப்பம். இந்தக் குழப்பமான சூழ்நிலையில் சிந்தனை ஆற்றல் உடையவர்கள் சமுதாய நல நோக்கம் உள்ள தலைவர்கள் ஆன்மிக வழிநின்று வாழ்ந்துவரும் நல்லோர்கள் மனித குலத்தின் வாழ்க்கைநிலை உணர்ந்த மதத்தலைவர்கள் அனைவரும் சிந்தித்துக் கொண்டு இருக்கும் தருணத்தில் அருள்தந்தை இந்தக் குழப்பத்திற்குக் காரணம் மதபேதம் என்பதை நன்கு தெரிந்து அதனின்றும் விடுபட்டு அமைதியான வாழ்வைத்தரத் தம்படைப்புகள்வழி முயற்சித்து வருகிறார். ஆன்மிகப் பார்வையோடு அறிவியல் பார்வையாலும் தம் கருத்துகளைப் பதிய வைத்துள்ளார்.

இவரது படைப்பின்வழி போரில்லா நல்லுலகத்தைக் காண முடிகிறது. பொருளாதாரத் துறையில் சமநீதியைப் பார்க்கமுடிகிறது. நேர்மையான ஓர் உலக ஆட்சியைக் காணமுடிகிறது. சீர் செய்த பண்பாட்டைப் பார்க்க முடிகின்றது. பல மதங்கள் பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மையான பொதுமதத்தைத் தேர்ந்திடும் தன்மையை இவர் படைப்பின்வழி காணமுடிகிறது. தத்துவஞானி மகரிஷி ஒரு சமூக அறிவியலறிஞர் என உறுதியாகக் கூறலாம். இறைநிலை, தெய்வநிலை மதக்கோட்பாடு, ஆலய வழிபாடு சடங்குகள் எனப் பல நிலைகளில் அவர் மனிதவாழ்வில் ஊடுருவி இருந்த வழிபாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை அறிவியல் கண்கொண்டு பார்த்து மதநல்லிணக்கத்தைப் பரப்பியதை யாராலும் எவராலும் மறக்கவோ மறுக்கவோ முடியாத ஒன்றாகும்.

உள்ளத்தின் அமைதியைப் பொருத்தே உலகத்தின் அமைதியும் அமைகின்றது. மனித இனத்தின் இலட்சிய வாழ்வையும் கடமைகளையும் உணர்த்தி அதன்மூலம் மக்கள் மதநல்லிணக்கத்தை வளர்த்துக்கொண்ட முறையையும் மகரிஷி தம்நூல்வழி மக்களுக்கு

உணர்த்தியுள்ளார். உலக மக்கள் வாழ்வில் அன்பும் அறமும் அமைதியும் ஓங்கத் தம் அரிய படைப்புகளின்வழி எடுத்தியம்பியுள்ளார். உலக சமாதானம் குறித்துப் பேசுபவர்கள் சிந்திப்பவர்கள் அருள்தந்தை மகரிஷியின் படைப்புகளைப் பற்றி அறிந்துகொண்டாலே நல்லதோர் இணக்கத்தை வளர்த்துக் கொள்வார்கள். இறையன்பில் மதநல்லிணக்கம் பற்றிப் பேசியுள்ளார். அன்பும் கருணையும் வேண்டுமென்பதற்காக மதநல்லிணக்கப் பண்பை வளர்த்து வருகின்றார். அறிவியலும் ஆன்மிகமும் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்துவரும் நாளில் மகரிஷி தன்தொண்டுள்ளத்தோடு அனைத்து மக்களையும் ஒரே கண்ணோட்டத்தில் இணைக்கும் பாலமாக இருந்து வந்துள்ளார்.

இவர் படைப்பின்வழி எல்லாச் சமயத் தலைவர்களும் ஒன்று கூடி மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் ஒரு தெளிவான பொதுக்கருத்தை முன்வைக்கிறார். அப்பொதுக்கருத்து ஒரே மதம் என்ற மதநல்லிணக்கக் கொள்கையாகும். இத்தகைய உயர் சமயநெறி வகுத்து உலகப்பொதுவாம் அருள்நெறி சமயத்தை நமக்கு இனம் காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது. உருவங்கள் வேறாக இருந்தாலும் உள்ளங்களை ஒன்றாக இணைக்கும் தன்மையைத் தனது ஞானக் களஞ்சியத்தில் விளக்கமாகத் தந்திருப்பது மக்களுக்குப் பயனுள்ளதாகும். வளர்ந்துவரும் அறிவியலைப் பயன்படுத்தி வாழ்க்கைக்குத் தேவையான மதபோதனைகளை எடுத்துகாட்டியவிதம் பாராட்டுக்குரியதாகும். எனவே மேற்கூறிய மகரிஷியின் படைப்புக்களில் உள்ள மதநல்லிணக்கக் கொள்கைகளைப் பின்பற்றி நடப்போமாக.

வாழ்க வளமுடன்

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113

| அண்மை வெளியீடுகள் | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு | 160.00 |
| 2. | தொல்காப்பிய உத்திகள் | 60.00 |
| 3. | திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள் | 165.00 |
| 4. | தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம், அறிவியல், சமூகம் | 70.00 |
| 5. | கிறித்தவக் காப்பியங்கள் | 225.00 |
| 6. | தமிழ் நாளிதழ்களின் மொழிநடை | 70.00 |
| 7. | சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும் | 50.00 |
| 8. | குலோத்துங்கனின் கவிதை வளம் | 60.00 |
| 9. | தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து) | 40.00 |
| 10. | தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள் | 50.00 |
| 11. | அறிவியல் பார்வையில் வேதாத்திரிய உடல்நலக் கொள்கைகள் | 60.00 |
| 12. | பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு | 65.00 |
| 13. | பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மனிதவள மேம்பாடும் | 50.00 |
| 14. | மேலைநாட்டறிஞர்களின் தமிழ்த் தொண்டு | 175.00 |
| 15. | பெரியார் என்னும் பேரொளி | 60.00 |
| 16. | சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு) | 70.00 |
| 17. | புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம் | 100.00 |
| 18. | உலகத் தமிழியல் ஆய்வுகள் (தொகுதி 1) | 450.00 |
| 19. | செவ்விலக்கியச் சாரம் | 70.00 |
| 20. | வீரமாமுனிவரின் சொல்லிலக்கணம் | 50.00 |

வெ.எண் : 764

**வேதாத்திரி மகரிசியும் மதநல்லிணக்கமும்**

விலை : ₹ 45.00



9788192533944